ஏ.என். சிவராமனின்

பத்திரிகை உலகம்

பொன். தனசேகரன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

ஏ.என். சிவராமனின் பத்திரிகை உலகம்

பொன். தனசேகரன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
இரண்டாவது முதன்மைச் சாலை
மைய்ப் பல்தொழில் நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113

இதழாளர் சி.பா. ஆதித்தனார் அறக்கட்டளைச் சொற்பொழிவு
அறக்கட்டளை நிறுவியோர் :
சி.பா. ஆதித்தனார் கல்வி நிறுவனம்
வரிசை எண் : 6 நாள்: 10-11-2005

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	**A.N. Sivaramanin Pathirikai Ulagam**
Author	:	Pon. Thanasekaran Journalist Chennai
General Editor	:	Dr. M. Valarmathi Research Assistant International Institute of Tamil Studies C.I.T. Campus, Chennai 600 113
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus, Taramani, Chennai - 600 113. Phone : 22542992
Publication No	:	552
Language	:	Tamil
Edition	:	First
Date of Publication	:	2005
Paper Used	:	18.6 kg TNPL Map litho
Size of the Book	:	1/8 Demy
Printing type Used	:	11 points
No. of Pages	:	viii + 96
No. of Copies	:	1200
Price	:	Rs.30/- (Rupees Thirty only)
Printing	:	Venkateswara Offset Press Aziz Mulk Street, Chennai - 6
Subject	:	Journalism

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

அணிந்துரை

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் அதன் இடைக்காலக் கட்டத்திலும் தமிழில் தொடங்கிய பத்திரிகைகளும் இதழ்களும் வரலாற்றுப் புகழ்மிக்கவையாகும். இந்த வரிசையில் இன்றும் மக்களிடையே வலம் வரும் முன்னணித் தமிழ் நாளிதழ்களுள் ஒன்றாகிய தினமணியின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். பத்திரிகையின் வரலாற்றுடன் பத்திரிகையாளரின் வரலாறும் இரண்டறக் கலந்ததாகும். தினமணியின் நீண்ட நெடிய வரலாற்றுக்கும் புகழுக்கும் உரியவர் அதன் ஆசிரியராக இருந்து பணியாற்றிய ஏ.என். சிவராமன் ஆவார். இவருடைய அனுபவங்களைத் தனித்து அறிந்து கொள்ள ஏதுவாக நூல்கள் எதுவும் இதுவரை வெளிவரவில்லை. அவரைப் பற்றிய செய்திகளை ஒருங்கே அறிந்து கொள்ளும் வகையில் அவரை நன்கு அறிந்த தினமணி நாளிதழில் துணை ஆசிரியராகவும் முதுநிலைச் செய்தியாளராகவும் பணியாற்றி வரும் திரு பொன். தனசேகரன் இந்நூலை வழங்கியுள்ளது சிறப்புக்கு உரியதாகும். எளிய மனிதர்களிடையே பரவலாகப் பத்திரிகை படிக்கும் பழக்கத்தினையும் தமிழுணர்வையும் செய்திகளை அறியும் ஆர்வத்தினையும் உருவாக்கிய பெருந்தகை தினத்தந்தி நிறுவனர் தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் அவர்களின் பெயரால் அமைந்த இந்த அறக்கட்டளைக்குத் தினமணி ஆசிரியர் ஏ.என். சிவராமன் அவர்களைப் பற்றி அதில் பணியாற்றும் திரு பொன். தனசேகரன் சொற்பொழிவாற்றி இந்நூலை வழங்கியுள்ளமை தனிப்பெரும் சிறப்பிற்கும் பெருமைக்கும் உரியதாகும்.

இந்நூலில் ஏ.என். சிவராமன் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு, அவர் தினமணியின் ஆசிரியரான அனுபவம், வெளிநாட்டு அனுபவம், அவருடைய எழுத்தாற்றல், சிந்தனைத் திறன், அவர் எழுதிய நூல்கள் ஆகியவற்றைப் பற்றித் திரு பொன். தனசேகரன் பெரிதும் முயன்று அரிய தகவல்களை ஒருங்கே திரட்டி நூலாக வழங்கியுள்ளார். அவருடைய இந்த நன்முயற்சியைப் பெரிதும் பாராட்டி வாழ்த்துகிறேன். இந்நூல் வெளிவரப் பெரிதும் துணைநின்ற இவ் அறக்கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் மு. வளர்மதிக்கு என் பாராட்டுகளும் வாழ்த்துகளும் உரியன.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திருமிகு சி.வி. சண்முகம் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு-மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் முனைவர் பு.ஏ. இராமையா, இ.ஆ.ப., அவர்களுக்கும், சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன், இ.ஆ.ப., அவர்களுக்கும் என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலை அழகுற அச்சிட்டுத்தந்த வெங்கடேஸ்வரா அச்சகத்தார்க்கும் பாராட்டுகள்.

சென்னை
20-10-2005

இயக்குநர்

முன்னுரை

அச்சு எழுத்து ஊடகத்தைத் தினத்தந்தி நாளிதழ் மூலம் சாமானிய மக்களிடம் எடுத்துச் சென்ற பெருமை சி.பா. ஆதித்தனாரையே சாரும். நல்ல வருவாய் தரக்கூடிய பாரிஸ்டர் தொழிலை விட்டு விட்டுத் தமிழ்ப் பத்திரிகை நடத்துவதற்கு முன்வந்தவர் அவர். சென்னையிலிருந்தே பெரும்பாலான நாளிதழ்கள் வந்த காலகட்டத்தில் மதுரையில் நாளிதழைத் தொடங்கி அதை வெற்றிகரமாக நடத்திக் காட்டியவர். மதுரையில் 1942இல் 'தந்தி' பத்திரிகையை ஆதித்தனார் தொடங்கியபோது, சென்னைக்கு வெளியே பத்திரிகையைத் தொடங்கி நடத்த முற்பட்ட ஆதித்தனாரை அப்போதே பாராட்டி எழுதியவர் தினமணியின் முதல் ஆசிரியர் டி.எஸ். சொக்கலிங்கம். சாமானிய மக்களுக்குப் புரியும் வகையில் எளிய தமிழில் செய்திகளைத் தந்தவர் ஆதித்தனார். பத்திரிகைத் தமிழ் நடைக்கு அவரது பங்களிப்பு முக்கியமானது. அவரது பெயரில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ள அறக்கட்டளையின் சார்பில் 'ஏ.என். சிவராமனின் பத்திரிகை உலகம்' என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்ந்த வாய்ப்பு அளித்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் சா. கிருட்டினமூர்த்திக்கு எனது மனமார்ந்த நன்றி உரித்தாகும். இதன் மூலம், ஏ.என். சிவராமன் எழுதிய பல கட்டுரைகளையும் நூல்களையும் படித்துப் பார்க்கும் வாய்ப்புடன் இந்த அறக்கட்டளைச் சொற்பொழிவுக்கான ஆய்வுக் கட்டுரையையும் தயாரிக்க முடிந்தது.

ஏ.என். சிவராமன், தினமணி ஆசிரியராக இருந்தபோதே நான் தினமணியில் நிருபராகப் பணியில் சேர்ந்தபோதிலும்கூட, அப்போது அவருடன் நேரடியாகப் பழகும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. அவர் ஓய்வு பெற்ற பிறகு, 'தினமணி சுதந்திரப் பொன்விழா மலருக்குக் கட்டுரை எழுதுவதற்காகத் தினமணி அலுவலகத்துக்குச் சில வாரங்கள் வந்து சென்றார். அப்போது அவரிடம் நேரடியாகப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. வயது வித்தியாசம் பாராமல் பழகும் எளிமை அவருடையது. மூக்குப் பொடி டப்பாவும் கைத்தடியும் அவரை இணை பிரியாது இருந்ததுபோல, சாதனையாளராகத் திகழ்ந்ததற்கு அவரது இடைவிடாத

அறிவுத் தேடலும் கடும் உழைப்பும் ஆகும். சிறிய விஷயங்களைப் பற்றித் தெளிவு பெறுவதற்குகூட முயன்று பல நூல்களைத் தேடிப்பிடித்துப் படிக்கும் பாங்கு அவருடயது. ஆங்கிலம் தெரிந்தவர்களுக்குக் கிடைக்கும் அறிவுச்செல்வங்கள்,ஆங்கிலம்தெரியாமல் தமிழ் மட்டுமே தெரிந்த தமிழ் வாசகர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று முனைந்து செயல்பட்டவர். இந்திய விடுதலைக்கு முன்பும் இந்திய விடுதலைக்குப் பின்பும் பத்திரிகையுலகில் குறிப்பிடத்தக்க சக்தியாக விளங்கியவர். அவரிடம் இன்றைய பத்திரிகையாளர்கள் கற்றுக் கொள்வதற்கு ஏராளமான செய்திகள் உள்ளன.

அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலகட்டத்தில் ஆயிரக் கணக்கான கட்டுரைகளை எழுதிக் குவித்த அவரது பத்திரிகையுலகச் சாதனைகளில் ஆங்காங்கே சில அம்சங்கள் மட்டுமே இந்நூலில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. அவரது சில கட்டுரைகளில் கூறப்படும் கருத்துகளில் மாறுபாடு கொண்டவர்கள் இருக்கலாம். ஆனால், எப்பிரச்சினை குறித்தும் அவர் என்ன கூறுகிறார் என்று மற்றவர்களை எதிர்பார்க்க வைத்துப் படிக்க வைத்தவர் அவர் என்பதை மறுக்க முடியாது. ஏ.என். சிவராமனின் கருத்துலகம் குறித்த சர்ச்சைகள் தனியே விரிவாக ஆராயப்பட வேண்டும். ஏ.என். சிவராமன் போன்ற சென்ற தலைமுறைப் பத்திரிகையாளர்கள் இத்தலைமுறையினருக்கு அறிமுகம் செய்யப்படவேண்டும். அதற்கேற்ற வகையிலேயே இந்நூல் அவரது பத்திரிகையுலகம் பற்றிய அறிமுக நூலாக உருவெடுத்துள்ளது. அவரது எழுத்துகளிலிருந்து இடம் பெற்றுள்ள மேற்கோள்கள் அவரது ஆளுமையைப் புரிந்து கொள்ள உதவும்.

தினமணி பற்றிய சில ஆய்வேடுகளும் சில நூல்களும் இந்நூலை எழுதுவதற்கு உதவியாக இருந்துள்ளன. ஏ.என். சிவராமன் எழுதிய சில நூல்களைத் தந்துதவிய பத்திரிகையாளர் மாலன், கலைமகள் ஆசிரியர் கீழாம்பூர் சங்கரசுப்பிரமணியன், நண்பர்கள் ராயப்பா, எஸ். சிவகுமார், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன ஆராய்ச்சி உதவியாளர் மு. வளர்மதி ஆகியோருக்கும் பழைய நூல்களையும் இதழ்களையும் பார்க்க உதவியாக இருந்த மறைமலை அடிகள் நூலகம், இந்தியன் எக்ஸ்பிரஸ் நூலகம் ஆகியவற்றின் நூலகர்களுக்கும் எனது நன்றி.

சென்னை

7-11-05

பொன். தனசேகரன்

பொருளடக்கம்

வாழ்க்கைக் குறிப்பு	1
ஏ.என். சிவராமனின் பத்திரிகை உலகம்	8
பின்னிணைப்பு	88

நூலாசிரியரைப் பற்றி

இந்நூலாசிரியர் தமிழ்ப் பத்திரிகையாளர். 'தினசரி' நாளிதழில் துணையாசிரியராகவும் 'தினமணி' நாளிதழில் முதுநிலைச் செய்தியாளராகவும் பணியாற்றியவர். தற்போது எக்ஸ்பிரஸ் நெட் ஓர்க் கல்வி இணையத் தளத்தின் ஆசிரியர் மற்றும் தினமணி இணையத் தளத்தின் பொறுப்பாளர். 'புகையும் காலம்' என்ற தலைப்பில் இவரது கவிதைகள் நூலாக வெளியாகியுள்ளன. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இதழியல் தொடர்பான சில தொகுப்பு நூல்களில் இவரது கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. தினமணியின் முதல் ஆசிரியர் டி.எஸ். சொக்கலிங்கம் பற்றிய இவரது நூலை, இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் சாகித்திய அகாதெமி சமீபத்தில் வெளியிட்டுள்ளது. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் சார்பில் அங்குள்ள மாணவர்களுக்குச் செய்தி எழுதுவது பற்றிய பயிற்சி வகுப்புகளை நடத்தியவர். இதழியல் தொடர்பான வரலாறுகளிலும் ஆய்வுகளிலும் ஆர்வம் கொண்டவர்.



ஏ.என். சிவராமன்

ஏ.என். சிவராமன் வாழ்க்கைக் குறிப்பு

1904 – 2001

தினமணி பத்திரிகையின் முன்னாள் ஆசிரியரும் சுதந்திரப் போராட்ட வீரருமான ஏ.என். சிவராமன் என்று அழைக்கப்படும் ஆம்பூர் நாணுவையர் சிவராமன் கேரள மாநிலம் எர்ணாகுளத்தில் 1904-ஆம் ஆண்டு மார்ச் 1-ஆம் தேதி பிறந்தார். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கீழாம்பூர் இவரது சொந்த ஊர். எர்ணாகுளத்தில் நான்கு வயதில் மலையாள மொழி தொடக்கப் பள்ளியில் படித்தார். ஆறு வயது முதல் எர்ணாகுளம் செயின்ட் ஆல்பர்ட் உயர்நிலைப் பள்ளியில் மூன்று ஆண்டுகள் ஆங்கில வழிக் கல்வி முறையில் படித்தார். பின்னர் கீழாம்பூர் வந்து விட்டார். அம்பாசமுத்திரத்தில் உள்ள தீர்த்தபதி உயர்நிலைப் பள்ளியில் படித்தார். பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் அன்னிபெசன்ட் கைது செய்யப்பட்ட சம்பவம் தேசிய இயக்கத்தில் அவருக்கு ஆர்வத்தை ஏற்படுத்தியது.

சென்னையில் 1920-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் நடைபெற்ற மாகாண காங்கிரஸ் மாநாட்டுக்குப் பால கங்காதர திலகர் வருவதாக இருந்தது. ஆனால் திலகரின் உடல்நிலை பாதிக்கப்பட்டதால் அவர் அம்மாநாட்டில் பங்கேற்கவில்லை. ஆகஸ்ட் முதல் தேதியில் திலகர் காலமானார். திலகரின் மறைவு அவரிடம் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தியது. இதையடுத்து அவருக்குத் தேசிய இயக்கத்தில் தீவிரப்பற்று உண்டாகியது.

மகாத்மா காந்தி 1920-ஆம் ஆண்டில் ஒத்துழையாமை இயக்கத்தை அறிவித்தார். இதையடுத்து 1921-ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து ஹிந்து கல்லூரியிலிருந்து விலகுவதாகக் கல்லூரி முதல்வருக்குக் கடிதம் எழுதினார் சிவராமன். கல்லூரிப் படிப்பை விட்டு விட்டாலும்கூட படிப்பதை மட்டும் விட்டுவிடக்கூடாது என்று கல்லூரி முதல்வர் கே.ஸி. போஸ் விடுத்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு உறுதியளித்தார். அதன்படி, படிப்பதைத் தன் வாழ்நாள்

முழுவதும் கைக்கொண்டார். கல்லூரிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்த பிறகு திருநெல்வேலி மாவட்ட காங்கிரஸ் கமிட்டி உறுப்பினராகிச் சில காலம் காங்கிரஸ் பிரசாரப் பணிகளில் ஈடுபட்டார்.

கல்லிடைக்குறிச்சியில் அந்த ஊரைச் சேர்ந்தவர் நடத்தி வந்த 'ஜார்ஜ் மிடில் ஸ்கூல்' என்ற பள்ளி 'திலகர் வித்யாலயா' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. ஏற்கெனவே இருந்து வந்த அரசு உதவி, அங்கீகாரம் ஆகியவற்றை உதறித் தள்ளி ஒரு தேசியப் பள்ளிக்கூடமாக அது உருவாகியது. திலகர் வித்யாலயாவைத் தேசியப் பள்ளியாக்க முயற்சிகள் எடுத்துக் கொண்ட டாக்டர் சங்கரய்யர் வேண்டுகோளை ஏற்று இப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார் சிவராமன். பள்ளி நேரம் தவிர மற்ற நேரங்களில் சங்கரய்யர் வீட்டிலிருந்து வரலாறு, அரசியல், பொருளாதார நூல்களை எடுத்துப் படிப்பதில் ஆர்வம் காட்டினார். 1921-லிருந்து எட்டாண்டுக் காலம் அவரது பள்ளி ஆசிரியர் பணி தொடர்ந்தது.

மாமனார் மூலம் தென்காசியைச் சேர்ந்தவரும் தினமணியின் முதல் ஆசிரியருமான டி.எஸ். சொக்கலிங்கத்தின் நட்பு கிடைத்தது. அவரது தூண்டுதல் காரணமாகச் சிவராமன் பத்திரிகையுலகில் நுழைந்தார். அவரது ஆலோசனைப்படி டாக்டர் வரதராஜுலு நாயுடு நடத்திய 'தமிழ்நாடு' பத்திரிகையில் உதவி ஆசிரியராகச் சேர்ந்தார்.

மகாத்மா காந்தி 1930-ஆம் ஆண்டில் உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தை அறிவித்தார். அப்போது ஸ்ரீரங்கத்திலிருந்து வேதாரண்யத்துக்கு ராஜாஜி உப்புச் சத்தியாக்கிரக யாத்திரை மேற்கொண்டார். இதில் பங்கேற்பதற்காகத் 'தமிழ்நாடு' பத்திரிகைப் பணியை விட்டுவிட்டார் சிவராமன். இப்போராட்டத்தில் பங்கேற்ற அவருக்கு 20 மாத சிறைத் தண்டனை கிடைத்தது. 1932-இல் விடுதலையானார். காந்தி-இர்வின் ஒப்பந்தம் தகர்ந்து போய்விடவே வெலிங்டன் பிரபுவின் அடக்குமுறை அதிகரித்தது. இதை எதிர்த்துத் தடையை மீறியபோது மீண்டும் கைதாகி 8 மாதச் சிறைத் தண்டனையை அனுபவித்தார். விடுதலையானதும் சொக்கலிங்கம் நடத்தி வந்த 'காந்தி' பத்திரிகையில் துணை ஆசிரியரானார்.

தினமணி பத்திரிகை 1934-ஆம் ஆண்டு செப்டம்பர் 11-ஆம் தேதி பாரதி நினைவு நாளில் தொடங்கப்பட்டபோது அதன் ஆசிரியராகச் சொக்கலிங்கம் பொறுப்பேற்றபோது ஏ.என். சிவராமன் அவருடன் துணையாசிரியராகச் சேர்ந்தார். 1940-ஆம் ஆண்டில் தனிநபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுச் சொக்கலிங்கம் சிறை சென்றதையடுத்து அவர் விடுதலையாகி வரும் வரை 25-11-1940-லிருந்து 18-8-1941 வரை ஏ.என். சிவராமன் தினமணி ஆசிரியராக இருந்தார். 1943-இல் தினமணி நிர்வாகத்துடன் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக ஆசிரியர் பொறுப்பிலிருந்து சொக்கலிங்கம் விலகினார். அதையடுத்துத் தினமணியின் ஆசிரியரான ஏ.என்.எஸ், 21-8-1987-இல் தனது 83-ஆவது வயதில் தினமணி ஆசிரியர் பொறுப்பிலிருந்து ஓய்வு பெற்றார்.

இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில் மகாத்மா காந்தி நடத்திய 'ஹரிஜன்' இதழின் தமிழ் பதிப்பு வெளியிடப்பட்டபோது அதன் ஆசிரியராக இருந்தவர் ஏ.என். சிவராமன் என்பது குறிப்பிடத்தக்கது. 1979-ஆம் ஆண்டு பிப்ரவரி 28-ஆம் தேதி முதல் இந்திய பிரஸ் கவுன்சில் உறுப்பினராக இருந்த அவர், 1981-ஆம் ஆண்டு செப்டம்பர் 17-ஆம் தேதி அந்த உறுப்பினர் பொறுப்பிலிருந்து ராஜிநாமா செய்தார்.

ஏ.என்.எஸ்., 'ஒண்ணேகால் ஏக்கர் பேர்வழி', 'குமாஸ்தா, கணக்கன்', 'வக்கீல் வீட்டு மாப்பிள்ளை', 'விதுரன்', 'அரைகுறை வேதியன்' போன்ற பல புனை பெயர்களில் அரை நூற்றாண்டுக் காலத்துக்கு மேலான பத்திரிகையுலக வாழ்வில் ஆயிரக் கணக்கான கட்டுரைகளை எழுதியுள்ளார். அவரது முதல் நூல் 'மாகாண சுயாட்சி', நவயுகப் பிரசுராலயத்தின் முதல் வெளியீடாக வெளிவந்தது. அரசியல் நிர்ணய சபை, இந்திய அரசியல் அமைப்பு, ரஷ்ய புரட்சியின் 17 ஆண்டு அனுபவம், தமிழகத்தின் உணவுப் பிரச்சினையும் விவசாயத்தின் தேவைகளும், ரூபாய் மதிப்பு வீழ்ந்தது ஏன்?, அப்போலோ கண்ட விண்வெளி விஞ்ஞானம், வேட்பாளரைப் பொறுக்குவது எப்படி?, இந்தியாவின் வறுமை பற்றி கணக்கன் ஆராய்ச்சி, சீனப்பயணம், இலங்கைப் பிரச்சினை, பிஹார் இயக்கம் உள்பட ஏராளமான தலைப்புகளில் ஏராளமான விஷயங்கள் குறித்துப் பக்கம் பக்கமாக எழுதிக் குவித்தவர்.

பெங்களூர், தில்லி, சண்டீகர், விஜயவாடா, மதுரை போன்ற இடங்களில் இந்தியன் எக்ஸ்பிரஸ் பதிப்புகளைத் தொடங்கும் பணிகளைச் செய்தவர். 1941-ஆம் ஆண்டின் கடைசி மாதங்களில் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் பொறுப்பாசிரியராகப் பணிபுரியும் சூழ்நிலையும் சிவராமனுக்குக் கிடைத்தது. இதேபோலத் தினமணி கதிர் வார இதழுக்கும் சில காலம் ஆசிரியராக இருந்தார். தினமணிக் காரியாலயம் வெளியிட்ட நூல் பிரசுரங்களுக்கும் சில காலம் பதிப்பாசிரியராக இருந்தார். தினமணி நாளிதழின் வெளியீட்டாளராகவும் இருந்திருக்கிறார்.

பத்திரிகை ஆசிரியருக்குப் பத்திரிகையின் சகல நுணுக்கங்களும் தெரிந்திருக்க வேண்டும்; அப்போதுதான் பத்திரிகையைச் சரிவர நடத்த முடியும் என்பது அவரது கருத்து. பத்திரிகையை அச்சுக் கோப்புச் செய்வதிலிருந்து விற்பனை வரை பத்திரிகை நிர்வாகத்தின் அனைத்துப் பணிகளிலும் நிர்வாகத் திறமை அனுபவம் பெற்றவர். அதனால், அவர் புதிய இடங்களில் இந்தியன் எக்ஸ்பிரஸ் நிறுவனத்தின் புதிய பதிப்புகளைத் தொடங்கும் பணிகளை அவரால் செம்மையாகச் செய்ய முடிந்தது.

இந்திராகாந்தி பிரதமராக இருந்த போது ஏ.என். சிவராமனுக்கு பத்மஸ்ரீ விருது வழங்க மத்திய அரசு முன்வந்தது. பத்திரிகை ஆசிரியர்களாக இருப்பவர்கள் விருதுகளை ஏற்பது நல்லதாக மனதுக்குப்படவில்லை என்று அந்த விருதை மறுத்துவிட்டார். 1988-ஆம் ஆண்டு பிப்ரவரி 29-ஆம் தேதி பகவன்தாஸ் கோயங்கா விருது வழங்கப்பட்டது. இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக அரசு, தாமிரப் பத்திரம் வழங்கிக் கௌரவித்தது. 1984-ஆம் ஆண்டில் அண்ணா பல்கலைக்கழகத்தின் வளர் தமிழ் மன்றம், அறிவியல் தமிழ் ஆக்கப்பணி விருதை வழங்கியது.

பல்வேறு வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கிறார் ஏ.என்.எஸ். அந்த நாடுகளின் புவியியல் அமைப்பு, அரசியல் அமைப்பு, வரலாறு, பண்பாடு, மொழி, பழக்க வழங்கங்கள் போன்றவற்றைத் தெரிந்து கொண்டு அந்நாட்டில் பெற்ற அவரது அனுபவங்களைச் சாதாரணத்

தமிழ் வாசகர்களுக்கும் தெரிய வைக்க வேண்டும் என்பதற்காக அதுகுறித்து விரிவாக எழுதியவர்.

இரண்டாவது உலகப் போரின்போது ஈராக், ஈரான், பாலஸ்தீனம், லெபனான், சிரியா, எகிப்து, லிபியா, இத்தாலி போன்ற நாடுகளில் இந்தியப் படை வீரர்கள் இருந்தனர். 1944-ஆம் ஆண்டில் அந்த இடங்களில் உள்ள இந்திய வீரர்களைப் பார்ப்பதற்காக அழைத்துச் செல்லப்பட்ட பத்திரிகையாளர் குழுவில் இடம் பெற்றவர்களில் ஒருவர் சிவராமன்.

ஐக்கிய நாடுகள் சபையின் சான்பிரான்சிஸ்கோ மாநாட்டில் (1945) தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ் சிறப்பு நிருபராகச் சென்று செய்தி சேகரித்து அனுப்பியவர். அங்கு மேலும் 3 மாதங்கள் தங்கியிருந்து அங்குள்ள உள்ளாட்சி அமைப்புகள், தொடக்கப் பள்ளி அமைப்பு போன்றவை குறித்து ஆய்வு செய்து பின்னர் அவை குறித்துத் தினமணியில் கட்டுரைகள் எழுதினார். 1946-ஆம் ஆண்டில் நியூயார்க்கில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபை மாநாட்டில் செய்தி சேகரிக்க நிருபராகச் சென்றார். **Adventure in the South** என்ற அவரது ஆங்கிலக் கட்டுரை **Colliers** என்ற அமெரிக்க வார இதழில் வெளி வந்தது. 1946-47-இல் அமெரிக்கப் பயணத்தின்போது கிழக்குத் கனடாவில் காகித ஆலைகளைப் பார்வையிட்டார்.

பின்னர் 1953-54-ஆம் ஆண்டில் ஜெர்மனி சென்ற பத்திரிகையாளர் குழுவில் இடம் பெற்றார். ஜெர்மனியில் 3 மாத காலம் தங்கி இருந்து, போருக்குப் பின் ஜெர்மனியின் பொருளாதாரம் எப்படிப் புத்துயிர் பெற்றது என்பதை ஆராய்ந்தார். அதன் பிறகு பிரான்ஸ் சென்றார்.

எச்.வி. அய்யங்கார் தலைமையில் தொழிலதிபர்கள் குழு 1956-இல் டென்மார்க், ஸ்வீடன், பின்லாந்து ஆகிய நாடுகளுக்குச் சென்றது. அக்குழுவுடன் சென்ற பத்திரிகையாளர் குழுவில் அவர் இடம் பெற்றார். சொந்த முறையில் ஸ்வீடனில் 2 மாதங்கள் தங்கியிருந்து அங்குள்ள சமூக, பொருளாதார சூழ்நிலைகள் குறித்து ஆய்வு செய்தார். யுகோஸ்லேவியா, செக்கோஸ்லேவியா, இத்தாலி,

கிரீஸ் ஆகிய நாடுகளுக்கும் சென்று வந்தார். 1954, 1959 ஆகிய ஆண்டுகளில் பிரிட்டன் சென்று வந்த அவர் 1963-இல் பிரிட்டன் சென்ற பத்திரிகையாளர் குழுவில் இடம் பெற்றார்.

1978-இல் சீனாவிற்குச் சென்ற பத்திரிகையாளர் குழுவில் இடம் பெற்ற அவர், அங்கிருந்து திரும்பியதும் சீனப் பயணம் குறித்துத் தினமணியில் தொடர் கட்டுரை எழுதினார். பின்னர்ச் சொந்த முறையில் ஜப்பான், இந்தோனேஷியா, மேற்கு ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கும் சென்று வந்தார். இவ்வாறு பல நாடுகளுக்குச் சென்று வந்து பரந்து பட்ட அறிவையும் அனுபவத்தையும் பெறுவதற்கான வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

பல மொழிகளை அறிந்தவர். படிப்பு என்பது அவரது உயிர்மூச்சு. வாழ்நாள் முழுவதும் கற்பதிலும் கற்றதை எழுதுவதிலும் பெரும்பொழுதைச் செலவிட்டவர் அவர். அவரது சில பத்திரிகைக் கட்டுரைகள் நூல் வடிவம் பெற்றுள்ளன. ஏராளமான கட்டுரைகள் தொகுக்கப்படாமல் பத்திரிகைகளின் பக்கங்களிலேயே கிடக்கின்றன. ரோனால்ட் இ. வால்ஸெலி தொகுத்த **'Journalism in modern India'** என்ற நூலில் இடம் பெற்ற **'The Vernacular language newspapers'** என்ற சிவராமனின் கட்டுரையின் மூலம் தமிழ் மொழி இதழ்களைப் பற்றிய பல தகவல்களைத் தெரிந்து கொள்ளமுடியும்.

தினமணி நாளிதழிலிருந்து ஓய்வு பெற்ற பிறகும்கூட, தனது படிப்பை விட்டுவிடவில்லை. தினமும் பல மணி நேரங்களைப் படிக்கச் செலவிடுவது என்பது அவரிடம் உள்ள விடாத பழக்கமாகும். வேதங்களில் ஆழ்ந்த புலமை கொண்டவர். 'பக்திமான்; ஆனால் மதவாதியல்ல' என்று தன்னைப் பற்றி அவர் கூறுவது வழக்கம். எந்த இயக்கத்தையோ அல்லது கருத்தையோ ஆதரித்தாலும்கூட, அதனைத் தனது விமர்சனத்துக்கு உட்படுத்தத் தவறுவதில்லை.

பத்திரிகையுலகில் வாய்ப்பு என்பது அனைவருக்கும் கிடைக்காது. கிடைத்த வாய்ப்பைச் சரியானபடி பயன்படுத்திக் கொண்டவர் ஏ.என். சிவராமன். நான் பத்திரிகையாளராக இருந்தபோது எனக்குக் கிடைத்த வாய்ப்புக் காரணமாக இந்த

அளவுக்கு எனது பணிகளைச் செய்ய முடிந்தது என்பதைச் சில சந்தர்ப்பங்களில் கூறியுள்ளார். "தமிழ் பத்திரிகைகளில் முன்னுக்கு வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் இல்லை என்பது பெரும் குறை. **Dead End** ஆக இருக்கிறது. தினமணியில் ஏ.ஜி. வெங்கடாச்சாரி இருந்தார். அற்புதமான ஜர்னலிஸ்ட்! புத்தகங்களைப் படிப்பதை நிறுத்தாமல், தொடர்ந்து படித்து காலத்தை அறிந்தவராக இருந்தார். இருந்தாலும் - நான் செத்துப் போனால்தான் அவர் ஆசிரியராகும் நிலை! நான் செத்துப் போகவில்லை... ஆகவே ஆசிரியராகாமலேயே அவர் போய்விட்டார்.... "என்று ஜூனியர் போஸ்ட் இதழுக்கு (23.3.1988) அளித்த பேட்டியில் கூறியுள்ளார் ஏ.என்.எஸ்.

முதுமை என்பது உடலுக்கு மட்டுமே என்ற கருத்தை உடையவர். எந்த புதிய விஷயங்களையும் ஆர்வத்தோடு கேட்டுப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதில் விடாப்பிடியான ஆர்வம் அவருக்கு உண்டு. பத்திரிகையாளர்களாக வருவதற்கு எத்தகைய உழைப்பும் பயிற்சியும் பொது நோக்கும் தேவை என்பதற்கு அவர் ஓர் எடுத்துக்காட்டு. 2001-ஆம் ஆண்டு மார்ச் 1-ஆம் தேதி அவர் தமது 97-ஆவது வயதில் காலமானார். பிறந்த நாளிலேயே அவரது உயிர் பிரிந்தது.

ஏ.என். சிவராமனின் பத்திரிகையுலகம்

1

நமது நாட்டில் பத்திரிகைகள் பரவலாவதற்கு மக்களிடையே கல்வி அறிவு அதிகரித்து வந்ததுடன், இந்திய விடுதலைப் போராட்டமும் ஒரு முக்கியக் காரணமாக இருந்தது. இருபதாம் நூற்றாண்டின் முன் பகுதியில் நடைபெற்ற உலகப் போர்கள் நாட்டு மக்களிடம் செய்திகளைத் தெரிந்து கொள்ளும் ஆர்வத்தை மேலும் வளர்த்தன. இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் சிலர், விடுதலைப் போராட்டக் கருத்துகளை நாட்டு மக்களிடம் கொண்டு செல்வதற்கு ஏற்ற சாதனமாகப் பத்திரிகைகளைக் கருதினர். அதற்காகத் தங்களின் அரசியல் செயல்பாடுகளின் ஒரு பகுதியாகப் பத்திரிகைகளை நடத்தியவர்களும் உண்டு; பத்திரிகைகளில் சேர்ந்து பணியாற்றியவர்களும் உண்டு. பத்திரிகைகளை நடத்துவதற்கோ, பத்திரிகைகளில் பத்திரிகையாளர்களாகப் பணிபுரிவதற்கோ தற்போது இருப்பது போன்ற தனிப்படிப்புகள் ஏதும் அக்காலத்தில் இல்லை. பத்திரிகைகளில் சேர்ந்து அனுபவத்தின் வாயிலாகப் பத்திரிகையாளர்களாக வேண்டும். அந்த நிலையிலும் கிடைத்த குறைந்தபட்ச வசதிகளைக் கொண்டு பத்திரிகைகளைச் சிறப்பாக நடத்திப் பத்திரிகையுலக முன்னோடிகளாகத் திகழ்ந்து இன்றைக்கும் நினைவு கொள்ளத் தக்க பத்திரிகையாளர்கள் பலர்.

இந்திய விடுதலைக்கு முன்பும் அதற்குப் பின்பும் நாட்டில் ஒரு அரை நூற்றாண்டுக் காலத்துக்கு மேலாகப் பத்திரிகையுலகில் பணிபுரிந்து தனக்கென தனிமுத்திரை பதித்தவர் ஏ.என்.எஸ். என்று அழைக்கப்படும் ஏ.என். சிவராமன். நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக ஒரே பத்திரிகையில் ஆசிரியராக இருப்பது என்பது சாமானியமான காரியமல்ல. அவர் போன்று 83 வயது வரை ஒரே பத்திரிகையில் ஆசிரியராகப் பணிபுரிவது என்பது இக்காலத்தில் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத காரியம். பத்திரிகையில் பல ஆண்டுகளாக ஆசிரியராக இருந்ததால் மட்டும் அவருக்குப் பெருமை இல்லை. தான்

நினைத்த கருத்தைப் பத்திரிகையில் தொடர்ந்து எழுதி வந்தார். அதற்கான வாய்ப்பும் அவருக்குக் கிடைத்தது. நினைத்ததை எழுதுவதற்கான முழுமையான வாய்ப்பு, சிவராமனுக்குக் கிடைத்தது போல வேறு யாருக்கும் அவ்வளவு நீண்ட காலம் கிடைத்திருக்குமா என்பது சந்தேகமே. பத்திரிகை சுதந்திரத்தில் தீவிர நம்பிக்கை கொண்ட அவர், சுதந்திரமாகச் செயல்பட முடிந்ததற்குப் பத்திரிகையின் உரிமையாளராக இருந்த கோயாங்கோவிடமிருந்த நட்பும் ஒரு முக்கியக் காரணம். அவரது கருத்துகள் சில நேரங்களில் கடும் விமர்சனத்துக்கு ஆளாகியுள்ளன. ஆனாலும், எந்த விஷயம் குறித்தும் அவர் என்ன கூறுகிறார் என்று அரசியல் தலைவர்களையும் அறிவுஜீவிகளையும் நினைத்துப் பார்க்கச் செய்தது. பத்திரிகை எழுத்துக்கு நம்பகத்தன்மை இருக்க வேண்டும் என்று கருதிச் செயல்பட்டவர். அதற்கேற்பச் செய்திகளைக் கொடுக்க வேண்டும் என்று முனைந்தவர். அவர் ஆசிரியராக இருந்த பத்திரிகைக்கு அவர் ஏற்படுத்திக் கொடுத்த நம்பகத்தன்மை, ஒரே நாளில் மக்கள் மனதில் பதிந்தது அல்ல. காலம் காலமாகத் தொடர்ந்த முயற்சிகளால் அந்த நம்பகத்தன்மையை மக்களிடம் அவரால் ஏற்படுத்தித்தர முடிந்தது. இது அவரது குறிப்பிடத்தக்க சாதனை என்று கூற முடியும்.

நாட்டைப் பாதிக்கும் எந்தப் பிரச்சினை குறித்தும் தனது கருத்தைக் கூற வேண்டும்; அப்பிரச்சினை குறித்து விரிவாக மக்களுக்கு விளக்கிப் புரிய வைக்க வேண்டும் என்று நினைப்பார். விடுதலைப் போராட்டக் காலத்திலும் அதற்குப் பிறகும் அவரது அரசியல் சார்பு நிலைப்பாடு அவரது கட்டுரைகளில் தெரியும். எனினும், எந்த விஷயத்தையும் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டதாக அவர் நினைப்பதில்லை. எனவேதான், அவர் ஆதரிக்கும் பல விஷயங்களில் உள்ள குறைகளை அவர் சுட்டிக்காட்டத் தவறுவதில்லை. இது சரி; இது தவறு என்ற எல்லைகளைத்தாண்டிப் பிரச்சினைகளின் கருத்தோட்டத்தைக் கூறி வாசகர்களின் சிந்தனைக்கும் முடிவுக்கு விட்டு விடும் போக்கையும் நாம் காண முடியும்.

தினமணி நாளிதழில் மட்டுமல்லாமல் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழிலும் பணியாற்றும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. எனினும், ஆங்கிலப் பத்திரிகைகளைவிடத் தமிழ்ப் பத்திரிகைகள் மூலமே பரந்துபட்ட வாசகர்களைச் சென்றடைய முடியும் என்று கருதியவர்.

ஆங்கிலம் படித்தவர்களுக்குப் பத்திரிகைகள் மூலம் கிடைத்து வந்த அறிவுச் சிந்தனைகள் ஆங்கிலம் தெரியாமல் தமிழ் மட்டுமே தெரிந்தவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று விரும்பியவர் சிவராமன். அதனால் பரபரப்புச் செய்திகளுக்கு அப்பாற்பட்டு மக்கள் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கியப் பிரச்சினைகளை ஆழமுடன் எழுதியவர். அவர் எழுதும் கட்டுரைகளில் புரியாத வார்த்தை, புரியாத கருத்துப் பிரயோகம் போன்றவற்றை அறிமுகப்படுத்தும்போது நமக்குத் தொடர்புடைய அம்சங்களைக் குறிப்பிட்டு விளக்குவார். மற்றவர்கள் கருத்து எது, தனது கருத்து எது என்பதையும் ஆங்காங்கே தெளிவுபடுத்தத் தயங்குவதில்லை. மக்களுக்குப் புரிய வேண்டும் என்பதற்காக ஆங்காங்கே பெட்டிச் செய்திகளையும் வாசகர்கள் விளங்கிக் கொள்ள ஆசிரியர் குறிப்புகளையும் கொடுக்கத் தவறுவதில்லை.

பத்திரிகையாளரான அனுபவம்

சிவராமன் பத்திரிகையாளரானது எதிர்பாராமல் ஏற்பட்டது. புத்தகம், பத்திரிகைகள் படிக்கும் பழக்கம் அவரைக் காலப்போக்கில் பத்திரிகையாளராக்கியது.

> "அப்போது ஒரு துக்கத்தால் பாதிக்கப்பட்டிருந்தேன். திருச்செந்தூருக்குப் போய் கடற்கரை ஓரமாக கடல் அலைகளைப் பார்த்தவாறு அமைதி நாடி உட்காரப் போவதாக, என் நண்பரான டி.எஸ். சொக்கலிங்கத்துக்குக் கடிதம் போட்டேன். சொக்கலிங்கம் சென்னையில் இருந்தார். கடற்கரை திருச்செந்தூரில் மட்டுமா இருக்கிறது? சென்னையிலும்தான் இருக்கிறது...ஆகவே சென்னைக்கு வந்து உட்காரலாம் என்று பதில் போட்டார் சொக்கலிங்கம். அன்றாடச் செய்திகளை உடனுக்குடன் அறியும் ஆவல் எனக்கிருந்தது. அதனால் கன்னிமாரா நூல் நிலையத்திலேயே நேரத்தைக் கழிப்பேன்... கதவை மூடுவதாகக் காவல்காரர் சத்தம் போட்டு வெளியே அனுப்பும் வரை அங்கே உட்கார்ந்து படிப்பேன்! ஒரு முறை மூலையில் படித்துக் கொண்டிருந்த என்னைப் பார்க்காமல், நூல் நிலையக்

> கதவுகளைக்கூட பூட்ட இருந்தார்கள்! செய்திகளை அறிவதில் இவ்வளவு ஆர்வம் காட்டுகிறீர்கள். பத்திரிகை ஆபீஸில் வேலையில் சேர்ந்தால் உடனுக்குடன் செய்திகளை அறிய முடியுமே என்றார் சொக்கலிங்கம். அப்படி ஆசைகாட்டித்தான் தமிழ்நாடு பத்திரிகையில் என்னைச் சேர்த்தார். இப்படி எதிர்பாராதவிதமாக பத்திரிகையாளன் ஆனேன்"

என்று தான் பத்திரிகையாளரானது குறித்துக் கூறியுள்ளார் ஏ.என்.எஸ். (ஜூனியர் போஸ்ட் பேட்டி - 23-3-1988).

'ரஷ்ய புரட்சி 17 ஆண்டு அனுபவம்' என்ற நூலை, குடும்ப நண்பராக இருந்து பத்திரிகைத் தொழிலுக்கு இழுத்துவிட்ட திரு. டி.எஸ். சொக்கலிங்கம் அவர்களின் நினைவுக்குக் காணிக்கையாக்கியுள்ளார் ஏ.என்.எஸ்.

தினமணியின் ஆசிரியரானார் ஏ.என். சிவராமன்

அவரது பத்திரிகையுலகப் பிரவேசம் தமிழ்நாடு இதழை அடுத்துச் சொக்கலிங்கம் நடத்திய காந்தியிலும் தொடர்ந்தது. 'காந்தி'யில் அவர் துணை ஆசிரியராகப் பணியாற்றினார். அக்காலகட்டத்தில் மணிக்கொடி இதழை நடத்துவதிலும் ஏ.என். சிவராமனுக்குக் குறிப்பிட்ட பங்கு இருந்ததையும் குறிப்பிட வேண்டும். மகாத்மா காந்தியின் 'ஹரிஜன்' இதழின் தமிழ்ப் பதிப்பின் ஆசிரியராக இருந்தவர் அவர். அவரது தினமணி பிரவேசம் இப்படித் தொடங்குகிறது:

> "... 1934-இல் 'தினமணி' ஆரம்பிக்க வேண்டிய ஏற்பாடுகளை இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் சந்தானம் செய்து கொண்டிருந்தார். சிறை சென்றவர்களாக நாலைந்து பேரைத் துணையாசிரியர்களாகவும் ஒருவரை எடிட்டராகவும் பொறுக்கி எடுத்திருந்தார்.
>
> அந்தச் சமயம் சதானந்த், சந்தானத்துக்குக் கடிதம் எழுதி டி.எஸ். சொக்கலிங்கத்தை எடிட்டராக்கும்படி செய்யுங்கள் என்று கூறினார்.

சதானந்த்துக்கு யோசனை கூறியது யார் என்று தெரியும். அதை இப்போது சொல்ல வேண்டியதில்லை. சந்தானம் சொக்கலிங்கத்தைச் சந்தித்துப் பேசினார். பேச்சின் முடிவில் சிவராமனையும் சேர்த்து அழைத்து வருகிறேன் என்று சொல்லிவிட்டார் சொக்கலிங்கம்.

'சிவராமன் எனக்கு நன்றாகத் தெரிந்தவர் (சந்தானமும் அடியேனும் திருச்சி சிறையில் உடனிருந்தவர்கள்). நான் உதவி ஆசிரியர்களைப் பொறுக்கினபோது சிவராமனையும் அழைக்கலாம் என்றுதான் கருதியிருந்தேன். சிவராமனையும் உங்களையும் பிரிக்க முடியாது என்பதால் அவரை அழைக்கவில்லை. ஒரு எடிட்டரை அணுகி உன் பேப்பரை நிறுத்தி விட்டு என் பத்திரிகைக்கு வா என்பது உசிதமாகாது என்று தான் நான் உங்களை இதுவரை அழைக்க விரும்பவில்லை. தாராளமாக இருவரும் வாருங்கள்' என்று சந்தானம் கூறினார்.

'சிவராம் வரத் தயாராக இருந்தால் நானும் வருகிறேன்' என்று சொல்லிவிட்டார் சொக்கலிங்கம். இதைச் சொக்கலிங்கமே எனக்குத் தெரிவித்தார்.

அன்றிருந்த சூழ்நிலையில் 1934-இல் வரப்போகும் தேர்தலில் பிரசாரம் தீவிரமாவதற்கு உங்களை ஆசிரியராகக் கொண்ட ஒரு பத்திரிகை தேவை. நீங்கள் போங்கள். நான் ஊருக்குப் போகிறேன் என்று திரு. சொக்கலிங்கத்திடம் சொன்னேன்.

தினமணிக்குச் சொக்கலிங்கம் ஆசிரியராக இருப்பது, காங்கிரஸ் வெற்றிக்கு அவசியம் என்று நான் கருதினேன்.

'நீ வராவிட்டால் நான் போகமாட்டேன்' என்று சொக்கலிங்கம் பிடிவாதம் பிடித்தார். ஆகவே அவரும் 'நானும் தினமணிக்கு வந்து சேர்ந்தோம்'

என்று தினமணியில் சேர்ந்த கதையை விளக்குகிறார் சிவராமன் (தினமணி சுதந்திரப் பொன் விழா மலர் - ஆகஸ்ட் 1997).

அவருக்கும் சொக்கலிங்கத்துக்கும் இருந்த நட்பு பிரதானமானது. இருவரும் ஒரே வீட்டில் மாடியிலும் கீழ் வீட்டிலுமாக வசித்தனர். அதேசமயம் சிவராமன் வீட்டில்தான் சொக்கலிங்கம் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். தென்காசிச் சட்டப்பேரவை உறுப்பினராகச் சொக்கலிங்கம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, வேறு வீட்டுக்குப் போனார் சிவராமன். ஒவ்வொரு தீபாவளிக்கும் சிவராமனுக்குச் சொக்கலிங்கம் கதர் வேஷ்டி, சட்டை, துண்டு வாங்கிக் கொடுப்பது வழக்கம். அந்த அளவுக்கு அவர்கள் இருவருக்கும் இருந்த நட்பு நெருக்கமானது. தினமணியை விட்டுச் சொக்கலிங்கம் விலகியபோது, சிவராமன் அவருடன் வெளியேறவில்லை. எனினும், சில ஆண்டுகள் கழித்துச் சொக்கலிங்கம் மீண்டும் தினமணியில் நிர்வாகப் பிரிவில் பணிபுரிவதற்கான வாய்ப்பை வாங்கிக் கொடுத்தவர் சிவராமன். குறுகிய காலத்திலேயே அப்பணியையும் சொக்கலிங்கம் விட்டு விட்டுச் சென்றுவிட்டார் என்பது வேறுவிஷயம். தினமணி கதிரின் ஆசிரியராக ஏ.என். சிவராமன் இருந்தபோது 1953-ஆம் ஆண்டில் டி.எஸ். சொக்கலிங்கம் எழுதிய ஊழியர் பஞ்சதாசர், ஓடிய பரிசாரகன், தலைவர் குஞ்சமரம், உஷாபரிணயம் (சிறிய தொடர்கதை) ஆகிய கதைகள் தினமணி கதிரில் வெளியாகியுள்ளன.

தனிநபர் சத்தியாகிரகப் போராட்டத்தில் சொக்கலிங்கம் சிறை சென்ற போது 25-11-1940-லிருந்து 18-8-1941 வரை ஏ.என். சிவராமன் தினமணியின் ஆசிரியராக இருந்தார். சிறையில் இருக்கும் காலத்தில் தினமணியின் ஆசிரியர் பொறுப்பை வகிக்கும் சிவராமனைப் பற்றி வாசகர்களுக்கு அறிமுகப்படுத்திச் சொக்கலிங்கம் எழுதியுள்ள (தினமணி 25-11-1940) கடிதம் சிவராமனின் மேதமையை விளக்கும்.

> " நண்பர்களுக்கு,
>
> இன்று முதல் ஸ்ரீ ஏ.என். சிவராமன், 'தினமணி'க்கு ஆசிரியராக இருப்பார். தமிழ் எழுத்தாளர்கள் அனைவரும் ஸ்ரீ சிவராமனை அறிவார்கள். புத்தகம் படிக்கும் வழக்கமுள்ளவர்களும் ஸ்ரீ சிவராமனை நன்கு அறிவார்கள். ஏனெனில், அவர் எழுதிய 'மாகாண சுயாட்சி' என்ற அற்புதமான புத்தகத்தை இராஜீயத்தில் சிரத்தையுள்ள ஒவ்வொரு தமிழரும் கண்டிப்பாய்ப்

படித்திருப்பார்கள். இராஜீய ஞானமும், பொருளாதார ஞானமும் அவருக்கு தளபாட விஷயங்கள். தேச பக்தியிலும் அவர் சிறந்தவர். தேச பக்தியோடு தன்னல மறுப்பையே பிரதானமாக அவர் கருதியபடியால்தான் அவருடைய பெயர் இதுவரை பிரபலமாகவில்லை. விளம்பரமில்லாமல் பின்னாலிருந்து உருப்படியான வேலைகளைச் செய்ய வேண்டுமென்ற உயர்ந்த கொள்கையைக் கொண்டவர்களில் அவரும் ஒருவர். இவ்வளவையும் நான் சொல்ல வந்ததற்குக் காரணம் ஒன்றே ஒன்றுதான். அதாவது 'தினமணி'யைத் திறமையாக நடத்துவதற்கு அவர் சகல குணங்களும் வாய்க்கப் பெற்றவர் என்பதுதான்.

தினமணியின் நண்பர்கள் 'தினமணி'யிடம் வைத்திருக்கும் அபிமானத்திற்கும் ஒரு காரணம் முக்கியமானது. அதுதான் நண்பர்களுக்கும் தினமணிக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு. இந்தத் தொடர்புதான் பரஸ்பர நம்பிக்கையையும், அன்பையும் பெருக்கியிருக்கிறது. இந்தத் தொடர்பை ஸ்ரீ சிவராமன் பூரணமாக அறிவார். அவர் 1920-இல் ஒத்துழையாமை இயக்கத்திற்காக கல்லூரிப் படிப்பை விட்டதிலிருந்து சுமார் 20 ஆண்டுகளாக அவரும் நானும் அநேகமாக ஒன்றாகவே இராஜீயத் துறையிலும், பத்திரிகைத் துறையிலும் ஈடுபட்டு வேலை செய்து வந்திருக்கிறோம். ஆகவே, தினமணி இதுவரை எந்தக் கொள்கையில் நடத்தப்பட்டு வந்திருக்கிறது என்பதை அவர் அறிவார். அந்தக் கொள்கைக்கு அவரும் ஒரு பங்கு பொறுப்பாளியாகவே இருந்து வந்திருக்கிறார். இந்த முறையில் இதுவரை தினமணி நடத்தப்பட்டு வந்திருக்கிறபடியால் தினமணிக்கும் அதன் நண்பர்களுக்கும் உள்ள தொடர்பை அவர் பூரணமாய் அறிந்திருக்கிறார் என்பதை நண்பர்கள் தெரிந்து கொள்ளலாம். எனவே, அவருடைய ஆசிரியத் தலைமையில் நடைபெறும் தினமணி இதுவரை அதன்

> நண்பர்களிடம் எவ்வளவு அபிமானத்தைப் பெற்று வந்ததோ அதைப் போலவே இனியும் பெற்று வரும் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை.
>
> - டி.எஸ். சொக்கலிங்கம்"

சொக்கலிங்கம் மறைவின்போது தினமணியில் எழுதப்பட்ட தலையங்கம் (11-6-1966) இதன் பதிலியாகக் கொள்ளலாம்.

பல்வேறு விஷயங்களை அறிந்து கொள்ளுவதிலும், அறிந்த விஷயங்களை மக்களுக்குத் தெரிவிப்பதிலும், மக்களுக்குத் தெரிவிப்பதற்காக விஷயங்களைப் படித்தும் நேரடியாகச் சென்று தெரிந்து கொண்டும் எழுதும் சிவராமன் போன்ற பத்திரிகையாளர்கள் இன்றைக்கு மிகவும் குறைவு. பத்திரிகைகளில் செய்திகள் சரியாக வர வேண்டும் என்பதில் தீவிர அக்கறை செலுத்துவார். பிரசுரமான செய்திகளில் எழக்கூடிய சந்தேகங்கள் ஏதாவது இருந்தால், அதுகுறித்து மறுநாள் செய்தித்தாளில் விளக்கக் குறிப்புகளை வெளியிடச் செய்வார். செய்திகளில் தவறு ஏற்படும்போது, திருத்தச் செய்தியையும் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிக்க வேண்டும் என்பது அவரது கருத்து.

> "தாய் மொழிப் பத்திரிகைகளின் உண்மையான தொண்டு, விபத்து, கொலை, கொள்ளை, அடிதடி, காதல், சினிமா, பந்தயம் போன்ற "விறுவிறுப்பு" "பரபரப்பு" செய்திகளையே முக்கியமாகக் கொண்டு, நேரப்போக்குக்கும் வம்பளப்புக்கும் உதவுவது அல்ல. விறுவிறுப்புச் செய்திக்கு இடமிருக்கலாம். ஆனால் அதுவே முக்கியம் என்று ஆகிவிடக்கூடாது என்பதே தினமணி போன்ற பத்திரிகைகளின் நிலை. அவ்வப்போது ஏற்படுகின்ற அதிருப்தி, கோபம், ஆவேசம், ஆர்ப்பாட்டம் இவற்றை மட்டும் அடிப்படையாகக் கொள்ளாமல் பொது விஷயங்கள் பற்றிய அறிவை ஆதாரமாகக் கொண்டால்தான் ஜனநாயகம் சரியானபடி உருவாகும் என்பது என் நம்பிக்கை. மக்களின் பொது அறிவு நிலையைப் பொறுத்தே ஜனநாயகம் வளர்ச்சியும் வலிவும்

> பெறுகின்றது. ஆகையால், அரசியல் பண்புகள், சட்டம், பொருளாதார வளர்ச்சி, கல்வி, சுகாதாரம் போன்ற விஷயங்களுக்கு போதிய இடம் கொடுப்பது முக்கியமென்று நான் நினைக்கிறேன்"

என்று 'இந்தியாவின் வறுமை பற்றி கணக்கன் ஆராய்ச்சி' என்ற நூலின் முன்னுரையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தினமணியின் கொள்கை

தினமணியின் மதுரைப் பதிப்பு தொடங்கும் போது தினமணியில் எழுதப்பட்ட தலையங்கத்தில் (1-10-1951) பத்திரிகையின் நோக்கம் பற்றி ஏ.என். சிவராமன் விளக்கியுள்ளார்.

> "....நாட்டின் அவ்வப்போதைய நிலைமைக்குத் தக்கபடி முன்னேற்றப் பாதையில் நேர்மையான மனப்பான்மையுடன் நடைபெறும் எந்த முயற்சிக்கும் "தினமணி" ஆதரவு அளிக்கும். பூரண சமத்துவம் என்பது புனிதமான லட்சியம். ஆனால் எவ்வளவு தூரம் இந்த லட்சியத்தை நோக்கி முன்னேறினபோதிலும் சில ஏற்றத் தாழ்வுகள் இருக்கவே செய்யும். இந்த ஏற்றத்தாழ்வு இருக்கும்போது பரஸ்பரம் துவேஷத்தை வளர்க்காமலும், பலாத்காரம் இன்றியும், காரியம் செய்ய வேண்டும். இது ஜனநாயகத்தின் அடிப்படை.. எந்தக் கட்சியானது ஜனநாயகத்திடம் அதிகமாகப் பற்று கொள்கிறதோ அந்தக் கட்சிக்கு "தினமணி"யின் ஆதரவு கிடைக்கும். அரசியல் நிர்வாகத்தில் பொறுப்பேற்கும் அளவுக்குப் பக்குவம் அடையவில்லை. அவை அதிருப்திப் பிரசாரத்தில் கவனம் செலுத்துகின்றனவே ஒழிய பொறுப்பு மனப்பான்மையுடன் வேலை செய்யவில்லை.
>
> இந்த நிலையில் "தினமணி" காங்கிரஸையே அதிகமாக ஆதரிக்கும். ஆனால் "தினமணி"யானது ஒரு கட்சியின் கருவியாக வேலை செய்யாது. எந்தக் கட்சியாயினும் 'குணம்' இருந்தால் அதை ஆதரிப்பது

'குற்றம்' இருந்தால் அதைக் கண்டிப்பது என்பதே "தினமணி" யின் கொள்கை. பலாத்காரத்தையும் துவேஷத்தையும் அடிப்படையாகக் கொள்ளாத எந்தக் கட்சியிடத்திலும் 'தினமணி' க்கு வெறுப்புக் கிடையாது; நல்லது செய்தால் "தினமணி"யின் ஆதரவு கிடைக்கும்.

பொருளாதாரத் துறையில் ஏட்டுச் சுரைக்காயாக "தனிமுயற்சியுரிமை" "சோஷலிஸம்" போன்ற தத்துவ-வாத ஆராய்ச்சிகளில் மயங்காமல் செய்யும் மாறுதல்களால் நன்மை அதிகமா, தீமை அதிகமா என்பதிலேயே அதிக கவனம் செலுத்த வேண்டும் என்பது "தினமணி"யின் கருத்து.

சரித்திரப் போக்கில் நெடுங்காலமாகப் பழக்க வழக்கங்களால், இந்நாட்டின் சில சமூகங்கள் பின்தங்கி இருக்கின்றன. அவை, தாம் முன்னேற வேண்டும் என்று முயல்வது நாட்டுக்கு நல்லது. ஆனால் அவ்வாறு முயலும்போது துவேஷமோ, பொறாமையோ கொள்வது லட்சியத்துக்குப் பாதகம். அவர்களது முயற்சிகளில் மற்றவர்கள் அனுதாபம் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட ஒரு சௌஜன்ய மனப்பான்மை வளருவதற்குத் "தினமணி" பாடுபடும்.

"பத்திரிகைத் தருமம்" பற்றிய ஒழுக்கத்தை "தினமணி" மிகவும் முக்கியமாக மதிக்கிறது. பொது வாழ்வுக்குச் சம்பந்தமில்லாமல் தனி மனிதரின் சொந்த வாழ்க்கைப் பற்றிய வதந்திகளில் தினமணி அக்கறை கொள்ளாது. பொது வாழ்வில் தனிநபர்கள் பற்றிய சர்ச்சையைவிட, கொள்கையுடன் தொடர்புள்ள சர்ச்சைக்கே "தினமணி" முக்கியத்துவம் அளிக்கிறது.

"தினமணி" யின் தலையங்கங்களில் ஒரு அபிப்பிராயம் வற்புறுத்தப்பட்டபோதிலும் வாசகர்கள் தாமாகவே முடிவுக்கு வருவதற்கு உதவியான தகவல்களையும் கூடிய மட்டில் தர முயல்கிறோம்.

இந்நோக்கத்துடன் நடப்பது "தினமணி"யின் கொள்கை..."

பத்திரிகையை எப்படி நடத்த வேண்டும் என்று எண்ணினாரோ அதற்கேற்பப் பத்திரிகையை நடத்தினார். அதற்கு மக்களிடம் வரவேற்பு இருந்தது. அத்துடன் இவரது முயற்சிகளுக்குத் தினமணி நிர்வாகமும் உறுதுணையாக இருந்தது. பத்திரிகைகளில் எழுதுவது மட்டுமல்ல அதன் சகல பரிமாணங்களையும் நுணுக்கங்களையும் தெரிந்தவர். எந்த ஊரில் எவ்வளவு பிரதிகள் விற்பனை ஆகின்றன என்பது மட்டுமல்ல, எந்த நேரம் அச்சிடப்பட்டு, எந்த நேரம் வெளியூர்களுக்கு அனுப்பினால் சரியான நேரத்துக்கு வாசகர்கள் கையில் பத்திரிகை கிடைக்கும் என்ற கணக்கு அவருக்குத் தெரியும். பத்திரிகையின் நுணுக்கங்களை அறிந்து வைத்திருந்ததால், அவரால் திறமையான ஆசிரியராகப் பணியாற்ற முடிந்துள்ளது. பதிப்புக்கான நேரம் முடிந்து பத்திரிகை அச்சாகும் நேரத்தில் முக்கியத்துவம் வாய்ந்த செய்திகள் வெளியானபோது, தானே அச்செய்தியை எழுதி, இரவில் தூங்கிக் கொண்டிருந்த ஊழியர்களை எழுப்பி அவர்களைக் கொண்டு அச்சுக்கோக்கச் செய்து உடனடியாக அன்றைய பதிப்பிலேயே அச்செய்தியை இடம் பெறச் செய்து மற்றவர்களை வியக்க வைத்த சம்பவங்களும் உண்டு.

திருச்சியில் 1952-ஆம் ஆண்டில் நடைபெற்ற திருச்சி ஜில்லா பத்திரிகையாளர் 4-ஆவது மாநாட்டில் பேசிய ஏ.என். சிவராமன், பத்திரிகையாளர்களின் பொறுப்பு, எப்படிச் செய்தி சேகரிக்க வேண்டும் என்பது குறித்து விளக்கியுள்ளார். அவரது பிரசங்கச் சுருக்கம் 28-10-1952 'தினமணி'யில் வெளியாகியுள்ளது. பத்திரிகைச் செய்திகளில் உண்மை விவரங்களையும் சொந்த அபிப்பிராயங்களையும் கலக்கக் கூடாது என்பதை அவர் அப்போது சுட்டிக்காட்டியுள்ளார். 'ஒரு பத்திரிகையின் வெற்றியானது உண்மை விவரங்களையும் அபிப்பிராயங்களையும் தனித்தனியாகப் பிரித்து வைத்து அணுகும் அளவைப் பொறுத்து இருக்கிறது' என்று குறிப்பிட்ட அவர், 'வாசிப்பவர்களுக்கு உற்சாகம் ஊட்டும் பொருட்டு உண்மையைத் திரித்துக் கூறினால் அந்த உற்சாகம் வெகுகாலம் நிலைக்காது' என்றார். அரசாங்கத்தின் திட்டங்கள், நடவடிக்கைகளின் உண்மை நிலைமைகளை மக்களுக்குத் தெரிவிக்க வேண்டியது

செய்தி சேகரிப்பாளரின் கடமை என்பதையும் அவர் வலியுறுத்தினார். இக்கால கட்டத்தில் பல்வேறு பத்திரிகைகள் மாதிரிக் கணக்கெடுப்புகள் நடத்தி வெளியிடுகின்றன. அரசாங்கத் திட்டங்கள் மற்றும் சட்டங்களின் சாதக பாதகங்கள் குறித்து மாதிரிக் கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று அந்தக் காலத்திலேயே அவர் கருத்து தெரிவித்துள்ளார்.

> 'ஆங்கில பத்திரிகைகளைப் போல அவ்வளவு துரிதமாகத் தமிழ் பத்திரிகைகள் செய்திகளைக் கொடுப்பதில்லை யென்றும் சிந்தனையைத் தூண்டக் கூடிய கம்பீரமான செய்திகள் அனைத்தையும் கொடுப்பதில்லை யென்றும் வழக்கமாக ஆங்கில பத்திரிகை படிப்போர் நினைக்கிறார்கள். இந்த எண்ணத்துக்கு ஆதாரமே கிடையாது'

என்கிறார் ஏ.என்.எஸ்.

> "ஏராளமான பத்திரிகைகள் வெளியாக வேண்டுமென்பதில் சந்தேகமில்லை. ஆனால் புதிதாகத் தமிழ்ப் பத்திரிகை நடத்தும் தொழிலில் ஈடுபடுகிறவர் பத்திரிகையின் தரத்தைக் குறைத்து வருகின்றனர். படிக்க மட்டும் தெரிந்து கொண்டு ஆனால் விஷயங்களை சரிவர புரிந்து கொள்ளக்கூடிய ஆற்றல் பெறாத சில தமிழ் வாசகர்களை தம்பக்கம் இழுத்துக் கொள்ளும் நோக்கத்துடன் அவர்கள் தமிழ்ப் பத்திரிகையின் தரத்தைக் கெடுத்து வருகிறார்கள். உண்மையைத் திரிக்காமல் உள்ளதை உள்ளபடி கூறுவதையே நான் தரம் என்று குறிப்பிடுகிறேன். சில பத்திரிகைகளில் ஆபாசத் தன்மையும் தலைகாட்டுகிறது. சமீபத்தில் நடந்த அகில இந்திய பத்திரிகையாளர் மாநாட்டில் நேருஜி பேசுகையில், பத்திரிகா தர்மத்தை வகுக்கும்படி யோசனை கூறினார். ஆனால் அதை எப்படி நடத்தி வைப்பது என்றும் அவரே கேட்டார். அது பொருத்தமான கேள்வியே. இக்கேள்விக்கு பிரிட்டனில் பெரிய பெரிய கமிஷன்கள்கூட பரிகாரம் கூறமுடியவில்லை.

> தரத்தையும் ஒழுக்கத்தையும் மீறுகின்ற பத்திரிகைகளை வாசகர்கள் படிக்காமலிருப்பதுதான் பத்திரிகையின் ஒழுங்கை நிலை நிறுத்த ஒரே வழியாகும். உண்மை எப்படி திருத்திக் கூறப்பட்டிருக்கிறதென்பதை தெரிந்து கொள்ளலாமே என்று சிலர் அதைப் படிக்கிறார்கள். இந்த கெட்ட ஆசைக்கு இடம் தரக்கூடாது"

என்று சிவராமன் அந்த உரையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் ஆங்கில மொழிப் பத்திரிகைகள் நல்ல பத்திரிகைகள் என்ற கருத்து உள்ளது. ஆனால் அதிக விற்பனையுள்ள இந்திய மொழிப் பத்திரிகைகளை அவ்வாறு கூற முடியாது என்று 'ஸ்வராஜ்யா' இதழில் (13-12-1969) ராஜாஜி எழுதியதைப் பார்த்து, அவருக்கு மறுப்புக் கடிதம் எழுதினார் சிவராமன். மொழிப் பத்திரிகைகள் குறித்துத் தாம் பொதுவாகக் கூறிய கருத்து, தினமணியைப் பொருத்தவரை சரியாக இருக்காது என்பதை ஏற்பதாகக் கூறிப் பதில் கடிதம் எழுதினார் ராஜாஜி. மாநில மொழிப் பத்திரிகைகளில் நிறைய சாதிக்க முடியும் என்பதில் நம்பிக்கை கொண்டவர் சிவராமன் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

சென்னையில் நடந்த பத்திரிகை ஆசிரியர்கள் மாநாட்டை யொட்டித் தினமணியில் (18-4-1947) வெளியான தலையங்கத்தில் பத்திரிகைச் சுதந்திரத்தின் முக்கியத்துவம் குறித்தும் அரசுத் தகவல்கள் பத்திரிகைகளைக் குறிப்பாகத் தமிழ்ப் பத்திரிகைகளை வந்தடைய வேண்டியதன் அவசியம் குறித்தும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

> "பத்திரிகைளின் வேலைகள் பற்றி நம் நாட்டில் சர்க்கார் ஊழியர்களும் ராஜீயவாதிகளும் சற்று அதிகம் தெரிந்து கொள்வது அவசியம். பத்திரிகைகளுக்குத் தகவல்கள் கொடுக்க வேண்டும் என்ற ஆசை பொதுவாக அதிகாரிகளுக்கு இருப்பதில்லை. தம்மிடம் கேட்காமல் ஒரு செய்தியுமே பிரசுரமாகக்கூடாது என்று நினைக்கும் அதிகாரிகளும் பலர் இருக்கிறார்கள். ஒரு செய்தியில் ஏதேனும் சிறு தகவல்கள் சிறிது தவறாக இருந்தால் இன்ன அம்சத்தில் அது தவறு என்பதைச்

சொல்லாமல் செய்தி முழுவதையுமே "பொய்ச் செய்தி" என்று மறுப்பது சில அதிகாரிகளுக்கு வழக்கமாக இருக்கிறது. சில ராஜீயவாதிகள் தமது கட்சியை ஆதரிக்காத பத்திரிகைகளின் நிருபர்களுக்கு எவ்விதத் தகவலும் தரமாட்டேன் என்று சீறிவிழுவதும் உண்டு. இவ்விஷயத்தில் உத்யோக வர்க்கத்தினரின் மனப்பான்மையும் ராஜீயவாதிகளின் மனப்பான்மையும் மாறுவது அவசியம்.

செய்தியறிக்கைகள் வெளியிடுவது சம்பந்தமாக சர்க்கார் கஞ்சத்தனமாக கொள்கையை அனுஷ்டிக்கக் கூடாது. சில முக்கியமான விஷயங்கள் பற்றி சர்ச்சைகள் நடக்கும்போது சர்க்காரின் அறிக்கையில் போதிய பிரதிகள் தயாரிக்காமல் கஞ்சத்தனம் பிடிக்கிறார்கள். இதனால் சில நிருபர்களுக்கு சில பிரசுரங்கள் கிடைப்பதில்லை. இதுபோன்ற விஷயங்களில் பத்திரிகைகளுக்கு கிடைக்கும் வசதிகள் பன் மடங்கு அதிகரிக்க வேண்டும். இதற்கான முயற்சிகளிலும் அகில இந்திய பத்திரிகாசிரியர்கள் மாநாடு அதிக கவனம் செலுத்துவது இப்போது அவசியம்.

மாகாண சர்க்கார்களின் பிரசுர இலாகாக்கள் இப்போதிருப்பதை விட பெரியவையாக இருக்க வேண்டும். பத்திரிகைகளுக்கான பிரசுரங்களை ஆங்கிலத்தில் தயாரிக்கும்போதே (அதே சமயத்திலேயே) மாகாணத் தலைநகரிலுள்ள சர்க்காரின் தாய்பாஷையிலும் தயாரித்து வழங்க வேண்டும். இவ்விஷயத்தில் சர்க்காரின் கடமையை பத்திரிகாசிரியர் மாநாடு வற்புறுத்த வேண்டும்"

என்று அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

வெளி நாட்டில் செய்தியாளர் பணி

ஏ.என். சிவராமன் பல்வேறு வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கிறார். பத்திரிகையாளர் குழுவிலோ அல்லது மாநாடுகளில் செய்திகளைச் சேகரிக்கவோ வெளிநாடுகளுக்குச்

சென்ற அவர், பல முறை தனிப்பட்ட முறையில் தங்கியிருந்து அந்த நாடுகளில் உள்ள முக்கிய அம்சங்கள் குறித்து நேரடியாக விசாரித்து ஆய்வு நடத்தியிருக்கிறார். அந்த நாடுகளுக்குச் சென்ற போதெல்லாம் அந்த நாடுகளைப் பற்றிய பல்வேறு விஷயங்களைக் கட்டுரை வாயிலாகத் தந்திருக்கிறார். வெளிநாடுகளில் நடைபெற்ற முக்கிய மாநாடுகளில் செய்தி சேகரிப்பதற்காகச் சென்று அவர் அனுப்பிய செய்திகள் தினமணியில், ஏ.என். சிவராமன் அனுப்பிய தந்தி என்ற பெயரில் இடம் பெற்றுள்ளன. 'சுதந்திரம் ஒத்திவைக்கப்பட்டால் ரஷ்யாவை நோக்கக்கூடும்' என்ற தலைப்பில் தினமணியில் (28-2-1945) பிரசுரமான ஏ.என். சிவராமனின் தந்தி:

" பிரிஸ்கோ பிப்.25-

...இப்போது ஆதிக்க அரசியல் இருக்கும் நிலைமையை கவனித்தால் பின்கண்ட முடிவுக்கு வரலாம். சாம்ராஜ்யம் உள்பட பிரிட்டனுடன் இணைந்து இருக்கப்போவது நிச்சயம். எனவே, ரஷ்யா பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் கைவைக்காது. ஆனால் பிரிட்டன் ஜனநாயகம், சுதந்திரம் ஆகிய கொள்கைகளை அனுஷ்டானத்தில் கொண்டு வரவில்லையானால் தனது நிலைமை சங்கடமாவதை அமெரிக்கா உணரப்போவது நிச்சயம்.

இந்தியா மேற்கே நோக்காமல் தடுக்க சில இங்கிலீஷ்காரர்கள் ரொம்ப ஆவல் கொண்டிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். இதற்கு அமெரிக்கா ஆதரவு இருக்கும். சுதந்திரம் ஒத்திவைக்கப்பட்டால் இந்தியா ரஷ்யாவை நோக்கும் என இங்கு சிலர் பயப்படுகிறார்கள்.

இந்தியாவுக்கு சுதந்திரம் கொடுப்பதில் பிரிட்டனுக்குச் சிரமங்கள் இருக்கின்றன என இங்கிலீஷ்காரர்கள் சொல்லுவது நொண்டிச் சாக்குதான் என்பதை இந்த வட்டாரத்தினர் ஒப்புக் கொள்ளாமலிருக்கலாம். இவர்கள் பிரிட்டனை ஆதரிப்பவர்கள். எனினும், ஒரு ஒப்பந்தத்தை அனுப்பி அதை இந்தியர்கள் ஏற்க வேண்டுமென்றும்

> கட்டாயப்படுத்த வேண்டும். உள்நாட்டு வித்தியாசங்கள் சம்பந்தமான விவகாரங்களில் ஒரு தீர்ப்பைச் சொல்லி இந்தியர்கள் மீது சுதந்திரத்தை அளிக்க வேண்டும் என இவர்கள் நினைக்கிறார்கள்.
>
> புது உலகிற்கும் பழைய உலகிற்கும் சமமான பலத்தை நிலை நிறுத்த இதுதான் வழி என அவர்கள் நினைக்கிறார்கள். எந்த உலக அமைப்பிலும் 40 கோடி ஜனத்தொகை ரொம்ப முக்கியமானது என இவ்வட்டாரத்தினர் சொல்லுகிறார்கள்.
>
> மேற்சொன்ன விஷயம், சில பகுதிகள் வீண் பிரமையாக இருக்கலாம் என்றாலும், அப்படியே எல்லாம் வீண் பிரமை எனக் கொள்ள வேண்டியதில்லை. இந்தியா தனது கொள்கைகளை உருப்படுத்துவதில் இம்மாதிரி சாத்தியங்கள் உண்டு என்பதைக் கருத்தில் கொண்டு செய்வது நல்லது என நினைக்கிறேன்"

என்று குறிப்பிட்டுள்ளார்.

சிறப்பு நிருபராகப் பணியாற்றும் போது செய்தியை வழங்கும்போதே, செய்தி விமர்சனத்தையும் சேர்த்து வழங்குவது சிவராமனின் பாணியாக இருந்துள்ளது. உலகப் பாதுகாப்பு மாநாட்டில் செய்தி சேகரிக்கச் சென்ற ஏ.என். சிவராமன், அம்மாநாட்டில் பேசிய ஏ.ஆர். முதலியாரின் உரையுடன் தனது விமர்சனத்தையும் சேர்த்து வழங்குகிறார். தினமணியில் (30.4.1945) வெளியான அச் செய்தி:

இந்தியப் பிரச்சினை பற்றி
ஸர்.ஏ.ஆர். முதலியார் பிரசங்கம்

- - - -

சுதந்திரத்தைவிட பரஸ்பர
ஒத்துழைப்பே முக்கியமென்கிறார்.

- - - - -

உலக பந்தோபஸ்து மாநாட்டில்
"செவிக்கினிமையான" பேச்சு
ஸ்ரீ ஏ.என். சிவராமன் தந்தி

பிரிஸ்கோ ஏப்.28 - சர். ஏ. ராமசாமி முதலியார் பிரிஸ்கோ மகா நாட்டில் பேசினார். பிரசங்கம் நீளமாகத்தான் இருந்தது; கரகோஷமும் பலமாகத்தான் இருந்தது; சில உன்னதமான உணர்ச்சிகளை செவிக்கினிமையான வார்த்தைகளைத் தொடுத்துத் தமது பிரசங்கத்தில் நிறுவினார். கரகோஷம் செய்ததற்குக் காரணம் இதுவே 'பாமரமக்களின் அடிப்படை உரிமைகள்' சாதிமத நிற பேதமில்லாமல் எல்லோருக்கும் சமத்துவம் என்ற உன்னதமான கருத்துகளைக் கேட்டவர்கள் விஷப்பல் இருக்குமிடத்தை அறிந்து கொள்ளாது கரகோஷம் செய்தனர். அவருடைய பேச்சுகளை பற்றி பத்திரிகை நிருபர்கள் வியந்தனர்.

சமீபத்தில் சர்.எம். ஸபருல்லா லண்டனில் பேசும் பொழுது உபயோகித்த சில கருத்துக்களை சர் ராமசாமி முதலியார் தமது பிரசங்கத்தில் சேர்த்திருந்தார். இந்தியர்களின் புகழ்ச்சியையும் பெற்றிருக்க முடியும் இந்த மகாயுத்தத்திலும் சென்ற மகாயுத்தத்திலும் இந்தியாவின் அபார யுத்த முயற்சியை சர். ராமசாமி முதலியார் புகழ்ந்து பேசினார். பிறர் விடுதலைக்காக உயிரைக் கொடுத்துப் போராடும் இந்தியர்கள் சொந்த நாட்டில் விடுதலை யின்றித் தவிக்கின்றனர் என்ற ஒரு சபிக்கியத்தையும் சேர்த்துக் கொள்வாரோ என்று ஆவலுடன் எதிர்பார்த்தோம். உயிர்நாடி போன்ற இக் கருத்தை அவர் தெரிவித்துக் கொள்ளவே இல்லை.

1931-ஆம் ஆண்டிலேயே இந்த யுத்தத்துக்கு விதைபோட்ட காலம். இதர தேசங்கள் தயங்கிக் கொண்டிருந்தபொழுது இந்தியாவில் உள்ள பொது ஜனங்கள் மற்றவர்களை பற்றி கவலையில்லை - பாசிஸத்தை எதிர்த்து தங்களுடைய அபிப்பிராயத்தை பிரகடனப் படுத்தினரென்று ஸர் ராமசாமி முதலியார் சொன்னபொழுது பிரதிநிதிகள் கரகோஷம் செய்தனர். ஆனால் ஜனங்கள் என்ற பதத்தின் முழுக்கருத்தையும் அவர்கள் தெரிந்து கொள்ளவில்லை.

இந்தியாவானது அமைதியில் நாட்டமுள்ள ஒரு முற்போக்கான ஸர்வதேச கொள்கையுள்ள நாடென்பதை பிரதிநிதிகள் உணரும்படி செய்தார். நிறத்துவேஷத்தை

கண்டித்து பேசியது பாராட்டத்தக்கதே. இந்தியாவின் அபிலாஷைகளை அமுக்க வைத்திருப்பதை கண்டிப்பதற்கு பதிலாக சுதந்திரத்தைவிட ஒருவரை ஒருவர் சார்ந்திருப்பது தான் முக்கிய மென்பதை மட்டிலும் அழுத்தம் திருத்தமாக பேசியது மிகவும் வருந்தத்தக்க விஷயமாகும்.

லண்டனில் சர் பெரோஸ்கான் உளரிக் கொட்டிய பேத்தல்களை இங்கும் ஸர் ராமசாமி முதலியார் பின்பற்றாததுதான் ஆறுதளிக்கும் ஓர் விஷயமாகும். . .

இதன்பிறகு ஏ.ஆர். முதலியாரின் பிரசங்க விவரங்களை சிவராமன் தந்துள்ளார்.

இரண்டாவது உலகப் போரின்போது ஈராக், ஈரான், பாலஸ்தீனம், லெபனான், சிரியா, எகிப்து, லிபியா, இத்தாலி போன்ற இடங்களில் இந்தியப் படை வீரர்கள் இருந்த இடங்களைப் பார்வையிடுவதற்காகச் சென்ற 11 இந்தியப் பத்திரிகையாசிரியர்கள் குழுவில் இடம் பெற்றார் சிவராமன். 1945-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் இக்குழுவில் சென்று வந்த ஏ.என். சிவராமன் அதுபற்றிய செய்திகளைத் தினமணியில் எழுதவில்லை. இரு ஆங்கிலப் பத்திரிகைகளில் இத்தூதுக்குழுவில் சென்ற ஆசிரியர்கள் எழுதிய இதுகுறித்த செய்திகள் வெளிவந்தன. அந்த செய்திகளைத் தமிழாக்கித் 'தினமணி'யின் முதல் பக்கத்தில் வெளியிட்டார். 'தினமணி' சார்பில் தலையங்கம் மட்டுமே எழுதப்பட்டது. பெயர் போட்டுச் செய்திகளை எழுதும்போது உள்ள பிரச்சினைகள் குறித்துக் குறிப்பிட்ட சிவராமன், வெளிநாடுகளில் போர்முனைகளில் உள்ள இந்திய வீரர்களுக்கு உள்ள பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

"வெளிநாடுகளிலுள்ள இந்திய துருப்புகளின் நிலைமையைப் பற்றி நேற்று டில்லி அசெம்ப்ளியில் விவாதம் நடந்திருக்கிறது. சமீபத்தில் இராக், ஸிரியா, லெபனான், பாலஸ்தீனம், எகிப்து, கடைசியில் இத்தாலி, ஈரான் ஆகிய நாடுகளில் சுற்றுப்பிராயணம் செய்து இந்திய துருப்புகளை பார்வையிட்டு வந்துள்ள 10 பத்திரிகைப் பிரதிநிதிகளின் அறிக்கையே இந்த விவாதத்துக்கு அடிப்படையாக அமைந்தது. சுற்றுப் பிரயாணத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட இந்த கோஷ்டியில் "தின மணி"யுட்பட 4 பத்திரிகைகள் சார்பில்

அவற்றின் ஆசிரியர்களே சென்றிருந்தார்கள்; மற்றப் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் தம் பிரதிநிதிகளையனுப்பியிருந்தார்கள். "டான்'' ஆசிரியர் ஸ்ரீ போத்தன் ஜோசப்பும், பஞ்சாபிலிருந்து ஒரு முஸ்லிம் ஆசிரியரும் இந்த கோஷ்டியிலிருந்தனர். ஆகவே, இந்திய ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் இந்த கோஷ்டி பிரதிநிதித்துவம் வாய்ந்ததாக இருந்ததோடு ஐரோப்பியர் பத்திரிகைகளான "டைம்ஸ் ஆப் இந்தியா''வின் பிரதிநிதியும் இந்த கோஷ்டியில் இருந்தார். 'டான்' ஆசிரியர் இந்த சுற்றுப் பிரயாணத்தைப்பற்றி விசேஷக் கட்டுரை எதுவும் எழுதவில்லை. 'டைம்ஸ் ஆப் இந்தியா' விலும் டில்லி 'ஹிந்துஸ்தான் டைம்ஸி'லும் பிரசுரமான (யாத்திரைக் குறிப்புடன் கூடின) கட்டுரைகள் தணிக்கைக்குப் பிறகே பிரசுரமாயிருக்கின்றன என்பதை நேற்று அசெம்பிளி வாதத்திலிருந்து வாசகர்கள் ஊகிக்கலாம். ஆசிரியர் பதவியிலிருப்பவர்கள் இதுபோன்ற விஷயங்களில் கையெழுத்திட்டு தனிக்கட்டுரைகள் எழுதுவதில் தர்ம சங்கடங்கள் பல உள. "தினமணி''யில் தனிக் கட்டுரை எதுவும் ஏழுதாதற்குள்ள காரணங்களில் இது ஒன்று என்பதை மட்டும் இங்கு குறிப்பிடுவது அவசியம். இந்தியத் துருப்புகளின் 'நிலைமையைப் பற்றி' அதாவது குறைகளைப் பற்றி இந்திய பத்திரிகை பிரதிநிதிகள் வெளியிடும் அபிப்ராயங்களை "இதெல்லாம் அரசியல் கட்சி வாதத்தின் பிரசாரம்'' என்று சர்க்கார் நிராகரிக்க முடியும். 'டைம்ஸ் ஆப் இந்தியா' போன்ற பத்திரிகைளைப் பற்றி பிரட்டிஷ் சர்க்காரும், அதன் பிரதிநிதியான இந்தியா சர்க்காரும் அவ்வாறு சொல்லமுடியாது. ஆகையால் டில்லி 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகையின் கட்டுரையிலிருந்து மட்டுமல்லாமல் 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகையின் பிரதிநிதி எழுதியுள்ள கட்டுரையிலிருந்தும் சில பகுதிகளை வேரிடத்தில் பிரசுரித்திருக்கிறோம்.

அசெம்பிளி விவாதத்தின் தன்மையை அறிய இது உதவியாகும்"

என்று 'வெளிநாட்டில் இந்திய துருப்புகள் நிலை' என்ற தலையங்கத்தில் (10-4-1945) சிவராமன் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாடுகளில் உள்ள இந்தியத் துருப்புகளுக்குச் செய்யப்பட வேண்டிய வசதிகள் குறித்தும் அத்தலையங்கத்தில் சுட்டிக் காட்டியுள்ளார். பிரிட்டிஷ் வீரர்களுக்கு இணையான சம்பளம் வேண்டும், அவர்கள் படிப்பதற்குப் பத்திரிகைகளை அனுப்பவேண்டும். தாய்நாடு திரும்புவதற்கான ரஜா விதிகளை இன்னும் தாராளமாக்க வேண்டும் என்றும் அத்தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் சான்பிரான்சிஸ்கோ மாநாட்டில் செய்தி சேகரிக்கச் சென்ற அவர், அங்கேயே தங்கியிருந்து அங்குள்ள உள்ளாட்சி அமைப்புகள், தொடக்கப் பள்ளி அமைப்பு போன்றவை குறித்து ஆய்வு செய்து தினமணியில் கட்டுரைகள் எழுதினார்.

1978-ஆம் ஆண்டில் சீனா சென்ற 5 பேர் கொண்ட பத்திரிகையாளர் குழுவில் இடம் பெற்றவர் ஏ.என். சிவராமன். ஹின்ஷுவா என்ற சீன செய்தி ஸ்தாபனத்தின் சார்பில் , சீன சர்க்கார் மூலம் வந்த வேண்டுகோளின்படி, இந்திய அரசின் தகவல் இலாகாவால் அனுப்பப்பட்ட இந்திய பத்திரிகையாளர் கோஷ்டியுடன் சென்ற அவர் மே 22 முதல் ஜூன் 11 வரை அந்நாட்டைச் சுற்றிப் பார்த்தார். அதுகுறித்துத் தினமணியில், எனது சீனப்பயணம் என்ற பெயரில் தொடர் கட்டுரை 28-8-78-லிருந்து எழுதினார். 'சீன மொழி தெரியாது, மொழிபெயர்ப்பாளர்களின் உதவி கொண்டுதான் மற்றவர்களிடம் விவரங்களைப் பேசித் தெரிந்து கொண்டோம்' என்கிறார் ஏ.என்.எஸ். சீனாவின் அரசியல் வரலாறு, பொருளாதார வளர்ச்சி, விவசாயம் உள்பட அனைத்துக் கூறுகள் குறித்தும் தனது பார்வையில் அக்கட்டுரைத் தொடரில் எழுதியுள்ளார். கட்டுரைக்கான வரையறை குறித்தும் அவர் சுட்டிக்காட்டத் தவறவில்லை. தாங்கள் கேட்ட கேள்விகளுக்குத் தங்களைச் சந்தித்தவர்கள் மனதில் உள்ளவற்றை முழுமையாக வெளிப்படுத்தியதாகக் கூற முடியாது என்கிறார் அவர். சீன மொழி பற்றி அவர் எழுதியுள்ள குறிப்புகள் அவர் அந்த மொழியின் நுட்பங்களை எந்த அளவுக்குத் தெரிந்து கொண்டு எழுதியுள்ளார் என்பதை வெளிப்படுத்தும்.

அமெரிக்கப் பயணத்தின் போது 1947-இல் அங்குள்ள ஸ்தல ஸ்தாபன முறை குறித்து விரிவாக ஆராய்ந்து தொடர் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

> "...பண வசதியும், தமக்கு ஸ்தல சுயாட்சி வேண்டும் என்று பொது ஜன உணர்ச்சியும் தம் ஊரில் பொது வசதிகள் நன்கு அமைய வேண்டும் என்ற ஆசையும் இல்லாத இடங்களில் சுயாட்சியை சுமத்துவது சரியான கொள்கையாகாது. பணவசதியில்லாமல் ஸ்தல சுயாட்சியில் ஜனங்களுக்கு அக்கரையிருக்காது என்பதை இந்நாட்டில் பலர் உணர்ந்திருக்கிறார்கள். ஆனால் சர்க்காரிலிருந்து பணத்தைக் கொடுத்து ஸ்தல சுயாட்சி ஏற்படுத்துவது சரியான கொள்கையல்ல. ஸ்தல சுயாட்சி வேண்டும் என்று விரும்புபவர்கள் தம் ஊரில் ஏற்படும் செலவில் ஒரு பகுதிக்காவது தாமாக வரி விதித்துக் கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். அப்போதுதான் சுயாட்சியில் உண்மையான ஆசையிருப்பதாக மதிக்க முடியும்"

என்று அக்கட்டுரைத் தொடரின் முடிவுரையில் (தினமணி 10-8-1947) அவர் கூறியுள்ளார்.

அவரது வெளிநாட்டுப் பயணங்களின் போது அவர் எழுதிய கட்டுரைகள், அந்த நாடுகளைப் பற்றி விரிவாகத் தெரிந்து கொள்ள உதவியாக இருக்கும். வெளிநாடுகளுக்குச் செல்லும் முன்பே அந்நாடுகள் குறித்த தகவல்களைத் தெரிந்து கொண்டு செல்வார். அதுகுறித்த புத்தகங்கள், சிறு வெளியீடுகளையெல்லாம் படித்து அறிந்து கொண்டு, வாசகர்களுக்குத் தேவையான விஷயங்களை விளக்கிக் கூறுவார்.

சொல்லும் பொருளும்

பத்திரிகை ஆசிரியராக இருந்த காலத்தில், பத்திரிகை அலுவலகத்தில் அவர் தனியே கோப்புகள் எதையும் பராமரிப்பதில்லை. பத்திரிகைகளில் வெளியாகும் முக்கியச் செய்திகள் தொடர்பாகவோ அல்லது சொற் பயன்பாடு தொடர்பாகவோ தேவையான சமயங்களில்

குறிப்புகளை சிறிய காகிதங்களில் எழுதி அவர் அனுப்புவார். சில நேரங்களில் நேரடியாக வாய்மொழியாகவும் கூறுவதுண்டு. அதை அலுவலகத்தில் ஒரு நோட்டில் எழுதி வைத்துக் கொள்வார்கள். ஆசிரியர்கள் குழுவினருக்கு அது வழிகாட்டி போல இருக்கும். அவர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு, அவர் எழுதிய குறிப்புகள் மறைந்து போனது அவலம். அவரது குறிப்புகள் அனைத்தும் பாதுகாக்கப்பட்டிருந்தால், அது இதழியல் வரலாற்று ஆவணம் போல எதிர்காலத் தலைமுறையினருக்கு வழிகாட்டியாக இருந்திருக்கும். இந்நிலையில், பத்திரிகைகளில் அவர் கட்டுரைகளை எழுதும்போது அல்லது செய்திகள் குறித்து வாசகர்களுக்கு விளக்குவதற்காக ஆங்காங்கே எழுதியுள்ள குறிப்புகள் முக்கியமானவை. அவை வாசகர்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் பல செய்திகளைப் புரிந்து கொள்ள என்றென்றும் பயன்படும். பத்திரிகைகளில் புதிய சொற் பயன்பாடுகள் பயன்படுத்தப்படும்போது, அது எதற்காக அப்படிப் பயன்படுத்தப்படுகிறது என்பதை ஏ.என். சிவராமன் குறிப்பிடுவது வழக்கம். அவரது கட்டுரைகளில் பயன்படுத்தப்படும் வார்த்தைகளுக்கு ஆங்காங்கே விளக்கங்கள் தருவார். வாசகர்களின் கவனம் பெற வேண்டும் என்பதற்காக அதுவே விரிவான விளக்கமாகவும் அல்லது பெட்டிச் செய்திகளாகவும் இடம் பெறும்.

இலங்கை இனப் பிரச்சினை தொடர்பான செய்திகள் வரத் தொடங்கிய காலத்தில் அதிகம் புழக்கத்துக்கு வந்த வார்த்தை **Chauvinism**. 'மலையகத் தமிழரும் ஈழமும்' என்ற இலங்கைக் கட்டுரைகள் தொடர்பாக ஆசிரியருக்கு 'ஈரோஸ்' கடிதம் பிரசுரமான (28-7-1985) நாளன்று ஆசிரியர் குறிப்பாகப் பின்வருமாறு எழுதுகிறார்:

> "**Chauvinism** (சோவனிசம்) என்ற சொல் தேசத்தின் பேரால் அல்லது ஒரு இனத்தின் பேரால் பிறர் மீது துவேசத்தையும் பகைமையையும் வளர்க்கும் மனப்பான்மையைக் குறிக்கும். **Chauvin** என்பது நெப்போலியனது ஒரு முதிர்ந்த படைவீரனது பெயர். கடிதத்தில் வாக்கிய அமைப்பும் சில சொற்களும் யாழ்ப்பாணத்தில் கையாளப்படும் பாணியில் அமைந்துள்ளன. சிறிது சிரமப்பட்டு புரிந்து கொள்ள வேண்டியதிருக்கும்."

Chauvinists என்பதற்கு அவரது வார்த்தைப் பிரயோகம் - இனச்செருக்கு வெறியர்கள்.

Pogram என்ற வார்த்தைக்கு இனஒழிப்பு என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறார். தேர்தல் முடிவு வெளியானது 1977 ஜுலையில். அடுத்த மாதமே அதுவரையில் கண்டிராத அளவுக்குப் பெரிதான கலகம். தமிழர்கள் மீது அப்போது நடந்த வன்செயல் கொடுமைகளை ஆங்கிலத்தில் "**POGRAM**" என்று சொல்லலாம். "**POGRAM**" என்பது ஆங்கிலத்தில் பழக்கத்துக்கு வந்து விட்ட ஒரு ரஷியச்சொல். 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் ரஷ்யாவில் கொலைகள் மூலம் யூதர்கள் அழிக்கப்பட்டதைக் குறிப்பதற்கு இந்தச் சொல் உபயோகிக்கப்பட்டது என்ற தகவலையும் வாசகர்களுக்குச் சேர்த்துச் சொல்லுகிறார் ஏ.என்.எஸ்.

> "சண்டியர், ரவுடிகள்" என்பதற்கு யாழ்ப்பாண பத்திரிகைகள் உபயோகிக்கும் சொல் "காடையர்" என்பது பற்றியும் சுட்டிக்காட்டியுள்ளார். யாழ்குடா நாடுகளும் சுற்றியுள்ள தீவுகளும் பற்றிய படத்தில் ஆங்கிலத்தில் பெயர்கள் எழுதப்பட்டுள்ள சூழ்நிலையில் வாசகர்களுக்குப் புரியும் வகையில் தமிழிலும் குறிப்பிடுகிறார். **Jaffna** - யாழ்ப்பாணம்; **Pointpedro** - பருத்தித்துறை; **Elephant Pass** - யானைஇறவு. ஊர்கள் பெயரை (படத்தில்) தமிழில் தராததற்கு வாசகர்கள் மன்னிக்க வேண்டும். தமிழில் அத்தனை ஊரின் பெயரையும் எழுதினால் படம் கொச கொச என்று ஆகிவிடும்"

என்று விளக்கக் குறிப்பு (29-6-1985 தினமணி) அளிக்கிறார் ஏ.என்.எஸ்.

எப்போதுமே சாமானிய வாசகர்களின் மனதில் எழும் சந்தேகங்களை முன்வைத்தே ஆங்காங்கே ஒரு வார்த்தைப் பிரயோகம் என்ன பொருளில் கூறப்படுகிறது என்பதை அவர் சுட்டிக்காட்டத் தவறுவதில்லை.

"**Colonisation** என்ற சொல்லை டியுஎல்எ.்.ப் உபயோக்கிறது. அரசுப் பிரசுரங்கள் அந்த சொல்லை உபயோகிப்பதில்லை. **Land**

Settlement என்ற சொல்லையே உபயோகிக்கின்றன" என்ற அவரது விளக்கம் ஒரு செய்தியில் அரசு தரப்பு வாதத்துக்கும் எதிர் தரப்பு வாதத்துக்கும் உள்ள வார்த்தை பிரயோக வித்தியாசங்களை வாசகர்களுக்குத் தெளிவாக்கி விடும். **Big Brother role of India** என்ற வார்த்தைக்கு இந்தியா முத்தண்ணாவாகச் செயல்பட முன்வருவது பற்றிய சூழ்நிலை என்பது அவரது மொழியாக்கம்.

ரஷ்ய புரட்சி 17 ஆண்டு அனுபவம் என்ற நூலில் உள்ள கட்டுரையில் இடம்பெறும் வார்த்தையான குலாக் (**Kulak**) என்ற ரஷ்ய சொல்லுக்கு விளக்கம் அளித்துள்ளார். தனது சாகுபடிக்குப் பிறரை "கூலிக்கு" அமர்த்திக் கொள்ளும் நிலச்சுவானுக்கு கம்யூனிஸ்ட் ரஷிய அகராதியில் குலாக் என்று பெயர் என்கிறார்.

"பூர்ஷ்வா (**Bourgeois**) என்றால் நகரவாசி என்று பொருள். ஆகவே தொழிலதிபர்கள், வியாபாரிகள் ஆகியோருக்கு அந்தப் பெயர் வந்தது. தொழிலிலோ வியாபாரத்திலோ லாபம் சம்பாதிப்பவர்களை பூர்ஷ்வா என்ற பொதுச் சொல்லால் குறிப்பிடுவார்கள்"

- இது அவரது விளக்கம்.

இளந்துருக்கியர் என்ற சொல் பழக்கத்துக்கு வரத் தொடங்கியபோது சிவராமன் எழுதிய குறிப்பு:

> "இளந்துருக்கியர்" என்ற சொல் 1918-20-இல் துருக்கியில் "உத்தமான்" சாம்ராஜ்யத்தின் "யுத்தத் தோல்விக்குப்" பிறகு, துருக்கிய சமூக அமைப்பில் பெரிய மாறுதல்கள் செய்து நாட்டுக்கு புத்துயிர் ஊட்ட முயன்ற முஸ்தாபா கமால் பாஷாவின் சகாக்களுக்கு ஏற்பட்ட பெயர். இந்தச் சொல் இந்திய அரசியல் சர்ச்சைகளிலும் பத்திரிகைக்காரரால் புகுத்தப்பட்டது. காங்கிரஸானது தனது சோஷலிஸ லட்சியங்களைப் போதிய வேகத்துடன் செயல்படுத்தவில்லையென்று கருதிய சிலர் காங்கிரஸில் எப்போதுமே இருந்து வந்துள்ளனர். அவர்களில் திரு சந்திரசேகர், திரு கிருஷ்ணகாந்த், திரு மோகன் தாரியா ஆகியோர் இந்த

விஷயத்தை அடிக்கடி வற்புறுத்தி வந்தனர். அதனால் அவர்களுக்கு "இளந்துருக்கியர்" என்று பத்திரிகைக்காரர்கள் பெயர் வைக்க ஆரம்பித்தனர்."

Personality Cult என்பதற்கு அவரது தமிழாக்கம். மக்களின் உணர்ச்சி வேகத்தைத் தூண்டும் அளவுக்கு ஒருவருக்குப் புகழ் சூட்டி, அவர் மீது பக்தி ஏற்படுத்தும் பழக்கம். அதிலும் முக்கியமாக ஒரு அரசியல் தலைவர் விஷயத்தில் இவ்வாறு நடப்பதை இந்தச் சொல்லால் குறிப்பது வழக்கம். உதாரணமாக ரஷ்யாவில் ஸ்டாலினின் விஷயத்தில் நடந்தது போல (இது பெர்ஸனாலிட்டி கல்ட் எனப்படும்). **Glorification** - "புகழ்பாடி உயர்த்துதல்". புகழுரை கோஷம் அளவு கடந்து போய் புகழப்பட்டவரும் அதை ஊக்கப்படுத்தும்போது அது **Personality Cult.** (தினமணி 1-3-1977).

"...விதிகளில் **may** என்ற சொல்லும் **shall** என்ற சொல்லும் இருக்கும். இரண்டுக்கும் வித்தியாசம் உண்டு. **shall** என்பது கட்டுப்படுத்துவது. **may** என்பது யுக்தானுசாரம். இதைப் புரிந்து கொள்ள வேண்டும். இதைப் புரிந்து கொண்டு விதிகளை கவனிக்கவும்...

...கமிஷனுக்கு யோசனை கூறி உதவுவது அஸெஸர்கள் கடமை (**shall**). கமிஷன் அந்த அஸெஸர்களிடம் யோசனை கூறலாம் (**may**)." வாசகர்கள் சட்டவிதிகளை சரிவரப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இதுபோன்ற விளக்கத்தை (விசாரணைக் கமிஷன் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட சட்டவிதிகளின் சாராம்சம் - தினமணி 23-11-77) கூறியுள்ளார் சிவராமன். 'மிட்டரண்ட்' பற்றி எழுதும்போது, மிட்டரண்ட் (**Mitterand**) என்று எழுதி 'மித்தரான்' என்று உச்சரிப்பது பிரெஞ்சு முறை என்று சொல்லத் தவறுவதில்லை.

அவரது கட்டுரைகளில் இடையிடையே தமிழ்ச் சொற்களுக்கு நிகரான ஆங்கில வார்த்தைகள் அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்படுவது வழக்கம். சில நேரங்களில் முக்கியமான வாசகங்கள் தமிழில் இருந்த போதிலும் அதை அப்படியே ஆங்கிலத்திலும் தந்து விடுவார். இதனால் ஆங்கிலம் தெரிந்த வாசகர்கள் அதற்கு நிகரான தமிழ் வார்த்தைகளைத் தெரிந்து

கொள்ளவும் தமிழ் தெரிந்த வாசகர்கள் அதற்கு நிகரான ஆங்கில வார்த்தைகளைத் தெரிந்து கொள்ளவும் உதவும்.

> "கட்டுரையில் இடையிடையே சில ஆங்கிலச் சொற்கள், ஆங்கிலச் சொற்றொடர்கள், ஆங்கில வாக்கியங்கள் இருக்கின்றன. ஆங்கிலம் தெரியாதவர்கள் அதைக் கண்டு பயப்பட வேண்டியதில்லை. அந்த ஆங்கிலச் சொற்களை அறவே படிக்காமல் விட்டு விட்டாலும் "நஷ்டம்" எதுவுமில்லை. ஆங்கிலச் சொற்களை ஒதுக்கியே படித்தாலும் நான் சொல்ல வந்த கருத்து பூரணமாக விளங்கும்.... பல இடங்களில் அந்த ஆங்கிலச் சொற்கள் வேண்டியதே இல்லை. ஆனாலும் ஏதோ விசித்திரமான காரணத்தால், ஆங்கிலச் சொற்களையே அதிகம் கையாண்டு பழகியவர்களில் சிலருக்கு தமிழ் புரிவதில்லை. ஆங்கிலச் சொல்லையும் சேர்த்துப் படித்தால் ஒரு புது ஒளி கிடைத்தது போன்ற உணர்ச்சி அவர்களுக்கு ஏற்படுகிறது. இது பழக்கம் பற்றிய ஒரு கோளாறு. அவர்களை நான் குறை கூறவில்லை. இந்த குறை என்னிடமும் ஓரளவு இருக்கக்கூடும். இவ்வாறு ஆங்கிலத்தில் பழகிப் போனவர்களுக்காக ஆங்கிலச் சொற்களை உபயோகித்திருக்கிறேன்"

என்று கூறுகிறார் சிவராமன். (வறுமை பற்றிய கணக்கன் ஆராய்ச்சி - பக் 2).

ஒரு கருத்தை அல்லது செய்தியை மக்களுக்குப் புரியும் வகையில் எளிமையாகக் கொண்டு செல்வது என்பதைத்தான் பத்திரிகையாளர்கள் பிரதானமாகக் கருதுவார்கள். அதற்கேற்ற மொழி நடை இருக்கும். அதே சமயம் புதிய கருத்துகள், புதிய சொற் பிரயோகங்கள் ஆகியவற்றுக்கும் பத்திரிகைகள் களம் அமைத்துக் கொடுத்து உரை நடை வளர்ச்சிக்கு உதவியாக இருந்துள்ளன. அந்த வகையில் கருத்துகளைத் தமிழில் எளிமையாகக் கூற வேண்டும் என்பதற்கே முக்கியத்துவம் கொடுத்தவர் சிவராமன். ஆங்கில வார்த்தைகளாக இருந்தாலும் மக்கள் பழக்கத்தில் இருந்தால்

அதையே பயன்படுத்துவார். மக்களுக்குப் புரிய வேண்டும் என்பதே முக்கியம். மற்ற விஷயங்கள் அதற்கு அடுத்துதான்.

"தமிழைத் தவிர பிற இந்திய மொழியில், க,ச,ட,த, ப என்ற உயிர் மெய் எழுத்துகள் ஒவ்வொன்றிலும் 4 வகையுண்டு. இந்த வேறுபாட்டில் பொருள் வேறுபாடும் உண்டு. உதாரணமாக "ஒளி"யைக் குறிக்கும் 'காந்தி' என்ற சொல்லிலுள்ள "கா"வும் வேறு ஒலி. சில சொற்கள் தவறாக பத்திரிகைகளில் அச்சாகி மக்கள் பழக்கப்பட்டுப் போய்விட்ட பிறகு சரியான உச்சரிப்புடன் பிரசுரித்தால் அது வேறொன்றாகக் குறிப்பதுபோல ஆய்விடும். ஆனாலும் படிப்படியாக சரியான உச்சரிப்பும், பழக்கமாகட்டுமே என்ற எண்ணத்தில் சில சொற்களை பல விதமாக எழுதியிருப்பேன்.

உதாரணமாக "பீகார்'' என்று எழுதி பழக்கமாகிவிட்டது. ஆனால் உண்மையில் முதல் எழுத்து நெடில் அல்ல. குறில். அதிலுள்ள "மெய்'' 3-வது "ப"வைச் சேர்ந்தது. அதிலுள்ள க உண்மையில் ஹ. இந்த நூலில் அந்த மாநிலத்தின் பெயர் பீகார், பீஹார், பிஹார், பிகார் என்று பலவிதமாக அச்சாகியிருக்கும். இந்த விசித்திரத்தை நீக்க நான் விரும்பவில்லை. கூடுமான மட்டிலும் அந்தந்த சொற்களை அந்தந்த மொழியிலுள்ள உச்சரிப்புடனும் ஒலித்துப் பழகுவதில் தீமை எதுவுமில்லை என்று கருதுபவன் நான். . .''('பீஹார் இயக்கம்' நூலின் முன்னுரை)

என்பது சிவராமனின் நோக்கு.

தமிழில் போதனை

"... மொழி சுத்தம் என்பது இலக்கிய வளர்ச்சிக்காகத்தான். பாட்டுகள், நவீனங்கள், மற்றும் இதர இலக்கிய முயற்சிகளுக்குத்தான் சுத்தமான மொழி அவசியம். நவீன விஞ்ஞானக் கருத்துகளை

அறிந்து கொள்வதற்கு சுலபமான வழிகளை மேற்கொள்வதே புத்திசாலித்தனமாகும். நாளடைவில் தனிச் சொற்களும் நடைமுறையில் வந்துவிடக்கூடும்.

விஷயத்தைப் புரிய வைப்பதற்காக சில ஆங்கிலச் சொற்களும் கலந்த மணிப் பிரவாள நடையை உபயோகிப்பதால் தவறு ஒன்றுமில்லை. நுட்பமான விஷயங்களை விளக்குவதற்கு கலைச் சொற்கள் இல்லையே என்று காத்துக் கொண்டிருந்தால் முடிவே கிடையாது. ஆங்கிலத்தில் கூட பல பிற மொழி சொற்களை தாராளமாகச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். முக்கியமாக, கோர்ட்டுகளில் லத்தீன் சொற்கள் நிறைய உபயோகிக்கப்படுகின்றன. உயர்தரக் கல்விக்குப் பொருத்தமான சொற்களும், புஸ்தகங்களும் தயாரிக்கப்பட்ட பிறகுதான் தமிழை போதனா மொழியாக்க வேண்டுமென்று நினைத்தால், நீந்தத் தெரிந்த பிறகு தான் ஜலத்தில் இறங்குவேன் என்று சொன்னவனின் கதையாகவே இருக்கும்...

... சோடா என்ற வார்த்தை தெரியாதவர் ஒருவர்கூட இருக்க முடியாது. இதற்கு தமிழ் வார்த்தை தேட வேண்டுமென்ற அவசியமில்லை. இம்மாதிரி அநேகமாக எல்லோருக்கும் புரியும் ஆங்கில வார்த்தைகளை அப்படியே வைத்துக் கொண்டு, துணிந்து தமிழில் பாடம் சொல்லிக் கொடுப்பதற்கு ஆசிரியர்கள் முன் வர வேண்டும்.

நிர்வாக பாஷை சம்பந்தப்பட்ட வரையில், ஜில்லாக்களில் தமிழ் மொழியையே உபயோகிப்பதில் சிரமம் இருக்க முடியாது. நிர்வாகத்தின் ஜீவநாடி என்று கருதப்படும் கிராம அதிகாரிகள் தமிழில் தான் தம்முடைய தஸ்தாவேஜுகளை தயாரிக்கிறார்கள். ராஜ்ய புனரமைப்புக்குப் பிறகு சென்னையில் எல்லாம் தமிழ் ஜில்லாக்கள் தானிருக்கும். இந்த நிலைமையில், தமிழிலேயே நிர்வாகக் காரியங்களை நடத்துவது காரிய

சாத்தியமே. ஆனால், இதுமுடியுமா, சாத்தியமா என்று கேள்விகள் போட்டுக் கொண்டிராமல் செய்து பார்ப்போமே என்று ஆரம்பிக்க வேண்டியது தான் முக்கியம். இந்தியா பூராவுக்கும் பொதுவான ஒரு பாஷை ஏற்படும் வரையில் இதர ராஜ்யங்களுடன், மத்திய சர்க்காருடனும் ஆங்கிலத்தைத்தான் உபயோகிக்க முடியுமென்பது தெளிவு. ஏனெனில், படித்தவர்கள் என்று சொல்லப்படுவோரிடையே இந்தியா பூராவிலும் எல்லோருக்கும் ஒரு அளவு தெரிந்த பாஷை ஆங்கிலம்தான்"

என்று 'தமிழில் போதனை' என்ற தினமணி தலையங்கத்தில் (18-2-1956) குறிப்பிடப்பட்டுள்ளது நினைவுகூரத்தக்கது.

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்

"தமிழிலுள்ள (உயிர் எழுத்து 12, மெய் எழுத்து 18, உயிர் மெய் 216, ஆய்தம்-1 ஆக 247) எழுத்துக்களை அச்சுக் கோப்பதற்கு குறைந்தபட்சம் சுமார் 155 அல்லது 165 தனித்தனி அச்சுகள் வேண்டியிருக்கிறதல்லவா? (ா,ெ,ே,ை ஆகியவை பல உயிர் மெய் எழுத்துக்களுக்கும் பொது). க், கி, கீ, கு, கூ என்பவற்றில் பொட்டு, கொக்கி, துரட்டி போன்றவற்றை "க" மீது ஏற்றுவதற்குப் பதிலாக அந்தக் குறிகளை எழுத்துக்குப் "பக்கவாட்டிலேயே" தனி அச்சாக அமைப்பது என்ற முறையை ஏற்படுத்தினால், அச்சுக்களின் தொகையை சுமார் 55 ஆகக் குறைத்துவிட முடியும். இவ்வாறு செய்தால் இப்போது தினமணியில் அங்குலத்துக்கு 8 வரிகள் இருப்பதற்குப் பதில் சுமார் 10 வரிகள் இருக்க முடியும்; அவ்வாறின்றி அங்குலத்துக்கு 8 வரிகள் என்று வைத்துக் கொண்டால் இப்போது காண்பதை விட ஒவ்வொரு எழுத்தும் பெரிதாக இருக்கும்.

ஸ்ரீ,ணை, ளா, னை, ணு, ரு, ஞ ஆகியவற்றை இரண்டெழுத்தாக எழுதுவது என்று திரு ஈ.வெ.ரா. அவர்கள் மாற்றியுள்ளதைப் போன்றதே நான் மேலே

கூறியுள்ளது. ஆனால் கி, கீ, கு, கூ போன்றவற்றிலும் மாறுதல்கள் செய்தால் அச்செழுத்தில் (1) அதிக இடம் அடைத்துக் கொள்ளாமலே பெரிய எழுத்துப் போடுவது (2) அல்லது ஆங்கிலத்தில் அமைவது போல் அதிக வரிகள் அமையும்படிச் செய்வது என்பது சாத்தியமாகும்"

என்று தமிழ் எழுத்துச் சீர்த்திருத்தம் பற்றியும் கருத்துத் தெரிவித்துள்ளார் சிவராமன். (எனது சீனப் பயணம் - ஏ.என்.எஸ். கட்டுரை - தினமணி 1-10-1978).

ஆங்கிலத்தில் உள்ள உரையைத் தமிழாக்கும் போது சிவராமனின் பார்வை எத்தகையது?

"சில சொற்கள் சாதாரண பேச்சில் ஒரே கருத்துள்ளவையாக இருப்பினும், விஞ்ஞான ரீதியாக வேற்றுமை இருக்கும். உதாரணமாக எடை (**Weight**) என்பதும், நிறை (**Mass**) என்பதும் சாதாரணப் பேச்சில் ஒன்றுதான். ஆனால் விஞ்ஞானிகள் இந்த இரண்டு சொற்களையும் வெவ்வேறு கருத்திலேயே கையாளுகிறார்கள். ரயிலில் பயணம் செய்பவன் மதுரை வந்து விட்டது என்பான், ஆனால் விஞ்ஞானி அவ்வாறு சொல்லமாட்டான். மதுரையை அணுகுகிறோம் என்றுதான் சொல்லுவான். இம்மாதிரி நுட்பமான பொருள் வேறுபாடுள்ள சொற்களை மாற்றினால் அதை எழுதினவர், தம் கருத்து மாற்றப்பட்டதாகச் சொல்ல இடமேற்படும். ஆகையால் (கூடுமான மட்டிலும்) சொல்லுக்குச் சொல் போட்டு மொழிபெயர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது. (ஆனால் உடனேயே விளக்கமும் தரப்பட்டிருக்கும்)."
('ரஷ்ய புரட்சி 17ஆண்டு அனுபவம்' நூல் பக்.103)

சாதாரண மாணவர்களுக்குப் புரியும் வகையில் அறிவியல் விஷயங்களைக் கூறும்போது, படிப்பவர்களிடம் ஆசையையும் ஆர்வத்தையும் தூண்டவேண்டும் என்பதுதான் அவரது நோக்கமாக இருந்தது.

". . . சில விஷயங்களை சரியான பாகுபாடு செய்து சொல்லவில்லை என்று அவர்கள் குற்றம் சாட்டலாம். உதாரணமாக, (energy, force, power) என்ற சொற்கள் விஞ்ஞானத்தில் பரஸ்பரம் வெவ்வேறான கருத்துக்களைக் குறிப்பவை. இதுபோன்ற பாகுபாடுகள் இந்த நூலில் வரையறுக்கப்படாமல் மழுப்பப்பட்டிருக்கும். உதாரணமாக "காற்றைப் பின்பக்கம், தள்ளுவதால், விமானம் முன்னே செல்லுகிறது'' என்று சொல்லும்போது, தள்ளும் திசையைவிட "அது தள்ளப்படும் பாணியல்லவா முக்கியம்? பெர்னூலி (Bernoulli) விதியைச் சொல்ல வேண்டாமா?'' என்று சிலர் குறை சொல்லலாம். விமானங்கள் செயல்படும் முறையை விளக்குவது முக்கியமாக இருந்தால் அது மன்னிக்க முடியாத குற்றம். ஆனால், ஜெட்டுக்கும் சாதாரண விமானத்துக்குமுள்ள வேற்றுமையைக் குறிப்பிடுவது மட்டுமே நோக்கம் என்ற நிலைமையில், இது மன்னிக்க வேண்டிய விஷயமாகும்.

குழாய்க்குள்ளே காற்றின் அழுத்தம் குறையும்போது "தண்ணீர் உள்ளே உறிஞ்சப்படுகிறது'' என்று சொல்வதைவிட தண்ணீர் "உள்ளே தள்ளப்படுகிறது'' என்று சொல்லுவதுதான் விஞ்ஞான ரீதியாகச் சரி. சில இடங்களில் இதுபோன்ற நுணுக்கங்களை மழுப்பியிருப்பேன். மன்னிக்க வேண்டும்.

"...நியூட்டன்'', "கெப்ளர்'', "ராக்கெட் இயல்'', "வான இயல்'' முதலியவற்றை பாடமாக படிப்பவர்களுக்காக எழுதப்படுவதல்ல; வேறு விஷயங்களைப் படிப்பவர்கள் இதையும் சிறிது தெரிந்து கொள்ளட்டும் என்ற முறையில் எழுதப்பட்டது, என்பதுதான் விஞ்ஞானிகளுக்கு நான் கூறும் சமாதானம்''

('அப்போலோ கண்ட விண்வெளி விஞ்ஞானம்' நூலின் முகவுரையில் ஏ.என். சிவராமன்)

சொன்னால் கொல்கத்தா

பத்திரிகைத் துறையில் அவருக்கு இருந்த ஆர்வம் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தும். 2000-ஆம் ஆண்டின் இறுதியில் கல்கத்தா என்பது கொல்கத்தா என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அதுகுறித்துத் தனது 97 வயதில் (அதாவது அவரது மறைவுக்கு 3 மாதங்களுக்கு முன்) அவர் கூறிய விளக்கக் குறிப்பு தினமணியில் தலையங்கப் பக்கக் கடிதப் பகுதியில், எழுதினால் கல்கத்தா, "சொன்னால் கொல்கத்தா" என்ற தலைப்பில் 1-1-2001-இல் வெளியாகியது.

> "வங்க மொழி எழுத்துகளின் ஒலியைப் பற்றித் தெரிந்து கொண்டவர்களுக்கு கல்கத்தா நகரம், கோல்கத்தா ஆனது பற்றி ஆச்சரியம் எதுவும் இருக்காது.
>
> வங்க மொழியில் அகரம் என்ற ஒலியைக் கிட்டத்தட்ட 'ஓ' என்பது போல உச்சரிப்பார்கள். எழுத்தில் கல்கத்தா என்றுதான் இருக்கும். ஆனால் சொல்லும்போது கோல்கத்தா என்பார்கள்.
>
> உதாரணம்: புதுச்சேரியில் உள்ள அரவிந்த ஆசிரமத்தைப் பற்றி எழுதும்போது அரவிந்த (AUROBINDO) என்று எழுதி ஒரவிந்த என்று சொல்லுவது வங்காளிகளின் பழக்கம். அரவிந்த என்பது ஒரவிந்த ஆனது மாதிரி கல்கத்தா என்பது கோல்கத்தா ஆகிவிட்டது. கோல்கத்தா என்று சொல்லுவதுதான் வங்காளிகளின் வழக்கம். 'வ' என்பதை 'ப' (B) என்றும் 'பா' என்பதை 'வா' என்றும் அவர்கள் உச்சரிப்பது வழக்கம். அதே மாதிரி 'ஸ' என்று எழுதி 'ஷ' என்று உச்சரிப்பார்கள். எழுதுவதில் வடமொழியைப் பின்பற்றுவது வழக்கம்.
>
> நாம் தமிழ்நாட்டில் அரிச்சுவடி கற்பிக்கும்போது 'அ' என்பதை அனா, ஆவன்னா என்பது போலவே வடமொழியில் கற்பிக்கும்போது 'அ' என்பதை 'அகார்'

என்றும் 'ஆ' என்பதை 'ஓஆகார்' என்றும் சொல்லிக் கொடுப்பார்.

கல்கத்தா என்ற பெயர் எப்படி வந்தது என்பதைப் பற்றி ஒரு வங்காள பிரமச்சாரியிடம் நான் பல ஆண்டுகளுக்கு முன் கேட்டேன். வங்காளத்தில் முக்கியமான தெய்வம் காளி. கோவில் என்பதற்கு அவர்களின் வார்த்தை நிபிகிஜி. காளி கட்டம் என்பதை வெள்ளைக்காரர்கள் கல்கத்தா என்று குறிக்கிறார்கள். எழுத்து சம்பந்தப்பட்ட மட்டில் கல்கத்தாதான். உச்சரிப்பது கோல்கத்தா. அந்த உச்சரிப்புக்குத் தகுந்தபடி எழுதினால் கோல்கத்தா தான் வரும். இதுதான் கல்கத்தாவின் கதை.

வங்காளிகள் சம்பந்தப்பட்டமட்டில் எழுதுவது கல்கத்தா; சொல்வது கோல்கத்தா. ஒலி முறைப்படி ஆங்கிலத்தில் மாற்றி இருக்கிறார்கள். முன்பும் அப்படித்தான். இப்போதும் அப்படித்தான்"

என்ற விளக்கத்தை வழங்கியுள்ளார் ஏ.என்.எஸ்.

பதவியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்ட பிறகும் கூட, குறிப்பிட்ட கருத்தை வாசகர்களிடம் தெளிவுபடுத்த வேண்டும் என்று அவர் காட்டிய அக்கறை அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தும். முக்கியமான செய்திகளில் அல்லது படிக்கும் புத்தகங்களில் சந்தேகம் ஏற்பட்டால் உரியவர்களிடம் கேட்டுத் தனது சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளவும் தயங்கமாட்டார். அதற்காகப் பல புத்தகங்களையும் படிக்கச் சளைப்பதில்லை.

2

நாட்டு நடப்பு குறித்து வாசகர்கள் தெளிவு பெறுவதற்குத் தலையங்கங்கள் உதவியாக இருக்கும். பத்திரிகைகளின் தலையங்கங்களைப் பத்திரிகையின் ஆசிரியர் எழுதுவார். சில நேரங்களில் ஆசிரியர் குழுவைச் சேர்ந்தவர்கள் எழுதுவார்கள். எனினும் பத்திரிகைத் தலையங்கங்கள் ஆசிரியரின் ஒப்புதலுடனேயே வெளியிடப்படும். முக்கியமான பிரச்சினைகள் எழும் நேரங்களில் ஆசிரியரே தலையங்கங்களை எழுதுவார். தலையங்கங்கள் எழுதுவதிலும், கட்டுரைகள் எழுதுவதிலும் தீவிர அக்கறை கொண்டவர் ஏ.என். சிவராமன். தலையங்கங்கள் பெயர்போட்டு எழுதப்படுவதில்லை என்றாலும் கூட, அவை ஆசிரியர் ஒப்புதலுடன் வெளிவந்ததாகவே கருதப்படும்.

அவசர நிலைப் பிரகடனம்

நாட்டில் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளின் போது அவர் எழுதிய கட்டுரைகள், தலையங்கங்கள் குறிப்பிடத்தக்கன. பத்திரிகைச் சுதந்திரத்தை அவர் முதன்மையாகக் கருதியவர். அவசர நிலைப் பிரகடனம் செய்யப்பட்ட காலத்தில் அவரது உறுதிப்பாடான நிலை என்றைக்கும் நினைவுகூரத்தக்கது. நாட்டில் 1975-ஆம் ஆண்டு ஜூன் 26-ஆம் தேதி அவசர நிலைப் பிரகடனம் செய்யப்பட்டது. அன்றைய தினம் வந்த தினமணியில், சில காரணங்களுக்காக இன்று தலையங்கம் இல்லை என்று கூறப்பட்டுள்ளது. ஜூன் 27-ஆம் தேதி தினமணியில், 'கட்டுரைக்கு ஒரு நாள் ரஜா' என்ற சிறு செய்தி வெளியிடப்பட்டுள்ளது. 'குறிப்பிட்டுச் சொல்ல இயலாத காரணங்களால் இன்று பத்திரிகை 4 பக்கங்கள்தான். பெட்ரோலியக் கட்டுரைக்கு இன்று ரஜா - ஆசிரியர்' என்று அச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

> இந்தியாவில் சுதந்திரத்துக்குப் பிறகு முதல் தடவையாக இன்று பத்திரிகைகள் மீது தணிக்கை முறை அமலாகியது. 1971- அக்டோபரில் நடந்த போரின்

> போது முதல் அவசர நிலைப் பிரகடனம் செய்யப்பட்ட சமயத்தில் பத்திரிகைத் தணிக்கை இருக்கவில்லை. 1965-இல் இந்தியா - பாகிஸ்தான் போரின் போது பத்திரிகை ஆலோசனை முறை அமலில் இருந்தது

என்று தினமணியின் (27-6-1975) முதல் பக்கப் பெட்டிச் செய்தியில் கூறப்பட்டிருந்தது.

'சில காரணங்களால்,இரண்டாவது நாளாக இன்றும் இன்றைய அரசியல் நிலைமை பற்றி தலையங்கம் இல்லை' என்று தினமணியில் (28-6-1975) செய்தி வெளியிடப்பட்டுள்ளது. ஜூன் 29-ஆம் தேதி நாளிதழின் தலையங்கப் பக்கத்தில் காலி இடம் விடப்பட்டுள்ளது. அதையடுத்து மெக்ஸிகோவில் நடக்கும் மகளிர் மாநாடு என்பது பற்றிய துணைத் தலையங்கம் எழுதப்பட்டுள்ளது. ஜூன் 30-ஆம் தேதி தினமணி நாளிதழின் தலையங்கப் பக்கத்தில், தலையங்கமே இல்லை என்ற குறிப்பு வெளியிடப்படுகிறது. அவசர நிலைக் காலத்தில் பத்திரிகைத் தணிக்கை இருந்த சமயத்தில் வெளியான கீழ்க்காணும் தலையங்கம் (தினமணி 13-7-1975) யாருக்கும் அஞ்சாத அவரது நேர் கொண்ட பார்வையை விளக்கும்:

> ராஷ்டிரபதி நெருக்கடிப் பிரகடனம் வெளியிட்ட பிறகு, இரண்டு மாதத்துக்குள்ளாக 'பார்லிமெண்ட்' மூலம் ஊர்ஜிதம் செய்யப்பட்டால்தான் , அதற்கு மேல் அது நீடிக்கலாம் என்பது அரசியலமைப்பு சாசனத்தின் தேவை. இதை உத்தேசித்து லோக் சபையும் ராஜ்ய சபையும் இம்மாதம் 21 இல் கூட்டப்பட்டுள்ளன. ஆளும் கட்சிக்குப் பெரிய மெஜாரிட்டி இருப்பதால் நெருக்கடிப் பிரகடனத்தை ஊர்ஜிதம் செய்து தொடர்ந்து அமலிலிருக்கலாம் என்ற தீர்மானம் நிறைவேறுவதில் எந்தவித சிரமமும் இருக்காது; நெருக்கடிப் பிரகடனம் ஏன் அவசியமாயிற்று என்பதற்குப் பிரதமர் இந்திரா பல தடவைகள் ரேடியோ மூலமும் , சொற்பொழிவுகள் மூலமும் தமது காரணங்களை மிகவும் விரிவாகச் சொல்லியாய் விட்டது. நிலைமை பற்றிய மதிப்பீடு, தேவைகள், பிரகடனத்தால் ஏற்படக்கூடிய பலன்கள்,

சர்க்கார் எடுத்துள்ள நடவடிக்கைகள் ஆகிய நான்கு அம்சங்களிலும் பிரதம மந்திரியின் கொள்கைக்கு ஆதரவாக உள்ளவர்கள், பிரதம மந்திரி வெளியிட்ட கருத்து சரியே என்று அறிவித்தாகிவிட்டது. ஏதோ அரை டஜன் உறுப்பினர்கள், ஆளும் கட்சியிலிருந்து "சஸ்பெண்ட்" செய்யப்பட்டனர் என்பதைத் தவிர, ஆளும்கட்சிக்குள் அபிப்பிராய பேதம் இல்லை. ஆகையால், சர்க்காரின் பிரேரணை விவாதம் ஏதும் இல்லாமலேயே நிறைவேற முடியும். அரசியலமைப்பின் சம்பிரதாயத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதில் எவ்விதச் சிரமமும் இருக்காது. இந்தக் கூட்டத்தில் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களில் எத்தனை பேர் ஆஜராக இருக்க முடியும் என்பது தெரியவில்லை. பார்லிமெண்ட் உறுப்பினர்கள் யாரேனும் கைது செய்யப்பட்டுள்ளார்களா, யார் யார் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்பது ஒருவேளை லோக் சபை சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்டிருக்கலாம். ஆனால், அது அதிகாரப்பூர்வமாக பார்லிமெண்டில் அறிவிக்கப்படுமா, அறிவிக்கப்பட்டால் பத்திரிகைகளில் பிரசுரமாகுமா, பிரசுரமாவது, நெருக்கடிப் பிரகடனத்தின் நோக்கங்கள் நிறைவேறுவதற்கு இடையூறு என்று கருதப்படுமா? லோக் சபையிலோ, ராஜ்ய சபையிலோ எதிர்க்கட்சிகள் ஏதேனும் "எதிர்வாதம்" செய்தால், அவர்களது பேச்சைப் பிரசுரிக்கலாமா? லோக் சபை உறுப்பினர்களில் எவரேனும் இப்போது "காவலில்" இருந்தால், அவர்கள் லோக் சபையில் கலந்து கொள்ள வசதியளிக்கப்படுமா? - என்பதெல்லாம் தெரியவில்லை. இப்படிப்பட்ட ஒரு நிலையில் பார்லிமெண்டின் கூட்டம் ரகசியமாக நடத்தால் என்ன என்ற கேள்வி சிலர் மனதில் தோன்றுவது இயல்பு. ஆனால், அதுபற்றி நாம் எதுவும் சொல்வதற்கில்லை."

"....ஆடிப்பட்டம் தேடி விதை' என்று தமிழ்நாட்டில் சொல்லுவதுண்டு. அதற்கிணங்க பருவாவும் ஆடி

மாதத்தில் 'சொத்துரிமை இல்லாத ஜனநாயகம்' என்ற புதிய விதையைத் தெளித்திருக்கிறார். இது முளைவிட்டு, செடியாவதற்கு முன்பே இன்னும் அதிக பலன் அளிக்கக் கூடிய பல புதிய விதைகள் தெளிக்கப்படலாம். அந்த உரிமை, இந்த உரிமை என்றெல்லாம் கோருவதற்கு இடம் கொடுப்பதால்தானே தகராறுகள் எழுகின்றன. மக்களின் நலனை முன்னிட்டு உரிமைகளற்ற ஜனநாயகம் வேண்டும் என்று வேறு எங்கேயாவது ஒருவர் புதிய விதையைக் கண்டுபிடிக்கலாம். சிந்தனைப் புரட்சியில் இந்தியா யாருக்கும் இளைத்ததல்ல என்பதை சந்தேகத்திற்கிட மில்லாமல் தொடர்ந்து ருசுப்பித்துக் கொண்டே இருக்க வேண்டும். விதை விதைப்பவன்தான் தினை அறுக்க முடியும். ஆயினும், ஒரு விஷயத்தில் சிறிது உஷாராகியிருப்பது நல்லது. மனிதப் பிறவிகளே இல்லாத ஜனநாயகம் என்ற அளவுக்கு சிந்தனைப் புரட்சி போய்விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்."

என்று தினமணியில் (30-7-1975) எழுதப்பட்டது அவரது உறுதிக்கு மற்றொரு சான்று.

அவசர நிலையை எதிர்த்த காமராஜ் மறைவுக்கு பிறகு, அவரது பெயரைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட காரியங்களை மறைமுகமாகக் கண்டித்து, 'காமராஜ் பெயரால்' என்று தினமணியில் (9-10-1975) எழுதப்பட்ட தலையங்கம், தணிக்கைச் சூழலில் கிடைக்கின்ற வாய்ப்பை எப்படிப் பயன்படுத்திக் கொண்டார் என்பது விளங்கும்:

"சில உண்மைகளை பகிரங்கமாக வெளியிட்டுச் சொல்வதற்கு காலம் இன்னும் பக்குவமானதாக அறிவிக்கப்படவில்லை. ஒரே ஒருவிதமான கருத்துகள் மட்டுமே இப்போது ஒளிவு மறைவு இன்றி வெளிவர முடியும். அக்டோபர் 2 ஆம் நாளன்று தினமணி எழுதின

இரங்கலில் பேனா ஸ்தம்பித்தற்கு இந்தச்சூழ்நிலையும் ஒரு காரணம் எனலாம். ஒருவரது குண நலச் சிறப்புகளையும் அவர் கொண்ட லட்சியங்கள் சிலவற்றையும் குறிப்பிடுவது வேறு விஷயம். ஆனால் அவர் உயிருடன் இருந்தால், இன்று மேற்கொள்ளக் கூடிய உடனடியாக காரியம் என்ன என்று ("இஷ்யூவாக") ஹேஸ்யம் செய்வது மறைந்தவரின் அமைதியைக் குலைப்பதாகும். அவர் என்ன செய்யப் போகிறார் என்பதை தன் வாழ்நாளில் அவரே யாரிடமும் சொல்வது வழக்கமில்லை. "பார்க்கலாம்" என்பார். அவ்வளவுதான். "நடக்கும்போது பார்த்துக் கொள்ளுங்கள்" என்பது அதன் பொருள். அப்படிப்பட்டவரைக் குறித்து அவர் என்ன செய்திருப்பார் என்று பெரிய சர்ச்சை செய்வது உடனடியாக நிலவ வேண்டிய உணர்ச்சிச் சூழ்நிலையின் அமைதிக்குப் பொருத்தமற்றது; லெளகீகமாகக் கூட உசிதமாக இருக்காது. காமராஜின் மரணமே தேசத்துக்கு ஒரு நெருக்கடிதான். இந்த நெருக்கடியின் கடுமை தணிந்து கண்ணீர் காய்வதற்கு சிறிது சாவகாசம் எடுத்துக் கொள்வது முடிவுகளின் நிதானத் தன்மைக்கு உதவியாகும்".

பத்திரிகைகளின் சமூகப் பொறுப்பு

நாட்டில் இக்கட்டான சூழ்நிலைகள் ஏற்படும்போது, பத்திரிகைகள் எத்தகைய சமூகப் பொறுப்புடன் இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாகத் திகழுகிறார் சிவராமன். மகாத்மா காந்தி சுட்டுக் கொல்லப்பட்டபோது, 'இது காந்திஜியின் தேசம்; இங்கு கலகம் கூடாது' என்று தினமணியில் (3-2-1948) கட்டம் கட்டி செய்தி வெளியிட்டார். 'காந்திஜியிடம் நமக்குள்ள அன்புக்கு அறிகுறியாக இப்போது முக்கியமாகக் கவனிக்க வேண்டியது இருக்கிறது. அதாவது இப்போது நாட்டில் பூர்ண அமைதி நிலவுவது மிகவும் அவசியம்' என்று அதில் குறிப்பிட்டார்.

"உலகத்தில் பலவிதமான துவேஷங்கள் இருந்து வருகின்றன. துவேஷத்தை கிளப்புவதற்கு வேண்டிய சம்பவங்களும் நிகழ்ந்து வருகின்றன. துவேஷத்தின் மூலம் ஊக்கத்தைக் கிளப்புவது மிகவும் சுலபம். ஒரு மதத்துக்கும் மற்றொரு மதத்துக்குமிடையே, ஒரு ஜாதிக்கும் மற்றொரு ஜாதிக்குமிடையே தொழிலாளிக்கும் முதலாளிக்குமிடையே, ஏழைக்கும் பணக்காரனுக்குமிடையே துவேஷத்தைப் பரப்புவதன் மூலம் ஊக்கத்தைக் கிளப்பி, பொய்களை நம்பும்படி செய்து வெற்றியும் காணமுடியுமா? ஆனால் அந்த வெற்றியுடன் கலந்து கிடைக்கும் வேறு விளைவுகள் வெகு சீக்கிரத்தில் வெற்றியைப் பயனற்றதாகச் செய்து விட முடியும். ஆகையால் துவேஷத்தைக் களைவதையே மகாத்மா, தமது முக்கிய வேலையாகக் கருதினார். அந்த முயற்சியின் மத்தியிலேயே அவரது ஆவி பிரிந்தது. ஆகையால் அவர் போதித்த அறநெறியை நாம் எப்போதும் கருத்தில் கொள்வோமாக"

என்று 'தினமணி' தலையங்கம் தீட்டியது.

பிரதமர் இந்திராகாந்தி கொல்லப்பட்டதை அடுத்து, ஏற்பட்ட கலவரங்களை அடுத்துத் தினமணியில் 'யமுனைக்கரை வேள்வியும் நம் பிரார்த்தனையும்' என்ற தலையங்கம் வெளியிடப்பட்டது. அவரது ஆசிரியத்துவத்துவப் பொறுப்புணர்வுக்கு மற்றுமொரு சான்றாகும். வழக்கமாக விரிவாக எழுதும் சிவராமன், இத் தலையங்கத்தை மிகச் சுருக்கமாக எழுதியுள்ளார். அவரது நறுக்குத் தெறித்த சிறப்பான நினைவுகூரத்தக்க தலையங்கங்களில் ஒன்று இது.

"ஆயிரம் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக, எத்தனையோ விபத்துகளுக்கிடையிலும் தொடர்ச்சி விட்டுப் போகாமல் தமது பண்பாட்டையும் தனித்தன்மையையும் காப்பாற்றி வந்துள்ள நாடுகள்

ஒரு சிலவே. அவற்றுள் இந்தியா ஒன்று. கிரீஸ் பாபிலோனிய நாடுகள் நாகரீகத்தின் தொட்டில்களாக இருந்ததுண்டு; ஆனால் அன்றிருந்த கிரீஸ், பாபிலோன் வேறு; இன்றுள்ள கிரீஸ், பாபிலோன் வேறு; அங்கெல்லாம் அன்று புனிதமாகக் கருதப்படவில்லை; அதாவது பழமையுடன் தொடர்பு இல்லை. இந்த விஷயத்தில் இந்தியா வேறு வகையானது. ஏதோ ஒரு தெய்வீக சக்தி இந்நாட்டில் பண்பாட்டின் தொடர்ச்சி துண்டிக்கப்படாமல் காப்பாற்றியுள்ளது; புதுமை பழமையுடன் இணைந்து புத்துயிருடன் பாரம்பரியம் நீடிக்கும்படி செய்துள்ளது. இதற்கு முக்கியமான காரணம். சகிப்புத்தன்மை. இந்த சகிப்புத் தன்மை உறுதி பெறுவதாக!

எந்தச் சக்தியானது இதுவரை நம் தேசத்தைக் காப்பாற்றியுள்ளதோ அதே சக்தி, இப்போதைய விபத்துகளிலும் இந்நாட்டுக்குத் துணை நின்று நமது பண்பாட்டினைப் பாதுகாக்கும் என்ற நன்னம்பிக்கையுடன் அவரவர் நம்பும் கடவுளை, காரண காரியங்களுக்கு அப்பாற்பட்ட ஒன்றின் "அருளினை" வேண்டிப் பிரார்த்திப்போமாக.

புதனன்று ஸப்தர்ஜங் சாலையில் ஒரு வீட்டு முற்றத்தில் நடந்தது படுகொலை. அதற்குப் பின்னர் டில்லியில் நடந்த வன்செயல் நிகழ்ச்சிகள் பாரதமாதாவை சித்திரவதை செய்யும் காரியும். சித்திரவதை இன்றே நின்று போய் எல்லோரது நினைவிலிருந்தும் மறையும்படி ஆண்டவன் அருள்வானாக.

சனிக்கிழமையன்று யமுனைக் கரையில் மேலே கிளம்பும் தீச்சுடரும் ஆவியும் நமது உள்ளங்களை தூய்மைப்படுத்தி நாட்டின் பண்பாட்டினைக் காத்து நாட்டில் சாந்தி (அமைதி) நிலவும்படி செய்யப்பட்டும்.

" ...திசோ திசோ அக்னே
பரிபாஷி தோராத்"

"ஏ தீக்கொழுந்தே (அக்னியே) - எல்லா திசைகளிலிருந்தும், (வரக்கூடிய) கோரச் செயல்களிலிருந்து காத்தருள்" என்பது அதர்வ வேதத்தில் உள்ள ஒரு "மந்திரம்"; பிரேதத்தை தகனம் செய்யும்போது தீக்கொழுந்தைப் பார்த்துக் கொண்டு செய்யும் பிரார்த்தனை.

அதர்வன வேதம் 18-4-9

அக்னே - ஏ நெருப்பே; திசோ, திசோ - எல்லாத் திசைகளிலிருந்தும் (எந்த திக்கிலிருந்தும் வரக்கூடிய); கோராத் - கொடும் செயல்களிலிருந்து; பரிபாஷி - காப்பாற்றுவாயாக

இதுவே இப்போது இந்தியத் தாயின் சார்பில் நம் எல்லோரது பிரார்த்தனையாகவும் இருக்கட்டும்"- (3-11-84) பகல் 12 மணி.

இந்திராகாந்தி மறைவையொட்டிச் சீக்கியர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதல்களைக் கண்டு, "இந்த பித்துக்குளித்தனம் உடனே நிற்கட்டும்" என்று தினமணி (3-11-1984) தலையங்கம் எழுதியது. வன் செயல்களில் ஈடுபடுபவர்களைக் கடுமையாகச் சாடியது.

நாட்டில் முக்கிய நெருக்கடியான சம்பவங்கள் நிகழும்போது, பத்திரிகைகளுக்கு இருக்க வேண்டிய தார்மிகப் பொறுப்புணர்வை உணர்ந்து செயல்பட்டவர் சிவராமன் என்பதற்குப் பல எடுத்துக்காட்டுகளைக் கூற முடியும். நாட்டில் பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் மனக்கசப்பு ஏற்பட்ட சமயத்தில் தினமணியின் முதல் பக்கத்தில் கையெழுத்திட்ட தலையங்கத்தை வெளியிட்டார் சிவராமன்.

தேர்தலைப் பற்றித் தலையங்கம்

தேர்தல்களின்போது, கட்சி அரசியலையும் தாண்டித் தேர்தல் முறைகளில் சீர்திருத்தம், நேர்மையான வாக்குப் பதிவு, மக்கள்

யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பன போன்ற கருத்துகளை சிவராமன் வெளியிடுவது வழக்கம். தேர்தல் சீர்திருத்தத்தின் மூலம் நாட்டில் உண்மையான ஜனநாயகம் தழைக்கும் என்ற நோக்கில் பல்வேறு நாடுகளில் தேர்தல் எப்படி நடைபெறுகிறது. எந்த நடைமுறை நமக்கு உகந்ததாக இருக்கும் என்பது குறித்துப் பல்வேறு சந்தர்ப்பங்களில் தொடர்ந்து ஏராளமான கட்டுரைகளை எழுதியுள்ளார்.

> "தேர்தல்களில் வோட்டர்கள் லஞ்சம் வாங்கிக் கொண்டு வோட்டுப் போடுவது நம் கையில் தரப்படும் ராஜலக்ஷ்மியை அவமதிப்பதாகும். நமக்கு மானக்கேடு ஆகும். பணத்துக்காக வோட்டுச் செய்வதுதான் லஞ்சம் என்று நினைக்காதீர்கள். "உங்கள் ஜாதிக்காரரை அபேட்சகராக நிறுத்தியிருக்கிறோம். வோட்டுப் போடுங்கள்" என்று ஒருவன் கூறினால் அவன் லஞ்சம் கொடுக்க முன்வருவதாக அர்த்தம். பொது நலத்தை, அதாவது தேச நலத்தை மறந்து, ஜாதியின் பெயரால் வோட்டளிப்பது லஞ்சம் வாங்கி வோட்டளிப்பதற்கு சமமேயாகும். அது ராஜலக்ஷமிக்குத் துரோகம். வோட்டளிப்பவருக்கு மானக்கேடு"

- இது தினமணியில் (6-2-1967) வெளியான முதல் பக்கப் பெட்டிச் செய்தி.

தேர்தலையொட்டி எழுதப்பட்ட, "விஷயம் தெரிந்தவர்கள் சோர்வடையலாகாது" என்ற தலையங்கம் (தினமணி 12-2-1967) தேர்தலில் வாக்காளர்களின் சிந்தனையைத் தூண்டும் வகையில் எழுதப்பட்டுள்ளது.

> "கட்சிகளின் பிரசாரம் முழுவதையும் மறந்து விட வேண்டும். கட்சியின் வாக்குறுதிக்கும்கூட அர்த்தமில்லை. தேர்தல் அடுத்து வருவதை முன்னிட்டு அவசர அவசரமாக அளிக்கப்படும் சலுகைகளை மறந்து விட வேண்டும். "நாங்கள் பதவியில் இல்லாவிடில்", (நாங்கள் பதவிக்கு வராவிடில்) குடி முழுகிப் போய்விடும் " என்ற பேச்சை மிரட்டல் என்று மதிக்க

வேண்டும். அனுபவமில்லாத கட்சி ஆளமுடியாது என்பது தவறான வாதம். "ஸ்திரத்தன்மை" பற்றி பேச்சும் அப்படித்தான். "மறுபடி தலையெடுக்க முடியாதபடி தோற்கடிப்போம்" என்பதை யார் சொன்னாலும், பதவிக்கு வந்து ஜனநாயக விரோதமான முறையில் அதிகாரத்தை பயன்படுத்தி, 'எதிர்க்கட்சிகளை ஒடுக்குவதையே முக்கிய நோக்கமாகக் கொள்வோம்' என்று கூறுவது போலவே ஆகும். இம்மாதிரி மிரட்டும் கட்சி எதுவாயிருந்தாலும், அந்தக் கட்சி ஜனநாயகப் பதவிக்கு லாயக்கில்லாதது என்றே நடுநிலைமையாளர் மதிக்க வேண்டும்.

பதவியில் இல்லாத போது பொறுப்புள்ளவர்களாக இருந்தவர்கள் பதவிக்கு வந்த பிறகு பொறுப்புணர்ச்சியற்று நடப்பதுண்டு. பொறுப்புணர்ச்சி இல்லாமல் நடந்து வந்த கட்சிகள் பதவிக்கு வந்த பிறகு பொறுப்புணர்ச்சியுடனும் அடக்கத்துடனும் நடந்து கொள்வதும் உண்டு. இதுவரையில் ஒரு கட்சிதான் பதவியில் இருந்திருக்கிறது. ஆகையால் ஆளும் கட்சியையும் எதிர்க்கட்சியையும் "ஒப்பு நோக்கி" எது நல்லது என்று பொறுக்கும் நிலைமை இன்னும் ஏற்படவில்லை. ஆகையால், ஆளும் கட்சி தம்மிடம் "பரீக்ஷை கொடுக்க ஆஜராகியிருப்பதாக" நடுநிலையாளர்கள் ஒவ்வொருவரும் நினைத்துக் கொள்ள வேண்டும்.

1. அறிவு 2. திறமை 3. பொது நலப்பற்று 4. நிர்வாக நேர்மை 5. ஜனநாயக நல்லொழுக்கம் இவற்றின் அடிப்படையில் ஆளும் கட்சி பற்றி தெய்வ சாட்சியாக மதிப்பிட்டு "பாஸ்", "பாஸில்லை" என்பதை அறிவியுங்கள்"

காங்கிரஸுக்கே வோட்டு கொடுங்கள் என்று பிரசாரம் செய்து வந்த தினமணி, 1967 தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்று வாசகர்களுக்கு எதையும் சொல்லவில்லை.

"இன்ன கட்சி ஜெயித்தால் குடிமுழுகிப் போய்விடும். அல்லது இன்ன கட்சி ஜெயிக்காவிட்டால் குடிமுழுகிப் போய்விடும் என்பது தினமணியின் மனப்பான்மை அல்ல; எந்தக் கட்சி ஜெயித்தாலும் ஜனநாயகப் பண்புகள் வளருவதில் அக்கறை கொள்ள வேண்டும் என்பதும், இரு கட்சி நிலைமை உருவாக வேண்டும் என்பதும்தான் இப்போதைய தேர்தலில் தினமணி முக்கியமாக மதிக்கும் விஷயம். ஆகையால், ஜனநாயகத்தின் தேவைகளை வற்புறுத்துவதோடு வோட்டர்கள் கவனிக்க வேண்டியது என்ன என்பதைக் கூறுவதுதான் பத்திரிகைகளின் கடமை என்று தினமணி கருதுகிறது."
- தினமணி தலையங்கம் (15-2-1967)

'எனக்கு இயற்கையாகவே அபிமானமுள்ளது காங்கிரஸ் ஸ்தாபனம்' என்று அவர் குறிப்பிட்டாலும்கூட, 'எனக்குப் பிடித்த கட்சி இன்னும் உதயமாகவில்லை' என்பதையும் கூறியுள்ளார் சிவராமன்.

"... எந்தக் கட்சி பதவிக்கு வந்தாலும், "எனக்குப் பிடித்த கட்சியே" பதவிக்கு வந்தாலும், சர்க்காரில் அது செய்யும் காரியங்களில் குற்றங் குறைகளை எடுத்துக் காட்டி விளக்குவது என் "தொழில்" என்பதையும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

'தேர்தல் போட்டியின் போது வேட்பாளர் களிடையேயும் வேட்பாளரின் ஆதரவாளர்களிடையேயும் ஏற்பட்ட மாச்சரியங்களோடு ஊர் ஜனங்களிடையேயும் மாச்சரியங்கள் ஏற்பட்டிருக்கும். ஆனால் இவற்றை யெல்லாம் ஏதோ நாடக மேடையில் ஏற்பட்ட "சண்டைகள்" போல, அல்லது "கிரிக்கெட் மாட்ச்" போல மதித்து, மீண்டும் சௌஜன்யம் ஏற்படுவதிலேயே எல்லோரும் கவனம் செலுத்த வேண்டும்'

என்ற அறிவுரையையும் (தினமணி தலையங்கம் 24-2-1967) அவர் கூறியுள்ளார்.

அவசர நிலைக்குப் பிறகு 1977-இல் ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்த போது எழுதிய தலையங்கத்தில் (25-3-1977), "ஜன சமுதாயத்திலுள்ள மக்களில், ஆளும் கட்சியைச்சேர்ந்தவர்கள் "ஸிடிஜன்" (**Citizen**); அரசுரிமையுள்ளவர்கள்; மற்றவர்கள் (**Subjects**) அவர்களைத் தொழுதுண்டு வாழ வேண்டும் என்ற அநாகரிகமான நிலைமை கூடாது. "ஆளுவோர்", "ஆளப்படுவோர்" என்ற பாகுபாடு கூடாது" என்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கட்சியும் அரசும் ஒன்றே என்று கருதும் போக்குக்கு முடிவு கட்ட வேண்டும் என்பதும் அவரது கருத்து.

இந்திராகாந்தி மறைவுக்குப் பிறகு 1984-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலையொட்டித் தினமணியில் (23-12-1984) எழுதிய கட்டுரையில்,

> "...வெறும் தத்துவ வாதங்களில் சிக்காமல் காரியசிருஷ்டியுடன் கட்சி நலனைவிட தேச நலனையே முக்கியமாகக் கருதும் மனப்பான்மை உள்ளவர்கள் தலைமையில் தேச ஐக்கியம், ஜனநாயகம், பொருளாதார வளர்ச்சி என்ற மூன்று குறிக்கோள்களுடன் கருத்தொற்றுமை அடிப்படையில் ஒரு அரசு அமைய வேண்டும்"

என்று எழுதினார்.

> "நம் நாட்டில் கட்சிகளிடையே கொள்கை அளவில் வித்தியாசம் மிக மிக குறைவு. ஆகையால் எந்தக் கட்சி பதவிக்கு வருகிறது என்பதைவிட அது என்ன பாணியில் செயல்புரிகிறது என்பதுதான் முக்கியமானது"

என்பதையும் அதில் வலியுறுத்தியுள்ளார்.

தமிழக அரசு ஊழியர்களின் ஊதியம் தொடர்பாக ஊதியக் குழு அமைக்கப்பட்டபோது, அது தொடர்பாகப் பல்வேறு விவரங்களைத் திரட்டி வாசகர்களுக்கு அளித்தார். இக்கட்டுரைகள் போர் அடித்தாலும் படிக்க வேண்டும் என்றார்.

"சம்பளங்களைத் தெரிந்து கொள்ள விரும்பாதவர்கள் இன்றைய இந்தக் குறிப்புகளைப் படிக்க வேண்டாம். நிச்சயமாகவே போர் அடிக்கும்! ஆனால் பிரச்சினையில் ஊழியர்களுக்குத்தான் அக்கரை. நாம் ஏன் படிக்க வேண்டும்? என்று யாரும் நினைக்காதீர்கள். இரண்டு காரணங்களால் ஊழியர் பிரச்சினை என்பது பொது ஜனப் பிரச்சினையுமாகும். 1. திறமையும் திருப்தியும் ஒழுங்குமுள்ள ஒரு ஊழிய வர்க்கம் இருப்பது சமூகத்துக்கு இன்றியமையாத தேவை. 2. ஊழியம் அளவு கடந்து உயர்ந்தால் வரிகள் கணிசமாக உயர வேண்டியிருக்கும். ஆகையால் யாருக்கோ வந்த விருந்து என்று பொது ஜனங்கள் நினைக்கக்கூடாது. மேலே சொன்ன 2 நோக்கங்களுக்குமிடையே சமரசம் காண்பதுதான் சம்பள கமிஷன் முன்னுள்ள அறைகூவல்"

இது கட்டுரையின் இடையே உள்ள பெட்டிச் செய்தி (தினமணி 25-8-1984) அவரது குறிப்பு.

ஆசிரியர்கள் எழுதும் கடிதங்களில் அஸிஸ்டென்ட் என்ற சொல் சில இடங்களில் யுடிஸி (கிளார்க்) என்பதைக் குறிக்கும். சில இடங்களில் ஆசிரியரைக் குறிக்கும். இதேபோல வாசகர்களும் திணறக்கூடாது என்பதற்காக அது பற்றியும் தனிக் குறிப்பை எழுதியுள்ளார் அவர்.

"ஹிந்து மதத்துக்கும் சீக்கிய மதத்துக்குமிடையே வித்தியாசம் என்பது அப்போதைய வர்ணாசிரமம் ஜாதி அமைப்பை குருநானக் ஏற்கவில்லை என்பதுதான். தத்துவ வேறுபாடு இல்லை என்பதை அவர் போதித்த மூல மந்திரத்தில் இருந்து அறியலாம். ஹிந்துகளில் ஹரிஜன் இருப்பது போல சீக்கியரில் மஜ்ஹபி என்பவர் தாழ்ந்த ஜாதியாக மதிக்கப்படுவது வழக்கம் தீண்டாமை இல்லாவிட்டாலும் வேற்றுமை உண்டு" என்று 'சீக்கிய வரலாறு பற்றிய சில சொற்கள்' என்ற

கணக்கன் குறிப்புகளில் (தினமணி 2-8-1984) எழுதியுள்ளார்.

"ஜாதி முறைதான் பிரிவினை உணர்ச்சிக்குக் காரணம். குழந்தைகளுக்குக் கல்வியளிக்கும்பொழுதே ஜாதி முறை பற்றிய புதிய மனப்பான்மையை ஊட்ட வேண்டும். ஜாதிய உணர்ச்சிகளை ஒழித்துவிடும்படி உங்களை வேண்டிக் கொள்கிறேன். சமூக சேவை செய்ய வேண்டும் என்ற உணர்ச்சியையும் சமூகத் துறையிலோ அல்லது பொருளாதாரத் துறையிலோ தாழ்ந்த நிலையிலிருப்பவர்களிடத்தில் அக்கரை காட்டும் மனப்பான்மையை ஆசிரியர்கள் சிறுவர்களுக்கு ஊட்ட வேண்டும்"

என்று ஹிந்து தியாலஜிக்கல் ஸ்கூல் ஆசிரியர்கள் சங்கத்தில் பேசும்போது (தினமணி 9-8-1947) அவர் கூறியுள்ளார்.

அதேசமயம், கீழவெண்மணியில் நடந்த கோரச் சம்பவத்தைப் பற்றிய செய்தியில் உள்ள மேலோட்டமான கண்ணோட்டம் நம்மை ஆச்சரியப்படுத்துகிறது. "கிஸான்களிடையே மோதல் 42 பேர் வெந்து மரணம்" என்று தலைப்புச் செய்தி (27-12-1968) தந்த 'தினமணி', கீழவெண்மணியில் நடந்த அந்தக் கோரச் சம்பவம் குறித்து, "பரிதாபமான கோர நிகழ்ச்சி" என்று தலையங்கம் (28-12-1968) தீட்டியது.

"...வெண்மணி சம்பவம் ஒரு குறிப்பிட்ட கூலிக்கு வேலை செய்த தொழிலாளர்களுக்கும் அதை எதிர்த்த தொழிலாளர்களுக்கும் ஏற்பட்ட சண்டை. இதை நிலச்சுவானுக்கும் கிஸான்களுக்கும் நடந்த சண்டைபோல கம்யூனிஸ்ட்டுகள் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். . . வன்செயல்களைத் தூண்டுவோரை சர்க்கார் பார்த்து கொள்ளும். நாம் பழிக்குப் பழி வாங்க வேண்டியதில்லை என்ற உணர்வு மக்களிடையே பரவ வேண்டும்"

என்று அந்தத் தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது. ராஜமானிய ஒழிப்பு, இந்தியாவின் தார்மீகப் பண்புகளுக்கு விரோதமானது என்று தினமணியில் (4-12-1971) தலையங்கம் வந்துள்ளது. இதுபோல சர்ச்சைக்குள்ளான சில தலையங்கங்களை சிலர் சுட்டிக்காட்டுவதுண்டு.

பெரியார் மறைவு - தினமணித் தலையங்கம்

கருத்துரீதியாக மாறுபாடு கொண்டவர்களின் மறைவின் போதும் அவர்களது உண்மைத் தொண்டினை நினைவுகூரத் தயங்காதவர் என்பதற்குப் பெரியார் மறைவின் போது தினமணியில் எழுதப்பட்ட தலையங்கம் (25-12-1973) ஓர் சான்று.

> "...பகுத்தறிவு இயக்கம் பெரியாரை கடவுள் மறுப்பு இயக்கத் தலைவராக்கியது. தமது பிரசார பாணியில் அவர் கையாண்ட சில நடைமுறைகள் சர்ச்சைக்கு உரியவை. மத நம்பிக்கையாளரது மனதைப் பெரிதும் புண்படுத்தும் ரீதியில் அவை அமைந்திருந்தன. எனினும் அவரது உண்மையுணர்வை எவரும் எப்போதும் சந்தேகித்ததில்லை. அவரது சீர்திருத்தப் பணிகளின் மூலம் சமுதாயத்தில் ஒரு புதிய விழிப்பு ஏற்பட்டு, பல நல்ல திருப்பங்களையும் தோற்றுவித்தது என்பதை எல்லோருமே ஒப்புக் கொள்வர்...பெரியார் என்றும் தந்தை என்றும் பலரால் மதிக்க பெற்ற திரு ஈ.வெ.ராமசாமி காலமானது தமிழ்நாட்டின் பொது வாழ்வுக்கு ஓர் பேரிழப்பாகும்".

அண்ணா மறைவு - தினமணித் தலையங்கம்

இதேபோல அண்ணா மறைவையொட்டிக் கண்ணியம் நிறைந்த ஒரு தலைமகன் மறைவு என்று தினமணியில் தலையங்கம் (3-2-1969) தீட்டப்பட்டது.

> "...எழுத்தாளர் மட்டுமல்ல. பெரிய சிந்தனையாளர். அந்தக் காரணத்தால் அவர் கட்சி பேதமின்றி எல்லோரது உள்ளத்தையும் கவர்ந்தவர். அரசியல்

கிளர்ச்சியின் ஒரு கட்டத்தில் அவர் தேசப் பிரிவினையை வற்புறுத்தி வந்த காலம் ஒன்று இருந்தது. ஆனால், சீனத்தாக்குதல் ஆரம்பித்தவுடன் அவர் அதை எங்கோ நடக்கும் ஆக்கிரமிப்பு என்று நினைக்காமல், காலில் முள் தைத்தாலும் கண்ணில் நீர் வருவது போல, தமிழ்நாடே தாக்கப்பட்டது போன்ற உணர்ச்சியுடன் பேசினார். சீனாவை எதிர்ப்பதற்கான யுத்த முயற்சியில் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும், வேறு எதுவும் அதைவிட முக்கியமானதில்லை என்றும் அறிவித்தார். சீனத்தாக்குதல் பற்றி அவர் இவ்வாறு கூறியபோதே, தேச ஒருமைப்பாட்டில் அவரது நம்பிக்கையையும், ஆர்வத்தையும் தெரிவித்தாயிற்று. இந்த ஒருமைப்பாடு இல்லாமல் இந்தியாவின் எந்தப் பகுதியும் முன்னேற முடியாது. இந்த உண்மையை அவர் பூர்ணமாக உணர்ந்தவர் என்பதற்கு இது ஒரு அத்தாட்சி. பின்னர் திமுக கட்சியில் தீர்மானம் நிறைவேற்றி பிரிவினை கோரிக்கை கைவிடப்பட்டது வெறும் அரசியல் சூழ்ச்சியல்ல. இது தமிழகத்தின் நெடுநாளைய நலனைக் கருதி செய்த முடிவு. ....சில பிரச்சினைகளில் தீவிரவாதியாக தோன்றினாலும், அந்தத் தீவிரவாதம் சில எல்லைகளைத் தாண்டிவிடாதபடி பார்த்துக் கொள்ளும் நிதான புத்தி அவரிடம் இருந்தது..."

- இப்படி அந்தத் தலையங்கத்தில் அவருக்குப் புகழாரம் தொடர்ந்தது.

இந்தியா சுதந்திரம் அடைந்ததையொட்டி 14-8-1947இல் எழுதப்பட்ட தினமணித் தலையங்கம், இதுவரை அந்நியரை வெளியேற்றப் பயன்படுத்திய சக்தியை, நாட்டில் வறுமையை விரட்ட வேண்டும் என்று வலியுறுத்துகிறது. இந்திராகாந்தியின் உள்நாட்டுக் கொள்கை பற்றி யாருக்கு எந்தவிதமான கருத்து வேற்றுமை இருந்தாலும், கி. வங்காளப் பிரச்சினையில் அவரது நிலை தேசமுழுவதின் ஆதரவுக்கு உரித்தானதாகும் என்று

வெளிப்படையாகக் கூறியவர் சிவராமன் (போர் அரங்கமும், பிரசாரமும் ராஜதந்திர மேடையும் கட்டுரை - தினமணி 2-12-1972). ஏ.என். சிவராமன் ஆசிரியராக இருந்த தினமணியில் வெளியான தலையங்கங்கள் ஒரு பத்திரிகையின் பரந்துபட்ட பார்வைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. தலையங்கங்களுக்காகவும் கட்டுரைகளுக்காகவும் பத்திரிகையைப் படிக்கச் செய்தவர் சிவராமன் என்பதில் மிகையில்லை.

3

ஏ.என். சிவராமன் எழுதிய புத்தகங்கள் அனைத்தும் பத்திரிகைகளில் வெளியான கட்டுரைகளின் தொகுப்புகளாகவே வெளிவந்துள்ளன. பத்திரிகைகளில் அந்தந்தக் காலகட்டங்களில் வெளியான கட்டுரைகள் அதன் முக்கியத்துவம் கருதிப் பின்னர் புத்தகங்களாக வெளியிடப்பட்டுள்ளன. அவரது குறிப்பிட்ட சில கட்டுரைத் தொடர்கள்தான் புத்தக வடிவம் பெற்றுள்ளன. ஏராளமான கட்டுரைகள் பத்திரிகைகளின் பக்கங்களிலேயே தங்கி விட்டன. அவரது கட்டுரைகளில் கூறப்படும் கருத்துகளில் மாறுபாடு கொண்டவர்கள் இருப்பார்கள். அவரது கட்டுரைகளில் மறுப்புக்குரிய அம்சங்கள் இருக்கக்கூடும். அதில் எது சரி, தவறு என்ற வாதத்துக்குள் செல்லவில்லை. சிவராமன் என்ன கூறியிருக்கிறார் என்பது மட்டுமே சுட்டிக்காட்டப்படுகிறது.

தேசிய இயக்கத்தில் ஈடுபட்ட காலத்தில் அதற்கான பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார். அதன் தாக்கம் அக்காலகட்ட எழுத்துகளில் பிரசுரமாகியுள்ளது. அவர் கொண்டுள்ள கருத்தாக்கங்கள், அவரது அரசியல் உணர்வுகள், தர்க்கரீதியிலான விருப்பு-வெறுப்புகள் போன்றவை அவரது கட்டுரைகளின் போக்கை நிர்ணயிப்பதைப் பார்க்க முடியும். பத்திரிகையாளர் என்ற முறையில் யாரும் அவரது விமர்சனப் பார்வைக்குத் தப்பிவிட முடியாது. அவர் நினைத்ததை முழுமையாகப் பத்திரிகைகளில் எழுத முடிந்தது யாருக்கும் கிடைக்காத பெரிய வாய்ப்பாகும். அரை நூற்றாண்டுக் காலத்துக்கு மேலாகப் பத்திரிகைகளில் அவர் எழுதியுள்ளவற்றை மீண்டும் படித்துப் பார்ப்பது என்பதே இமாலய வேலை. அவரது எழுத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் புத்தகங்களை மீண்டும் படித்துப் பார்க்கும்போது அவரது உழைப்பின் முக்கியத்துவமும் செய்திகளைத் தருவதில் உள்ள சமூக அக்கறை உணர்வும் புலப்படும்.

ஏ.என். சிவராமன் எழுதிய நூல்கள்

ஏ.என். சிவராமனின் முதல் நூல் 'மாகாண சுயாட்சி'. அது நவயுகப் பிரசுராலயத்தின் முதல் வெளியீடாக வெளிவந்தது. அரசியல் நிர்ணய சபை சம்பந்தமாக பிரிட்டிஷ் தூது கோஷ்டி தயாரித்துள்ள திட்டத்தையும், அரசியல் நிர்ணய சபை கூடிய பிறகு ஏற்படக்கூடிய சர்ச்சைகளையும் பத்திரிகைகளில் படிக்கும்போது, அவற்றை நன்கு புரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் "சுதந்திர இந்திய அரசியல் நிர்ணயம்" என்ற நூல் 1946-இல் வெளியானது. தினமணியில் வெளி வந்த கட்டுரைகளுடன் குமரி மலருக்காக எழுதிய கட்டுரையையும் சேர்த்து இந்நூல் உருவாகியுள்ளது. தூது கோஷ்டி திட்டம் வெளியானது சம்பந்தமான சரித்த வரலாறுகள், தூது திட்டத்தின் ஷரத்துக்கள் பற்றிய ஆராய்ச்சி, பல நாடுகளில் நடந்த அரசியல் நிர்ணய சபைகளையும் ஆங்காங்கு ஏற்பட்டுள்ள அரசியலமைப்புகளையும் ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் இந்திய அரசியல் நிர்ணய சபை கவனிக்க வேண்டிய பிரச்சினைகள் உள்பட பல்வேறு அம்சங்களை இந்த நூலில் விளக்கியுள்ளார் சிவராமன்.

> "...ரஷிய அரசியலைப் பற்றி இப்புத்தகத்தில் பிரஸ்தாபிக்கப்படவில்லை. இதற்கு ஒரு காரணம் உண்டு. அது யாதெனில், அந்த தேசத்தின் அரசியலமைப்புச் சட்டம் பூர்ண ஜனநாயக வடிவத்திலேயே இருந்தபோதிலும், அங்கு நடக்கும் ஆட்சியானது ஒரு தனிக்கட்சியின் ஏகபோகமான சர்வாதிகார ஆட்சியே. தனி மனித சுதந்திரத்தை ஒப்புக் கொள்ளும் ஜனநாயக ஆட்சியைப் பற்றிய சர்ச்சையில் ரஷிய அரசியலமைப்புச் சட்டத்தைப் பற்றி பிரஸ்தாபிப்பது பலவிதமான தப்பபிப்ராயத்துக்கே இடமாகும். கிட்டத்தட்ட இதே காரணங்களால்தான் சீனாவின் அரசியலமைப்பைப் பற்றியும், இப்போதுள்ள ஸ்பெயினின் அரசியலைப் பற்றியும் இந்தப் புத்தகத்தில் பிரஸ்தாபிக்கவில்லை"

என்று அந்நூலின் முன்னுரையில் அவர் கூறியுள்ளார்.

"...அரசியல் நிர்ணய சபையில் எந்த பிரச்சினையையும் பழைய சர்ச்சைகளையே கருத்தில் கொண்டு பார்க்காமல் வருங்காலத்தில் இந்த தேச மக்களின் வாழ்க்கைத் தரம் உயருவதற்கு வசதியான ஓர் அரசியல் கருவியை தயாரிக்கும் மனப்பான்மையுடன் விவாதிக்க வேண்டும். இந்த மனப்பான்மை இருந்தால் அரசியலமைப்பின் விவர நுணுக்கங்கள் எவ்வாறு இருந்தாலும் பரவாயில்லை. 40 கோடி மக்களுக்கு ஒரு அரசியலைத் தயாரிப்பதென்பது அரசியல் கட்சி வாதத்தால் முடிக்கக்கூடிய காரியமல்ல. கட்சிவாதமும், வரட்டு ஜம்பமும் மறைந்து போகும்படியான உயரிய ராஜதந்திரமே இப்போது தேவை. அது இருக்குமானால் உலகத்துக்கே இந்தியா ஓர் சிறந்த உதாரணமாக விளங்க முடியும்"

என்று அந்நூலில் சுட்டிக்காட்டியுள்ளார். அவரது கட்டுரைகளில் பல்வேறு வாதப் பிரதிவாதங்களுக்கும் இடமளித்து அதில் தமது கருத்து என்ன என்பதையும் தனிப்பட விளக்குவது வழக்கம். தமது கருத்தையே இறுதியான கருத்தாகக் கொள்ள வேண்டியதில்லை. வாசகர்கள் இப்பிரச்சினையின் பல்வேறு தன்மைகளை அலசி ஆராய்ந்து முடிவுக்கு வரலாம் என்றும் கூறுவதுண்டு. அவரது நோக்கம். அதற்காகவே இப்பிரச்சினைகளின் பல பரிமாணங்களை விரிவாக விளக்கிச் சொல்வது வழக்கம். அதற்கேற்ப இந்த நூலும் அமைந்துள்ளது.

எடுத்துக்காட்டு:

"ஒரு தொகுதிக்கு ஒரு மெம்பர் இருந்தால் அதற்கு "ஒற்றை மெம்பர் தொகுதி" என்று பெயர். இரண்டு அல்லது மூன்று நான்கு மெம்பர்கள் ஒரே தொகுதி மூலம் தேர்ந்தெடுக்கப்படுவதாக இருந்தால், அதற்கு "பன்மை மெம்பர் தொகுதி" என்று பெயர்.

இரண்டு (அல்லது மூன்று) மெம்பர்கள் உள்ள தொகுதியில் ஒரு வோட்டர் தம்மிடமுள்ள இரண்டு (அல்லது மூன்று) வோட்டுகளையும் ஒரே

அபேட்சகருக்குக் கொடுக்கலாமென்று இருந்தால் அதற்கு "குவியல் வோட்டு" என்று பெயர். அவ்வாறின்றி வோட்டர் தம்மிடமுள்ள இரண்டு (அல்லது மூன்று) வோட்டுகளில் ஒரு அபேட்சகருக்கு ஒரு வோட்டுத்தான் கொடுக்கலா மென்றிருந்தால் அதற்கு "பங்கீடு வோட்டு முறை"

என்று பெயர்.

வோட்டர் தம்மிடமுள்ள மூன்று அல்லது நான்கு வோட்டுகளில் முதல் வோட்டு இன்னாருக்கு இரண்டாவது வோட்டு இன்னாருக்கு என்று அபேட்சகர்களிடையே ஏற்றத் தாழ்வு காட்டும் முறையில் வோட்டுச் செய்ய வசதியளித்தால் அதற்கு "ஒற்றை மாற்று வோட்டு முறை" என்று பெயர். இந்த முறைதான் சமீபத்தில் நடந்த அரசியல் நிர்ணய சபை மெம்பர் தேர்தலில் உபயோகிக்கப்பட்டது."

இப்படி, ஒரு விஷயத்தைக் குறிப்பிடும்போது அது தொடர்பாக வாசகர்கள் மனதில் எழும் சந்தேகங்களை மனதில் கொண்டு அந்தந்த இடங்களிலேயே அடிக்குறிப்பு இட்டு, அல்லது ஆசிரியர் குறிப்பு என்ற முறையில் அது தொடர்பான விஷயங்களை விளக்குவது சிவராமனின் வழக்கம். நாட்டு நிலவரம் குறித்த முக்கியமான பிரச்சினைகளை அனைத்து மக்களும் அறிந்து கொள்வதற்கு உதவியாகப் பத்திரிகைகள் இருக்க வேண்டும் என்ற நோக்கிலேயே அவரது கட்டுரைகள் அமைந்திருக்கும். அவரது அரசியல், பொருளாதாரக் கருத்துகளில் பலவற்றை ஏற்காதவர்கள் இருக்க முடியும். ஆனால், அவரது எழுத்துகள் தவிர்க்க முடியாதவையாக இருந்துள்ளன என்பதை மறுக்க முடியாது.

அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளப் போதிய புத்தகங்களும் இதழ்களும் இல்லாத சூழ்நிலையில் சிவராமனின் கட்டுரைகள் முக்கியத்துவம் வாய்ந்தவை. 'பத்திரிகைகளில் வரும் பொருளாதாரச் செய்திகளை மக்கள் புரிந்து கொள்ளும்படி செய்வது அவசியம். அந்தத்துறையில்

செய்யப்படும் முயற்சியின் பகுதியாகவே தினமணியில் அடிக்கடிப் பொருளாதாரம் பற்றியும் அரசியல் பற்றியும் கட்டுரைகளும் தலையங்கங்களும் பிரசுரிப்பது வெளியிடுவது வழக்கம். பிரச்சினைகளின் அடிப்படைத் தத்துவங்களைத் தலையங்கங்களில் விவரிக்க முடிவதில்லை.' இதை உத்தேசித்து பொருளாதார பிரச்சினைகள் பற்றி வரிசையாக வந்த சில கட்டுரைகள், "இந்தியாவின் வறுமை பற்றி கணக்கன் ஆராய்ச்சி (**ABC of Development Economics - An Inquiry into the poverty of India**)" என்ற நூலாக 1969-இல் வெளிவந்தது. மாணவர்களுக்குப் பெருமளவில் பயன்படும் வகையில் இந்நூலை அவர் உருவாக்கினார். 1969-ஆம் ஆண்டில் ஆகஸ்ட் முதல் தேதியில் முதல் பதிப்பாக 15 ஆயிரம் பிரதிகள் அச்சிடப்பட்டது. ஆகஸ்ட் 15-ஆம் தேதி இரண்டாம் பதிப்பாக 10 ஆயிரம் பிரதிகள் அச்சிடப்பட்டன. ரூ.2 விலையில் வெளியான அந்த 215 பக்கப் பொருளாதார நூல் வாசகர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றது.

> "பொருளாதாரம் என்பது வெறும் மேடை பிரசங்கம் பற்றிய விஷயமல்ல; வறுமை ஒழிப்பு என்பது முக்கியமான ஒரு தொண்டு. இதை இஸம்களுக்கு உட்படுத்துவது இன்றைய நிலையில் நாட்டுக்கு நல்லதல்ல; உற்பத்தி பெருகாமல், உற்பத்தி செய்யும் பொருள்களின் அடக்கவிலை குறையாமல் பொருளாதாரம் வளர முடியாது; உற்பத்தி பெருகாமல் ஏற்படும் சமத்துவம் யாருக்கும் எவ்வித நன்மைகளையும் விளைவித்து விடாது என்ற கருத்துகளை வாசகர்கள் மனதில் பதிக்க வேண்டும்"

என்ற ஆசையில் இந்த நூல் எழுந்தது. நமது பொருளாதார முன்னேற்றத்தில் குறுக்கிடும் இடர்ப்பாடுகள் குறித்து புத்தகத்தைப் படிக்கும் யாரும் பொருளாதார நிபுணர்கள் ஆகிவிடுவார்கள் என்ற எண்ணத்தில் அவர் இதை எழுதவில்லை.

> 'இந்தப் புத்தகத்தை ஒரு தடவைக்கு இரண்டு தடவை படித்தால் பொருளாதாரத்தைப் பற்றிய சர்ச்சைகளைப் படிக்கும்போது கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போல

இல்லாமல் ஏதோ ஒரு தடவை பார்த்துப் பழகின பொருள்மாதிரியான உணர்ச்சி ஏற்படும்'

என்கிறார் ஏ.என்.எஸ்.

"1. நிரந்தர உத்தியோகங்களைப் பற்றி ஒரு வகையான சந்தேக மனப்பான்மை

2. போலீஸ் என்றாலே பிடிக்காத ஒரு அருவருப்பு.

3. "சட்டம் ஒழுங்கு" விஷயமாக ஒரு அலட்சியப் புத்தி.

4 மிரட்டல் தன்மை வாய்ந்த ஆர்ப்பாட்டங்களில் மோகம்.

5. கட்சிகளிடையே பரஸ்பரம் சகிப்புத் தன்மையில்லாத மனமாச்சரியம்.

6. மெஜாரிட்டிக்குப் பணிவது "கண்ணியக் குறைவு" என்று மைனாரிட்டி கட்சிகளிடையே தப்பான ஒரு கருத்து.

7. மைனாரிட்டி கட்சியிடம் மெஜாரிட்டி கட்சியாருக்கு அலட்சிய புத்தி.

8. பொருளாதாரத் தேவைகளைப் புறக்கணித்து கோஷங்களில் ஈடுபட்டு, அல்லது ஜனங்களை மயக்கி, கட்சிப் பூசல்களில் அளவு கடந்த அக்கறை கொள்ளும்படி செய்யும் மனப்பான்மை."

-இவை மாறாவிடில் நமது பொருளாதார முன்னேற்றம் தடைப்படும் என்பது ஏ.என்.எஸ். கணிப்பு.

'எல்லாக் கட்சிகளுமே "இரண்டு குரலில்" பேசி மக்களின் ஆசையைத் தூண்டி "தேர்தல் வெற்றியே முக்கியம்" என்ற மனப்பான்மையை வளர்த்து வருகின்ற, இந்தஅரசியல் சூழ்நிலை இந்த ஏழை நாட்டின் வளர்ச்சிக்கு உதவாத முட்டுக்கட்டையை ஏற்படுத்தியுள்ளது'

என்பதையும் அவர் அந்த நூலில் சுட்டிக்காட்டியுள்ளார்.

வாசகர்களுக்கு எந்த நிலையில் சந்தேகம் ஏற்படுமோ அந்த சந்தேகங்களை எளிமையான எடுத்துக்காட்டுகளுடன் சொல்லி விளக்கி விடுவது சிவராமனுக்குக் கைவந்த கலை.

> "கேள்வி: "செலவழிக்கிறேன், செலவழிக்கிறோம்" என்று சொல்லிவிட்டு, அதை "தேசிய வருவாய்" என்கிறீர்களே, "செலவு" என்பதும் "வருவாய்" என்பதும் ஒன்றுக்கொன்று எதிர்மறையாயிற்றே! இது எப்படிப் பொருந்தும்.
>
> பதில்: நான் செலவிடுகிறேன் என்றால் அது வேறு யாருக்கோ வருமானம்தானே யல்லவா? உதாரணமாக ரூ.12 கொடுத்து ஒரு ஜோடி செருப்பு வாங்குகிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். அது வியாபாரியிடம் 1 ரூபாய், செருப்புத் தொழிற்சாலை முதலாளிக்கு, அல்லது கம்பெனிக்கு 4 ரூபாய், தொழிற்சாலை ஊழியருக்கு ஊதியமாக 4 ரூபாய், தோல் உரித்துக் கொடுத்த கசாப்புக் கடைக்காரனுக்கு ஒரு ரூபாய், செத்த மாட்டுக்காரனுக்கு இரண்டு ரூபாய் என்று பலரது கையில் வருமானமாகப் போகிறது. இவ்வாறு நான் கொடுக்கும் 12 ரூபாய் இறுதியில் பலரிடம் வருமானமாகவே போகிறதல்லவா? ஆகையால் பலரது செலவைச் சேர்த்துப் பார்த்தால், பலரது வருவாயைச் சேர்த்துப் பார்ப்பதற்கே சமம்!"

இந்த நூலில் தேவையின் நிமித்தம் கருதிப் பல்வேறு இடங்களில் ஆங்கில மேற்கோள்கள் மற்றும் ஆங்கில வார்த்தைகள் இடம் பெற்றுள்ளன.

> "கட்டுரையில் இடையிடையே ஆங்கிலச் சொற்கள், ஆங்கிலச் சொற்றொடர்கள், ஆங்கில வாக்கியங்கள் இருக்கின்றன. ஆங்கிலம் தெரியாதவர்கள் அதைக் கண்டு பயப்பட வேண்டியதில்லை. அந்த ஆங்கிலச் சொற்களை அறவே படிக்காமல் விட்டு விட்டாலும் நஷ்டம் எதுவுமில்லை. ஆங்கிலச் சொற்களை ஒதுக்கியே படித்தாலும் நான் சொல்ல வந்த கருத்து

பூரணமாக விளங்கும். ஏனென்றால் நான் உபயோகித்துள்ள ஆங்கிலச் சொற்களுக்கு சொல்லுக்குச் சொல்லாக மொழிபெயர்ப்புத் தராவிட்டாலும் கருத்தை நிச்சயமாக விளக்கியிருப்பேன் என்று வாசகர்கள் சுமாராக என்னை நம்பலாம்.

பல இடங்களில் அந்த ஆங்கிலச் சொற்கள் வேண்டியதே இல்லை. ஆனாலும், ஏதோ விசித்திரமான காரணத்தால், ஆங்கிலச் சொற்களையே அதிகம் கையாண்டு பழகியவர்களில் சிலருக்கு தமிழ் புரிவதில்லை. ஆங்கிலச் சொற்களையும் சேர்த்துப் படித்தால் ஒரு புதுஒளி கிடைத்தது போன்ற உணர்ச்சி அவர்களுக்கு ஏற்படுகிறது. இது பழக்கம் பற்றிய கோளாறு. அவர்களை நான் குறைகூறவில்லை. இந்த குறை என்னிடமும் ஓரளவு இருக்கக்கூடும். இவ்வாறு ஆங்கிலத்தில் பழகிப் போனவர்களுக்காக, ஆங்கிலச் சொற்களை உபயோகித்திருக்கிறேன்"

என்று அதற்கான காரணத்தையும் (இந்திய வறுமை பற்றிய ஆராய்ச்சி - முன்னுரையில்) விளக்கி விடுகிறார்.

நாட்டில் உள்ள பெரும்பாலான வாசகர்களும் மக்களும் அரசியல் விஷயங்களில் காட்டும் அக்கறையைப் பொருளாதார விஷயங்களை அறிந்து கொள்ளுவதில் காட்டுவதில்லை. ஆங்கிலம் தெரியாமல் தமிழ் மட்டுமே தெரிந்தவர்கள், ஆங்கிலம் தெரியாததால் பொருளாதார, அறிவியல் விஷயங்களைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியவில்லையே என்று நினைக்கக் கூடாது. அவர்களுக்குப் புரியும் வகையில் பொருளாதார, அறிவியல் தொழில்நுட்ப விஷயங்களைத் தமிழில் தெரிவிக்க வேண்டும். இதனால் பரபரப்பு, விறுவிறுப்பு ஆகியவற்றையும் தாண்டி ஆழ்ந்த சிந்தனையைத் தூண்டும் பல கட்டுரைகளை எழுதியவர் ஏ.என்.எஸ்.

1966-ஆம் ஆண்டில் ரூபாயின் நாணய மாற்றுமதிப்பை 100-க்கு 63.5 ஆக குறைத்து அரசு உத்தரவு பிறப்பித்த காலத்தில், அது தொடர்பாகத் தினமணியில் வெளியான தலையங்கங்கள் மற்றும் 17

கட்டுரைகளைச் சேர்த்து, "ரூபாய் மதிப்பு வீழ்ந்ததேன்?" என்ற புத்தகத் தொகுப்பாகத் தினமணி வெளியிட்டது. விஷயத்தைப் புரிந்து கொள்ள உதவுவதே இக்கட்டுரைகளின் நோக்கம் என்று குறிப்பிட்ட அவர், எனது அபிப்பிராயங்களைப் பிறர் மீது சுமத்துவதற்காக இக்கட்டுரைகள் எழுதப்படவில்லை என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளார்.

> "சோசலிஸம்" என்ற தத்துவத்தின் முக்கிய அம்சம் மக்களின் வாழ்க்கை நிலை உயருவதுதான். மக்கள் வாழ்க்கை முன்னேற வேண்டும் என்ற லட்சியத்தை மறந்து "கோஷங்களாலும்" "சுலோகங்களாலும்" மக்களை மயக்கி, "பணக்காரர் சுரண்டல்" என்ற பூச்சாண்டியைக் கிளப்பி, மக்களின் வோட்டைப் பெறுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு, அகலக் கால் வைத்தோம். நமது பொருளாதாரக் கொள்கையின் தோல்வியை இப்போதைய நடவடிக்கை மூலம் சர்க்கார் ஒப்புக் கொண்டுள்ளது.
>
> இனிமேலாவது, "சட்டியில் இல்லாதது அகப்பையில் வராது", "மடி அறுத்து பால் சாப்பிட முயலலாகாது" என்பன போன்ற சில பாமர உண்மைகளை சர்க்கார் மதித்து நடக்குமாயின் இதுவரை ஏற்பட்ட தோல்வியை வெற்றியாக மாற்ற முடியும். நமது பொருளாதாரக் கொள்கையையும், ஆளும் கட்சியின் கொள்கை முழுவதையுமே பற்றிப் புதிதாக யோசனை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டதை நாணய மாற்று பற்றிய இந்த முடிவு நன்கு வெளிப்படுத்துகிறது"

என்று இந்நூலில் இடம் பெற்றுள்ள கட்டுரையில் (ரூபாயின் நாணயமாற்று மதிப்பு வீழ்ச்சி - அதன் காரணமும் வரலாறும், விளைவுகளும் கட்டுரை - தினமணி 7-6-1966) கூறியுள்ளார்.

பொருளாதாரப் பிரச்சினையை அரசியல் பிரச்சினையுடன் குழப்பாமல், பொதுத் தேர்தல் பிரச்சினையுடன் குழப்பாமல் சமூக வாதங்களுடன் குழப்பாமல் உற்பத்திப் பிரச்சினையாக, உற்பத்திச் செலவைக் குறைக்கும் பிரச்சினையாக ஏற்றுமதியைப் பெருக்கும்

பிரச்சினையாக இதைக் கவனிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ள அவர், கட்சி மனப்பான்மையும் பொறாமை அரசியல் போக்கும் ஒழிந்தால் நன்மை உண்டு என்கிறார்.

சிவராமனுக்கு அரசியல் நோக்கம் இருக்கிறதா என்றால் இருக்கிறது - ஆனால் அது கட்சி அரசியல் அல்ல என்பதை கூறிவிடுகிறார்.

> "எனக்கு "அரசியல் நோக்கம்" கற்பித்து சிலர் தமது அரசியல் கட்சிச் சார்புக்குத் தக்கபடி என்னை வாழ்த்தி அல்லது கடிந்து எழுதியுள்ளார்கள். எனக்கு "அரசியல் நோக்கம்" உண்டு; ஆனால் கட்சி நோக்கம் கிடையாது என்று நம்புங்கள். என் "அரசியல் நோக்கம்" என்ன என்பதைச் சொல்லிவிடுகிறேன். "தன்னரசு" போலவே "நல்லரசும்" முக்கியமான லட்சியம். "பொது நன்மையை உத்தேசித்து எது நல்ல கொள்கை என்று முடிவு செய்து கொள்ள வேண்டும்; அந்தக் கொள்கையை அமல் நடத்தும் வசதிக்காக தேர்தலில் வெற்றிக்கு முயல வேண்டும். அவ்வாறின்றி, தேர்தலில் வெற்றி பெறுவதை முக்கியமாகக் கொண்டு அந்த வெற்றியைத் தேடித் தரக்கூடிய கொள்கை எது என்று பார்க்கலாகாது" என்பது என் மனப்பான்மை. இந்த மனப்பான்மை "நல்லரசுக்கு" அவசியம் என்பது என் அபிப்பிராயம். பத்திரிகை தர்மத்துக்கும் அதுவே பொருந்தும் என்று நினைப்பவன்"

என்று தமது அரசியல் நிலைப்பாடு குறித்து அந்த நூலின் முன்னுரையில் விளக்கியுள்ளார்.

தினமணியில் 1967-ஆம் ஆண்டு ஏப்ரல் 14-ஆம் தேதி முதல் மே 12-ஆம் தேதி வரை வெளியான விவசாயம் மற்றும் உணவுப் பிரச்சினை தொடர்பான 18 கட்டுரைகளின் தொகுப்பு, தமிழகத்தின் உணவுப் பிரச்னையும் விவசாயத்தின் தேவைகளும் என்ற தலைப்பில் தினமணி வெளியீடாக வெளிவந்துள்ளது. எந்தப் பிரச்சினையை எடுத்துக் கொண்டாலும் அதனை ஆதி முதல் அந்தம்

வரை விரிவாக வாசகர்களுக்கு விளக்கிச் சொல்லியே தீர வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். அந்த வகையில், அவர் எழுதும் கட்டுரைகள் நீண்டு கொண்டு போவதுண்டு. இந்தத் தொடர் கட்டுரையும் 8 கட்டுரைகளில் முடிப்பதாக இருந்தது 18 கட்டுரைகளாக நீண்டு விட்டது. சில கட்டுரைகள் மூலக் கட்டுரை நோக்கத்திலிருந்து விலகிச் செல்வதும் உண்டு. காரணம் வாசகர்களுக்குப் புரிய வைக்க வேண்டும் என்பதுதான்.

> ‘தொழில்களைப் பெருக்கி அதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணி வருமானத்தைப் பெருக்கி அதைக் கொண்டு வெளிநாடு களிலிருந்து தானியம் வரவழைப்பது என்பது முடியாது...விவசாயம் பெருகினால் தான் தொழில்கள் நிலைக்க முடியும். 1950இலும் 1955இலும் இந்த உண்மையைச் சொன்னவர்களுக்குப் பிற்போக்காளர் என்று பட்டம் கட்டப்பட்டது; . . . இப்போது அப்படி திமிறடியாகச் சொல்ல யாருக்கும் துணிவு ஏற்படாது’

என்ற நம்பிக்கையுடன் இந்த உணவுப் பிரச்சினைகள் குறித்த கட்டுரைத் தொடரை எழுதியுள்ளார் ஏ.என்.எஸ்.

இந்த ஆண்டில் உணவுக் கட்டுப்பாடு, கொள்முதல் முதலியன யாவும் அப்படியே நீடிக்கும் என்று 1967-இல் அரசு அறிவித்தது. பெரிய நிலச்சுவான்களிடமும் ஓரளவு “கட்டாய முறையிலும்” சிறிய நிலச்சுவான்களை “தட்டிக் கொடுத்தும்” கொள்முதல் செய்யப்படும் என்றும் அன்றைய முதல்வர் அண்ணா கூறினார். அதேசமயத்தில் சென்னை நகருக்குள்ளே தலைச் சுமையாகவும் சைக்கிளிலும் ஒரு மூட்டை, அரை மூட்டை என்று ரயில் மூலமாகவும் வந்து கோடம்பாக்கம் பாலத்தடியில் விற்பனையாகிக் கொண்டிருந்த அரிசியின் விலை உயர ஆரம்பித்தது. நகருக்குள் அரிசி வருவதைக் கட்டுப்படுத்த ஆரம்பித்ததன் நேரடியான விளைவு அது. இதேபோன்ற நிலைமை மதுரை, திருச்சி முதலிய நகரங்களிலும் தலையெடுத்தது. இதுகுறித்து அறிவதற்காக நெல்லை, மதுரை, திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் 1967-ஆம் ஆண்டில் மார்ச் 19-ஆம்

தேதியிலிருந்து ஏப்ரல் 5-ஆம் தேதி வரை பலரைச் சந்தித்துப் பேசியபோது உருவான கருத்துகள், கட்டுப்பாடுகளின் நிர்வாகம் பற்றிய சில சித்திரங்கள், விலைவாசி பற்றிய சில புள்ளி விவரங்கள் அடிப்படையில் இந்த கட்டுரைத் தொடரை எழுதியுள்ளார். புத்தகங்களையும் அரசு தரும் குறிப்புகளையும் வைத்து கொண்டு கட்டுரைகளை எழுதாமல் நடைமுறையில் என்ன நிகழ்கிறது என்பதை நேரடியாகக் கண்டு உணரும் பாங்கு அவருக்கு உண்டு.

ஏற்பட்டுள்ள சிக்கல்களை அவிழ்ப்பதா, அறுப்பதா? சர்க்கார் கொள்முதல் செய்வதில் உள்ள சிக்கல்கள், கொள்முதல் விலையை நிர்ணயிப்பதில் உள்ள பல சிக்கல்கள், ரேஷன் விலை என்ன? விவசாயிகளுக்குக் கிடைப்பதென்ன?, சைக்கிள் அரிசி மர்மம்: லஞ்ச ஊழலின் சித்திரம், தஞ்சைக்குத் தெற்கே நிலவும் கருத்துகள், பர்மா அரசி நின்றதை தஞ்சை ஈடு செய்ய ஊக்கமளியுங்கள், நவீன சாகுப்படிக்கான சோதனை, பிரசார வசதிகள், சிறிய நிலச் சொத்துகளும் கிராம சேவக்குகளும், சமுதாய நலத் திட்டம் பற்றி ஒரு யோசனை, விவசாயமும் நீர்ப்பாசன இலாகா மனப்பான்மையும், அதிக உற்பத்தி பற்றிய நம்பிக்கைகளும் கவலைகளும், அதிகம் விளையாமலே அதிக அரிசி இங்கே கிடைக்கும். கொள்முதலில் வியாபாரியின் சங்கடமும் ஊழலும், "வித்தும் இடல் வேண்டுமா" என்று கொள்முதல் செய்யாதீர்! சிறிய உடமை மாவட்டங்களின் விவசாயச் சித்திரம், சட்டத்தின் ஆட்சியே சரி; அதிகார ஆட்சி கூடாது, கண்ட்ரோலை நீக்கினாலென்ன! சர்க்கார் சிந்தனை செய்யட்டும் என்ற தலைப்புகளில் இவர் இந்தப் புத்தகத் தொகுப்பில் எழுதியுள்ள கட்டுரைகளைப் பார்க்கும்போதே எந்த அளவுக்குப் பிரச்சினையின் ஆழத்தைத் தொட்டு விளக்கியுள்ளார் என்பது புரிய வரும்.

கும்பகோணம் கல்லூரியில் பொருளாதார மாணவர்களிடம் விவசாயம் தொடர்பாக ஏஎன்எஸ் சில கேள்விகளை எழுப்பிய போது அதற்கு அவர்களால் சரிவரப் பதில் கூற முடியாமல் திகைத்தனர். பண்ணையாள் ஊதியம், சாகுபடியாளர் வாரம் பற்றிப் பெரிய தகராறுகள் நடந்து கொண்டிருந்த காலம் அது. அப்படியிருந்தும், ஆசிரியர்கள்கூட இந்த விஷயங்களைப் பற்றித் தெரிந்து கொண்டிருந்தார்களா என்பது சந்தேகம் என்பது ஏஎன்எஸ் கருத்து.

எனவே கட்டுரைகளின் இடையீடாக விவசாய அளவைகள் பற்றிய ஒரு குறிப்பைச் சேர்த்துள்ளார்.

> "கலம்", "மூட்டை" என்பது ஒவ்வொரு ஜில்லாவில் ஒவ்வொரு அளவாக இருக்கிறது. ஒரே ஜில்லாவில்கூட 'பெரிய கலம்', 'சின்னக் கலம்' என்று வித்தியாசம் இருக்கிறது. சில ஜில்லாக்களில் கலம், மூட்டை என்ற சொல்லே இல்லாமல் கோட்டை என்ற சொல் இருக்கிறது. நில விஸ்தீர்ணம் பற்றியும் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு சொல் இருக்கிறது. எல்லா ஊரிலும் தெரிந்த சொல் "படி" என்பது. ஆனால் அதில் சின்னப்படி, பெரிய படி, பக்காப் படி, சேர்ப்படி என்று வித்தியாசம் இருக்கிறது"

....இப்படி அவரது விளக்கம் விரிந்து செல்லும். அவரது கட்டுரைகளில் இப்படிப் பல தகவல் களஞ்சியங்களைப் பார்க்க முடியும். இதுபோன்ற அளவைகள், நடைமுறைகள் குறித்த அவரது வரலாற்றுப் பதிவுகள் முக்கியமானவை. இந்த ஆவணப்படுத்தும் போக்கு பத்திரிகையாளராகிய அவரைத் தவிர்க்க இயலாதவராகக் கருதச் செய்துள்ளது.

> "அன்னை பராசக்தியின் பல பெயர்களில் ஒன்று "சாகம்பரீ" என்பது. அவள் நிலப்பரப்பைவிளைப் பொருளால் நிரப்புபவள். அவள் அருளட்டும். "மஹாமாரி"யாகா செயல்பட்டு பயிருக்கு வரும் நோய்ப்பூச்சிகளைஅழிக்கப்பட்டும். பருவ காலத்தில் மழை பெய்யட்டும். நான் சொல்வதில் தவறான யோசனை, தவறான மனப்பான்மை இருந்தால் அது (படிப்போர் மனதில்) நிலைக்காமல் அழியட்டும். நான் சொல்வதில் மக்களுக்கு நல்லது (மக்களுக்கு பிரியமில்லாததும் நல்லதாக இருக்கலாம்) இருந்தால் அது வாசிப்போர் மனதில் பதியட்டும். "அறம் வளர்ந்திடுக; தீதெல்லாம் நலிக"

(தமிழகத்தின் உணவுப் பிரச்னையும் விவசாயத்தின் தேவைகளும் - முகவுரை) - இதுதான் ஏ.என். சிவராமன். தனது கருத்துகளைச்

சொல்லவும் வலியுறுத்தவும் உரிமை இருக்கிறதோ, அதேபோல அதை ஏற்கவும் மறுக்கவும் மற்றவர்களுக்கு உரிமையுண்டு என்பதில் அவர் நம்பிக்கை வைத்திருப்பது புரியும்.

ரஷ்ய புரட்சி குறித்தும் அது அந்நாட்டில் ஏற்படுத்திய தாக்கம் குறித்தும் அவர் 25-8-1969-க்கும் 4-12-1969-க்கும் இடையே தினமணியில் எழுதிய கட்டுரைகள், " ரஷ்ய புரட்சி (1917-1934) 17 ஆண்டு அனுபவம் - வழிகாட்டியா? எச்சரிக்கையா? (**17 Years of Russian Revolution - A Politico-Economic Analysis**)" என்ற தலைப்பில் புத்தகமாக வெளியாகியுள்ளது. அவர் கம்யூனிஸ்ட் கட்சி மீது கடும் விமர்சனம் கொண்டிருந்தார் என்பதை அவரது எழுத்துகளைப் படிக்கும் யாரும் அறிந்து கொள்வார்கள். ஏதேச்சாதிகார ஆட்சி மீது அவருக்கு நம்பிக்கையில்லை. கம்யூனிஸ்ட் கட்சியிடம் எனக்குள்ள துவேஷம், சுயநல அடிப்படையில் உருவானதல்ல என்கிறார். நாட்டில் கம்யூனிஸ்ட் ஆதிக்கம் ஏற்பட்டால் இன்னும் பல ஆண்டுகளுக்குக் குழப்பங்கள் ஏற்படுமேயொழிய வறுமை நீக்கம் ஏற்படாது என்பதை எடுத்துக்காட்டுவதுதான் இந்த நூலின் நோக்கம்.

"சோஷலிஸம்" என்பது "உற்பத்தி சாதனங்கள்" மீது சர்க்கார் ஆதிக்கம் தான் என்றால் அதற்கு ஏதேச்சதிகாரம் இன்றியமையாத உறுப்பு -என்பதுதான் ரஷியாவின் அனுபவம் என்பது அவரது கருத்து. 1930-ஆம் ஆண்டில் சென்னை சிறையில் இருந்த போது சிங்காரவேலரிடம் கம்யூனிஸ்ட் நூல்களைப் பெற்றுப் படித்தாகவும் அவரிடம் கம்யூனிஸம் குறித்துப் பாடம் கேட்டதாகவும் அவர் கூறியுள்ளார். 1931-இல் மார்க்சின் கேபிட்டல் நூலைப் படித்ததாகவும் 1932-இல் கண்ணனூர் சிறையில் வங்காள பயங்கர இயக்கக் காவல் கைதிகள் பலரிடமிருந்து ரஷியா புரட்சி பற்றிய புத்தகங்களை வாங்கிப் படித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். 1933-இல் ரஷியாவின் சந்நியாசி பட்டாளம் என்ற அவர்களது இளைஞர் இயக்கத்தை வியந்து சிவராமன் நீண்ட கட்டுரையை (காந்தி) எழுதியுள்ளார். 1930-க்கும் 1934-க்கும் இடையே கம்யூனிஸ்ட் பிரசுரங்களைப் படிப்பதில் சுமார் 500 மணி நேரமும் அதற்குப் பிறகு கம்யூனிஸ்ட் புத்தகங்களைப் படிப்பதற்காகச் செலவிட்ட நேரம் 200 மணி நேரமும் இருக்கும் என்பதையும் அவர் பதிவு செய்துள்ளார்.

"1. ரஷியாவில் சோஷலிஸம் காரியம்சத்தில் வெற்றிகரமாக நடக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், எதேச்சாதிகாரத்தின் மூலம்தான் அது செயலுக்கு வர முடிந்தது.

2. 1917-க்கும் 1934-க்குமிடையே ரஷியாவில் மக்கள் அனுபவித்த துயரமும், சர்க்கார் புரிந்த கொடுமையும் யாரையும் பிரமிக்க வைப்பவை (இதனைத் தொடர்ந்து நடந்த அடக்கு முறைகள் 1938 வரை நீடித்தன).

3. ஜனத்தொகை வீதாச்சாரத்தில் ரஷியாவின் 1. நிலப்பரப்பு 2.கனிவளம் இரண்டும் மற்றெந்த மேலை நாட்டினையும் விட அதிகம். 1913-க்கு முன்னரே அது விஞ்ஞானத்தில் முன்னணியில் இருந்த நாடு. ஆகையால் அவர்கள் தொடர்ச்சியாக 10 ஆண்டுகள் பொருளாதாரம் சிதைந்த போதிலும், ஒரு கட்டத்தில் உற்பத்தியானது 100-க்கு 85 சதவீதம் நசிந்த போதிலும், ஒரு வகையாகச் சமாளித்து முன்னேற முடிந்தது.

"அவர்கள் தாங்க முடிந்தது; நாம் தாங்க முடியாது" என்பதுதான் இந்த நூலின் கருத்து"

என்று அவர் இந்த நூலின் நோக்கத்தைக் கூறியுள்ளார். இந்த நூல் வெளியான காலக் கட்டத்தில் இடது சாரிகளின் கடும் விமர்சனங்களுக்கு உள்ளானது.

அரசியல், பொருளாதாரக் கட்டுரைகள் தவிர அறிவியல் தொடர்பான கட்டுரைகளையும் சிவராமன் எழுதியுள்ளார். 'தினமணியில் வெளியான விண்வெளி அறிவியல் தொடர்பான கட்டுரைகள் "அப்போலோ கண்ட விண்வெளி விஞ்ஞானம்" என்ற தலைப்பில் 1970-இல் நூலாக வெளியிடப்பட்டது. விஞ்ஞானம் தொடர்புள்ள விஷயங்களில் வாசகர்களுக்கு ஆர்வம் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த நூல் எழுதப்பட்டது.

"விஞ்ஞானப் பட்டதாரியாக இல்லாத எனக்கு இந்தக் கட்டுரைகளை எழுதும் துணிச்சல் எப்படி ஏற்பட்டது

என்பதைச் சொல்கிறேன். நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையின் சார்பில் நிருபர் நிலையில் நாஸா நிகழ்ச்சிகளைப் பல ஆண்டுகள் கவனித்து வந்துள்ள திரு ஜான் நோபில் வில்போக்ர்ட் என்பவர் "அப்போலோ 11" யாத்திரை முடிந்தவுடன் பிரசுரித்த ஒரு புத்தகம் எனக்கு துணிச்சல் ஊட்டியது. அவர் பி.எஸ்ஸி. படித்தவராயினும், அவர் படிப்பு விண்வெளி யுகத்துக்குப்பல பல ஆண்டுகளுக்கு முன்னரே முடிவு பெற்றாகிவிட்டது. நாஸாவில் தாம் நேரில் கண்டவற்றையும் நாஸாக்காரர்கள் தந்த விளக்கங்களையும் நாஸாக்காரரின் பத்திரிகைப் பிரசுர வெளியீடுகளையும் ஆதாரமாகக் கொண்டு அவர் சுமார் 500 பக்கம் கொண்ட ஒரு புத்தகத்தை எழுதினார். அந்தப் பாணியில் விஞ்ஞான விஷயத்தில் பாமரராக இருப்போருக்காக தமிழில் இதுபோன்ற ஒரு புத்தகம் இருந்தால் நல்லதல்லவா என்று அப்போது என் மனதில் ஒரு எண்ணம் எழுந்தது"

என்கிறார் ஏ.என்.எஸ். அதன் விளைவே அப்போலோ கண்ட விண்வெளி விஞ்ஞானம். விஞ்ஞான நிபுணரால் எழுதப்பட்ட ஒரு விஞ்ஞான நூல் அல்ல என்று கூறியுள்ளார் அவர். தினமணியில் இக் கட்டுரைகள் வெளிவரும்போது, 'அரை குறைப் பாமரன்' என்ற புனை பெயரில் எழுதினார்.

"கம்ப்யூட்டர் என்பது கணக்குப் போடுவதற்கு மட்டுமல்ல, சில சிக்கலான பிரச்சினைகளில் அதுவா இதுவா என்று ஒவ்வொரு மாற்று யோசனையாக ஆராய்ந்து பார்த்து நாம் முடிவு செய்வதை விட சீக்கிரமாக கம்ப்யூட்டர் மூலம் விடை பெறலாம்.

உதாரணமாக ஒரு ஆற்றின் கரையில் ஒருவன் ஒரு புலி, ஒரு புல்லுக்கட்டு, ஒரு ஆடு மூன்றினையும் வைத்துக் கொண்டு ஓடக்காரரிடம் அம்மூன்றையும் ஒவ்வொன்றாக எதிர்க்கரையில் கொண்டு போய்

> சேர்க்கச் சொல்லுகிறார்; புலியையும் ஆட்டையும் விட்டு விட்டு புல்லுக்கட்டைக் கொண்டு போனால் ஆடு புல்லைத் தின்றுவிடும். புலியை மட்டும் கொண்டு போனால், ஆடு புல்லைத் தின்றுவிடும். எப்படி மூன்றையும் எதிர்கரையில் கொண்டுபோய் சேர்ப்பது என்று புதிர் போடுவதுண்டு. (புலி ஓடக்காரனைத் தின்று விடாதா? என்று புதிர் போடாதீர்கள்) புதிருக்கு விடையென்ன! " முதலில் ஆட்டை அக்கறையில் சேர்ப்பது; வெறும் ஓடம் திரும்பி வருவது; புல்லுக்கட்டை எடுத்துக் கொண்டு எதிர்கரையில் விட்டுவிட்டு ஆட்டுடன் திரும்புவது. ஆட்டை இக்கரையில் விட்டுவிட்டு புலியை எதிர்க்கரைக்குக் கொண்டு போய் விட்டுவிட்டு வெறும் ஓடம் திரும்பி வந்துஆட்டை எடுத்துக் கொண்டு எதிர்கரையில் சேர்ப்பது"

என்று என் வீட்டிலுள்ள எட்டு வயது குழந்தைக்கு அதன் தாயார் சொல்லிக் கொடுத்திருக்கிறாள்.

கம்ப்யூட்டர் இதுபோன்று மூளையை உபயோகிக்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லுமாம். உறவுகளை மட்டும் அதனிடத்தில் நாம் சொல்லிவிட வேண்டும் (அதற்குப் புரிகிற **Code** "பாஷையில்") ....இதுபோல சாமானியர்களுக்கும் புரியும் வகையில் விஞ்ஞான விளக்கங்களைக் கொண்டு செல்வது சிவராமனின் பாணி. அறிவியல் உண்மைகள், வரலாற்றுச் செய்திகள் போன்று விண்வெளி விஞ்ஞானம் குறித்த பல்வேறு செய்திகளைத் தமிழில் எளிமையாகவும் விரிவாகவும் எடுத்துரைத்துள்ளார். மாணவர்களுக்கான அறிவியல் குறிப்புகளையும் இதில் சேர்த்துள்ளார். தினமணியில் பெ.நா. அப்புசாமி போன்றவர்களைக் கொண்டு தொடர்ச்சியாக விஞ்ஞானக் கட்டுரைகளை எழுதச் செய்திருப்பதும் கவனிக்கத்தக்கது.

ஏ.என். சிவராமன் தினமணியில் தொடர் கட்டுரைகளாக எழுதி நூல் வடிவம் பெற்ற புத்தகம் - பீஹார் இயக்கம். 1975 ஜனவரி 23-க்கும் பிப்ரவரி 22-க்கும் இடையே தினமணியில் வெளியான கட்டுரைகளுடன் ஜெ.பி. பார்லிமெண்டு உறுப்பினர்களுக்கு எழுதின

ஒரு நீண்ட கடிதமும், 1973 ஜுலை-ஆகஸ்டில் எவரிமன்ஸ் பத்திரிகையில் எழுதின சில கட்டுரைகளும், ஜெ.பி. 1973 மே 16-இல் வெளியிட்ட அறிக்கையும் அதன் மீது ஜுன் மாதம் இந்திராவுடன் நடந்த கடிதப் போக்குவரத்தும் இந்தப் புத்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஜெயப்பிரகாஷ் நாராயணனுடன் மத்திய பிரதேசத்தில் சுற்றுப்பயணம் செய்து நேரில் பெற்ற அனுபவங்களுடன் இக்கட்டுரைத் தொடர்களை எழுதியுள்ளார்.

> "ஜெயப்பிரகாஷ் நாராயணன் போன்ற ஒருவர் "சட்டப்படி நிறுவப்பட்ட" ஒரு மாநில மந்திரிசபைக் கெதிராக ஒரு நேர்முக நடவடிக்கையை மேற்கொண்டு பார்லிமெண்டரி ஜனநாயகத்தைக் கவிழ்க்க முயலுவாரா? சட்டசபையைக் கலைக்க வேண்டும் என்று கோருவாரா? சட்டசபையின் உரிமையை பொதுக்கூட்டங்களிலா நிர்ணயிப்பது ? ஆனால், யாரும் அப்பழுக்குச் சொல்லத் துணியாத தேசபக்தியுள்ள ஒருவர் இம்மாதிரி செய்கிறார் என்றால், அதில் ஏதேனும் ஒரு விசேஷ காரணம் இருக்க வேண்டும்... "பீஹார் நிகழ்ச்சிகளைப் பற்றி பத்திரிகைக்குக் கிடைக்கும் செய்திகளில் ஏதோ குறைபாடு அல்லது தவறு இருக்க வேண்டும் என்று தோன்றியது. ஆகையால் சிறிது ஆராய்ந்து பார்ப்பதில் அக்கறை ஏற்பட்டது"

என்று இக்கட்டுரைத் தொடரை எழுதுவதற்கான காரணத்தை விளக்குகிறார் ஏஎன்எஸ்.

"எந்த ஒரு இயக்கத்தையும் வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் கவனிப்பது அவசியம். எந்த பொது ஜன இயக்கத்தின் இறுதியிலும் வெற்றியுடன் சேர்ந்து சில பலவீனங்களும் உதயமாகும். இது தவிர்க்க முடியாதது. காந்திஜி நடத்தின இயக்கத்தால் நாடு விடுதலை பெற்றது; கூடவே ஜனநாயகத்தில் ஓரளவு "கும்பல் நாயகம்" **Mobocracy** தன்னடக்கக் குறைவு **Indiscipline** மக்களின் அறியாமையைப் பயன்படுத்தம் ஜாலவித்தை மாதிரியான ஆசைப் பிரசாரம் **(Populism)** போன்ற சில பலவீனங்களும் புகுந்தன. சில பலவீனங்கள்

முளைக்கும் என்பதற்காக இயக்கமே வேண்டாம் என்று வைக்க முடியாது" என்பது அவரது கருத்து.

> "உண்மையான சுயராஜ்யம் என்பது ஒரு சிலர் அதிகாரத்தில் அமருவதன் மூலம் உருவானதல்ல. அதிகாரத்தை துர்வினியோகம் செய்யும்போது அதைஎதிர்த்து நிற்கும் சக்தி மக்களிடம் இருக்க வேண்டும் என்பதுதான் உண்மையான சுயராஜ்யம் என்று காந்திஜி கூறினாரல்லவா? அதுதான் மூல மந்திரம். அதுதான் "ஜெ.பி. இயக்கம்" "

என்று அந்த இயக்கத்தின் தோற்றம், நோக்கங்கள் போன்றவற்றை விரிவாக விளக்கியுள்ளார்.

> "நான் ஜெ.பி. இயக்கத்தை ஆதரிக்கிறேனா என்று கேட்காதீர்கள். எந்தக் காரியத்திலும் மற்றொருவரின் கருத்தை நான் 100-க்கு 75-க்கு மேல் ஏற்பதில்லை. அதனால்தான் நான் இன்றும் ஒரு சங்கத்திலும் மெம்பராக இல்லை. பத்திரிகையாசிரியர் மகாநாட்டுப் பக்கம்கூட நான் தலையை நீட்டி 28 ஆண்டுகள் ஆகிவிட்டன. எந்த விஷயத்திலும் நான் மற்றொருவருடன் 100-க்கு 100 "கருத்தொருமை" கொள்ள இயலுவதில்லை...என் அந்தரங்க அகராதியில் "பூர்ணமான" என்ற சொல்லுக்கு சுமார் 80சதவீதம் என்று பொருள்"

என்பது சிவராமனின் கருத்து.

இந்திய சுதந்திரப் பொன் விழாவையொட்டித் தினமணி 1997-இல் வெளியிட்ட சுதந்திர தின மலரில் 'சுதந்திர தினத்துச் சூரியோதயமும் அருணோதய கால நிகழ்ச்சிகளும்' என்ற தலைப்புடன் தொடங்கும் சுதந்திரப் போராட்டக் காலச் சம்பவங்கள் மற்றும் அக்காலக் கட்டத்தில் அவரது அனுபவங்களின் கலவையுடன் கூடிய நீண்ட கட்டுரை வெளியானது. பின்னர் அது தனிப் புத்தகமாகவும் வெளிவந்தது.

இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில் நடந்த முக்கியச் சம்பவங்கள் குறித்துக் குறிப்பிட்ட அவர், விடுதலைப் போராட்டத்தில் சொந்த அனுபவங்கள் பற்றியும் பத்திரிகைத் துறைக்கு வந்தது பற்றியும் அதில் எழுதியுள்ளார். தேசம் என்றால் என்ன, தேச பக்தி என்ன என்றால் என்ன, தேசத்துக்குப் பணி என்றால் என்ன என்பதை எனக்குத் தெளிவுபடுத்திய எஸ். சத்தியமூர்த்தி, ஒத்துழையாமை இயக்கத்தில் சேருவதற்காக காலேஜ் படிப்பை நிறுத்தி காலேஜ் முதல்வரிடம் கடிதம் சமர்ப்பித்த அடுத்த நாள் நெல்லை மாவட்டம் கல்லிடைக்குறிச்சியில் சந்தித்த டாக்டர் சங்கர ஐயர், அவரது மனைவி லட்சுமி சங்கரய்யர், சில ஆண்டுகள் கல்லூரியில் ஆசிரியராக இருந்து, 1919-இல் காந்திஜியின் சத்தியாகிரகப் பிரதிக்ஞையில் கையெழுத்திட்டு, தேசப் பணிக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட கே.பி. யக்ஞேசுவர சர்மா, 1905-இல் வங்காளப் பிரிவினையின் போது ஒலித்த வந்தேமாதரம் என்ற கோஷத்துடன் துவங்கிய சுதேசி இயக்கம் முதல் தன் வாழ்நாள் முழுவதையும் தேசப்பணியில் ஈடுபடுத்திய கோமதி சங்கர தீட்சிதர் ஆகியோரை தனது குருக்களாக குறிப்பிட்டுள்ளார் சிவராமன்.

> "என் உடல்நிலை நோயற்றதாகவே இருக்கிறது. காது செவிடாகிவிட்டது. நபர்களின் ஸ்தாபனங்களின் நண்பர்களின் உறவினர்களின் ஊர்களின் பெயர் வேண்டும்போது நினைவுக்கு வருவதில்லை. இலக்கங்கள் (**Numbers**) மறந்து போகின்றன. என் டெலிபோன் நம்பர்கூட நினைவிருப்பதில்லை. கால் கிலோ மீட்டர்தான் நடக்க முடிகிறது. கூன் விழவில்லை. ஒரு மணி நேரம் நிற்க முடிகிறது. மரண பயம் என்னை பீடிக்கவில்லை"

என்று தனது 94 வயது நிலைமையைக் குறிப்பிடுகிறார் அவர். அந்த வயதிலும் தினமணி சுதந்திர பொன் விழா மலருக்காகத் தினமணி உதவி ஆசிரியர் மூலம் வாய்மொழியாகக் கூறி இந்த நீண்ட கட்டுரையைத் தந்திருக்கிறார். வாய் மொழியாகக் கூறியது எழுத்து வடிவத்தில் வந்த போது, பல முறை அடித்துத் திருத்திப் பல முறை அதை செம்மைப்படுத்தியவர். கொடுக்கின்ற செய்திகளில் தவறு

இருக்கக்கூடாது என்ற அக்கறை அவருக்கு. இக்கட்டுரையை எழுதுவதற்காக ஒரு மாதம் செலவிட்டிருக்கிறார். தினமணித் துணையாசிரியராக இருந்த குருநாதனிடம் வாய்மொழியாகச் சொல்லி, கணிப்பொறி மூலம் தட்டச்சு செய்து அதனை நேரடியாகச் சரிபார்த்துத் தேவையான இடங்களில் திருத்தங்களைச் செய்தார் சிவராமன்.

வேட்பாளரை யார் பொறுக்குவது? (அமெரிக்க முறை) என்ற கட்டுரைகளும் தினமணியிலும் தினமணி கதிரிலும் வெளியான 1967 பொது தேர்தல் சம்பந்தப்பட்ட தலையங்கங்களும் சேர்ந்து 'பொதுத் தேர்தல் பற்றிய பொதுப் பிரச்சினைகள்' என்ற தலைப்பில் புத்தகமாக வெளிவந்துள்ளது. 26-1-1950-இல் வெளியிடப்பட்ட தினமணி குடியரசு மலரில் இந்தியாவின் அரசியலமைப்பு ஷரத்துகள் பற்றிச் சிவராமன் எழுதிய கருத்துரை எட்டுப் பக்கங்களுக்கு வெளியிடப்பட்டுள்ளது.

> "இங்கு பிரசுரிக்கப்படுவது சட்டத்தின் மொழிபெயர்ப்பு அல்ல. ஒவ்வொரு ஷரத்தின் முழு வாசகமும் தரப்படவில்லை. முழு வாசகத்தையும் அப்படியே கொடுத்தால் ஷரத்தின் கருத்தானது வார்த்தைகளுக்குள் மறைந்து போய்விடும்"

என்ற அவரது குறிப்புடன் அது வெளியிடப்பட்டுள்ளது. தேர்தல் சீர்திருத்தம் குறித்தும் அரசியல் அமைப்புச் சட்டங்கள் குறித்தும் அவர் தொடர்ந்து பல்வேறு சூழல்களில் ஏராளமான கட்டுரைகளை எழுதியுள்ளார். பொது வாழ்க்கையில் நேர்மையையும் ஒழுக்கத்தையும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்.

எந்தப் பிரச்சினை குறித்தும் அவர் தனது கருத்தை எழுதிய போதிலும்கூட வாசகர்கள் தாங்களாகவே ஒரு முடிவுக்கு வருவதை விரும்பியவர்.

> "நான் சொல்லுவது தான் சரி என்று சொல்லமாட்டேன். இந்தப் பிரச்சினை பற்றி நான் எவ்வளவு நாள், எவ்வளவு கவனத்துடன் சிந்தனை செய்திருக்கிறேனோ அதே அளவு நீங்கள் சிந்தனை செய்தால், நான்

> கூறுவதைவிட அதிக தெளிவுள்ள முடிவுக்கு நீங்கள் வர முடியும்..."

என்பது அவரது கருத்து.

சிவராமன் எழுதிய கட்டுரைகள் நெடியவை. கட்டுரைத் தொடரில் புதிதாகப் படிக்கும் வாசகர்களுக்குக் கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போல் இருக்கக்கூடாது என்பதற்காக, ஏற்கெனவே கூறிய விஷயங்களின் சுருக்கத்தைக் கூறுவார். அதனால் அவரது கட்டுரைத் தொடரில் கூறியது கூறல் இருந்தாலும் கவலைப்படமாட்டார். காரணம் வாசகர்களுக்குப் புரியாமல் போய்விடக்கூடாது என்ற எண்ணம்தான் காரணம்.

> "புத்தகத்தில் தொகுத்துள்ள கட்டுரைகள் பிரச்சினைகளில் பல அம்சங்களைப் பற்றி பல "கோணங்களில்" எழுதப்பட்டவை. ஆகவே ஒரு தடவை சொன்னது வேறிடத்தில் இருக்கும். ஒரு கட்டுரையின் தொடர்பு அடுத்த கட்டுரையில் இல்லாமல் இரண்டு மூன்று கட்டுரைகளுக்கு அப்பால் இருக்கும். ஒரு கட்டுரையிலுள்ள கருத்துக்கு என்ன காரணம் என்று அதற்கு பல கட்டுரைகளுக்கு முன்னர் காணப்படும். ஆகையால் புத்தகம் முழுவதையும் ஒரு தடவை படித்து விட்டு, மறுபடியும் ஒரு தடவை தொடக்கத்திலிருந்து படித்துக் கொள்ளுங்கள். அப்போதுதான் வெறும் "தகவல்கள்" போலத் தோன்றியவை ஒரு சித்திரம்போல தோன்றும்"

என்கிறார் சிவராமன் (தமிழகத்தின் உணவுப் பிரச்னையும் விவசாயத்தின் தேவைகளும் முகவுரை).

> "ஆங்கிலம் தெரிந்திருந்தால் பொருளாதாரம் தெரியும் என்பதில்லை. பொருளாதார விஷயங்களைக் கேட்டறிந்து கொள்ள விரும்புவோருக்கு ஆங்கிலம் தெரிந்திருந்தால் பி.ஏ.க்குச் சமமாக பொருளாதாரத்தைப் பாடமாகப் படித்திருந்தால், வாழ்க்கையிலும் "பாங்கிங்" "தொழில்" "வியாபாரம்"

> இவற்றில் சிறிது தொடர்பு இருந்தால், சில பிரசுரங்களையும் சர்க்கார் அறிக்கைகளையும் தேடி எடுத்துப் படித்து இன்றையப் பிரச்சினையைப் புரிந்து கொள்ள முடியும். ஆனால் பலருக்கு சாவகாசம் இருக்காது. ஆங்கிலம் தெரியாதவர்களுக்கு இந்த வசதி அறவே இல்லை. ஆகையால் விஷயத்தைப் புரிந்து கொள்ள உதவி செய்வதே கட்டுரைகளின் நோக்கம். ஒரு தலைப்பட்சமாக என் அபிப்பிராயத்தைப் பிறர் மீது சுமத்துவதற்காக இந்தக் கட்டுரைகள் எழுதப்படவில்லை. சிந்தனை செய்வதற்கு உதவியான தகவல்களைத் தருவதே கட்டுரைகளின் நோக்கம்"

என்று அவரது பொருளாதாரக் கட்டுரைகளின் நோக்கம் பற்றித் தெளிவுபடுத்தி விடுகிறார் (ரூபாய் மதிப்பு வீழ்ந்ததேன்?). பத்திரிகைளில் வரும் பொருளாதாரச் செய்திகளின் பின்னணியை மக்களுக்குப் புரியச் செய்வதற்கே அவர் பொருளாதாரக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

இவரது கட்டுரைகள் புத்தகமாகத் தொகுக்கப்படும்போது, எந்த வரிசையில் படிக்க வேண்டும், எந்தப் பகுதிகளை மட்டும் படித்தால் உட்பொருளைப் புரிந்து கொள்ள முடியும் என்பதையெல்லாம் வாசகர்களுக்கு முன்னுரையிலேயே விளக்கி விடுவார். சில நேரங்களில் ஆசிரியர் - மாணவர் பாணியில் இருக்கும். சிரமமான பகுதிகள் புரியவில்லை என்றாலும் வாசகர்கள் பல்லைக் கடித்துக் கொண்டு படித்து விடுவது நல்லது. நூல் முழுவதையும் படித்த பின்னர், மீண்டுமொருமுறை திருப்பிப் படித்தால் முதலில் புரியாதிருந்தவை புரிந்து விடும் என்பது அவரது எண்ணம்.

> "...இந்தப் புத்தகத்தை ஒரு தடவைக்கு இரண்டு தடவை படித்தால் பொருளாதாரத்தைப் பற்றிய சர்ச்சைகளைப் படிக்கம்போது "கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போல" இல்லாமல், ஏதோ ஒரு தடவை பார்த்துப் பழகின பொருள் மாதிரியான உணர்ச்சி ஏற்படும்"

என்கிறார் சிவராமன் (வறுமை பற்றிய கணக்கன் ஆராய்ச்சி நூலின் முன்னுரை). அப்போலோ கண்ட விண்வெளி விஞ்ஞானம் என்ற அறிவியல் கட்டுரைத் தொடர் நூலாக வந்த போது, அந்த நூலைப் படிக்கும் முறை பற்றிச் சில குறிப்புகளை எழுதினார். இவையெல்லாம் வாசகர்களிடம் கருத்துகள் சரியாகச் சென்றடைய வேண்டும் என்பதற்காக அவர் காட்டும் அக்கறையின் அடையாளங்கள்.

அவரது புத்தகங்களிலும் கட்டுரைகளிலும் பரபரப்பான அம்சங்களை எதிர்பார்க்க முடியாது. நீண்ட நெடிய கட்டுரைகள் வாசகர்களுக்குச் சில நேரங்களில் சலிப்பூட்டலாம். சில தத்துவங்கள், கோட்பாடுகள் புரியாமல்கூடப் போகலாம். ஆனால் படிக்கும் வாசகர்களைச் சிறு குழந்தையைப்போலக் கையைப் பிடித்துக் கொண்டு அவர்களை இலக்கை நோக்கி அழைத்துச் சென்று விடுவார்.

> "எல்லா அதிகாரங்களும் "மன்னருக்கே" - மன்னர் மக்களுக்கு "சில உரிமைகளை" வழங்குகிறார் - என்பது பழைய காலத்து முடியரசு. சுதந்திரங்கள் "தருவது" மன்னர். மக்கள் சில "சுதந்திரங்களை" தம்மிடமே வைத்துக் கொண்டு, சில அதிகாரங்களை, அரசுக்கு அளிக்கிறார்கள் - என்பது நவீன காலத்துக் குடியரசு. (சுதந்திரங்களை "அரசு" தந்து மக்கள் பெறவில்லை. அவை மக்கள் தமதாக தம்மிடையே வைத்துக் கொள்ளும் உரிமை. அரசுக்கு அதிகாரம் தருவது மக்கள்)" -

இப்படி எளிமையாக அனைவருக்கும் புரியும்படியாகக் கூறிவிடச் சிவராமனால் முடியும்.

நூல் மதிப்புரை

இசையில் ஆர்வம் இல்லை என்றாலும்கூட, பாபநாசம் சிவன் பற்றிய கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். அரிதாகப் புத்தக விமர்சனங்களும் எழுதியுள்ளார். ஸ்ரீ தினகரன் என்பவர் எழுதிய 'சமஷ்டி' என்ற நூலுக்குத் தினமணியில் (17-12-1938) சிவராமன் ஒரு நீண்ட மதிப்புரையை எழுதியுள்ளார்.

"... 1935-ஆம் வருஷத்துக்கு அரசியல் சட்டத்தில் மாகாண சுயாட்சி பற்றிய பகுதி ஏற்கெனவே அமுலுக்கு வந்து பல மகாணங்களில் காங்கிரஸ் மந்திரிசபை ஏற்பட்டிருக்கிறது. இப்போது அமுலுக்கு வராத பகுதி ஒன்று இருக்கிறது. அதுதான் சமஷ்டி பற்றிய பகுதி. இதை அமுலுக்கு கொண்டு வர முடியுமா, அமுலுக்கு கொண்டு வர வேண்டுமா என்பது இப்போது பிரிட்டிஷ் ராஜதந்திரிகளைத் திகைக்க வைக்கும் பிரச்சினையாக இருக்கிறது. பிரிட்டிஷ் சர்க்காரும் இந்திய தேசியவாதிகளுக்குமிடையே இப்போது தகராறுக்கு இடமாக இருக்கும் முக்கிய விஷயம் இந்த சமஷ்டியைப் பற்றியதே. இந்த சமஷ்டியை (அதாவது 1935-ஆம் வருஷத்துச் சட்டத்திலுள்ள சமஷ்டியை) ஏற்றுக் கொள்ள முடியாதென்று காங்கிரஸ் சொல்லி வருகிறது. இப்போது சமஷ்டியை எதிர்க்கும் போராட்டமே முக்கியமான தேசியப் போராட்டம் என்று மதிக்கப்படுகிறது. இவ்வளவு தர்க்கத்துக்கும் போராட்டத்துக்கும் காரணமாகவுள்ள இந்த சமஷ்டியைப் பற்றியும் சமஷ்டித் திட்டத்தை காங்கிரஸ் ஏன் எதிர்க்கிறதென்பதையும் பொது ஜனங்கள் அறிந்து கொள்வது மிகவும் அவசியம். இதற்கு ஸ்ரீ தினகரன் எழுதியுள்ள புத்தகம் மிகவும் உபயோகமானது"

சிவராமன் எழுதிய சிறுகதைகள்

இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில் பத்திரிகையாளர்களாகத் திகழ்ந்த பலர் கதைகளை எழுதிப் பார்த்திருக்கின்றனர். அதற்குச் சிவராமனும் விதிவிலக்கு இல்லை. அவர் எழுதிய அரை அவுன்ஸ் பிராந்தி, (காந்தி 25-3-1934; மணிக்கொடி 30-11-1936) பரீட்சை (மணிக்கொடி 23-6-1935) ஆகிய சிறுகதைகள் பிரசுரமாகியிருக்கின்றன. 'அரை அவுன்ஸ் பிராந்தி' கதை தினமணி கதிரில் மீண்டும் மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது. அவருக்குக் கதை எழுதுவதில் ஈடுபாடு எப்படி ஏற்பட்டது என்பதற்கோ, அந்த ஈடுபாடு ஏன்

தொடரவில்லை என்பதற்கோ விளக்கங்களை அவர் எழுதிச் செல்லவில்லை.

நாட்டில் நடந்த பல்வேறு அரசியல் நிகழ்வுகள் அவரைச் சோர்வுக்குள்ளாக்கியது குறித்தும் பல நாள்களில் பத்திரிகைகளில் வரும் செய்திகள் ஊழல் பற்றியதாக இருப்பதால் 15 நிமிஷத்துக்கு மேல் பத்திரிகைப் படிப்பதில்லை என்றும் வருத்தத்துடன் குறிப்பிட்டிருக்கிறார் (தினமணி சுதந்திர பொன் விழா மலர் - 1997).

> "என் மனச்சோர்வினை பலரிடம் பரப்பிவிடக்கூடாது என்பதற்காக யாருடனும் அரசியல் பேசுவதில்லை என்பதால் 4 வேதங்கள், சைவத் தேவாரப் பதிகங்கள், திருவாசகம், வைணவ, நாலாயிரத் திவ்யப் பிரபந்தம், வால்மீகி ர்ராமாயணம், ஸ்ரீமத் பாகவதம், உபநிக்ஷத்துக்கள் தவிர வேறு எதையும் படிப்பதில்லை (சுவர்க்கம் கிட்டுவதற்காக அல்ல; வேதனை தெரியாமலிருப்பதற்காக!) படிப்பதில் தினசரி 8 மணி நேரம் செலவிடுகிறேன்"

என்று கூறியுள்ளார்.

நாட்டில் உள்ள அரசியல் நிகழ்வுகள் காரணமாக அவர், மனச்சோர்வடைந்து பணியிலிருந்து ஓய்வு பெறும் நிலைக்கு வந்து விட்டதாகக் கூறியுள்ளார்.

> " சாதாரணமாக தேசத்தில் எந்தப் பிரச்சினை ஏற்பட்டாலும் தீர்வு (**Solution**) என்ன என்று என்மனதில் ஒரு கருத்து உதயமாவதுண்டு. (அது ஏற்றுக் கொள்ளப்படுமா, படாதா என்பது வேறு விஷயம்; ஆனால், என் மனதுக்குத் திருப்தியான ஒரு கருத்து உதயமாவது வழக்கம்). குடியரசுத் தலைவருக்கும் பிரதமருக்கும் இடையே இருக்க வேண்டிய உறவு முறிவதாயிருந்த நிலையில் - என்புத்தி வேலை செய்யவில்லை. இதே மனோநிலை நீடித்ததனால் நான் 3 மாதங்களுக்குப் பின் கோயங்காவிடம் அனுமதிப்

பெற்று ஆசிரியர் பதவியிலிருந்து விலகினேன்" (தினமணி சுதந்திரப் பொன் விழா மலர் -1997 முதல் தொகுப்பு பக். 57).

"...தவறு செய்பவர்கள் பற்றி வெறுப்பு அடைவதற்குப் பதிலாக தவறு செய்பவர்கள் பற்றி ஆத்திரம் அடைவதற்குப் பதிலாக, "என்ன துணிச்சல் பார்த்தாயா" "எவ்வளவு சாமர்த்தியமாகத் தவறுகள் செய்தார்கள்" என்று வியப்படைந்து "கடத்தல் மன்னன்" (பாரிஸில்) "திருட்டு மன்னன்" என்று "மன்னர் பட்டம்" சூட்டும் ஆங்கில சொற்றொடர்களைக் காப்பியடிக்கும் நாடு இது. மேடை நடிப்பும் வாழ்க்கையும் ஒன்றே என்று மதித்துவிடக்கூடிய லாரி-ராலி-போஸ்டர் நாடு இது. "இரைந்த நாயக்கர் பெரிய நாயக்கர்" (எவர் உரக்கப் பேசுகிறாரோ அவர் பெரியவர்) - என்று மக்கள் நினைத்துவிடும் நிலைமை இருக்கிறது. நல்லவர்களா என்று ஆராயாமல், "ஜெயித்தவனுக்கு ஜே!" போட்டு "நானும் உன்னுடனே" என்று கோஷிப்போர் அதிகம் உள்ள நாடு இது. ஆதலால்தான் (எக்கச்சக்கமாக) சிறிது கொள்கை உணர்ச்சியோ பொது நிர்வாக அறிவோ இல்லாதவர்கள் ஒருவேளை பதவிக்கு வந்துவிட்டால், அதிகாரத்தை துர்விநியோகம் செய்வது சுலபமாகும்படி அரசியல் அமைப்பில் வழி திறந்து விடப்படலாகாதே என்று சில சமயங்களில் அச்சம் தோன்றுகிறது..."

(அரசியலமைப்பை மாற்றுவது பற்றி எனது மனப்பான்மை என்ன? - ஏ.என். சிவராமன் கட்டுரை - 14-10-1976). இப்படி அவரது தார்மீகக் கோபத்தை பல கட்டுரைகளில் காண முடியும்.

பத்திரிகை ஆசிரியர்களாக இருப்பவர்கள், வெளியில் செய்தி சேகரிக்கச் செல்வது என்பது அரிது. வெளிநாடுகளில் நடைபெற்ற மாநாடுகளில் செய்தி சேகரிக்கச் சென்றிருப்பதுடன் வெளிநாடுகளுக்குச் செல்லும் பத்திரிகையாளர்கள் குழுவிலும் பல முறை இடம் பெற்றுப் பல நாடுகளையும் அங்குள்ள

நிலைமைகளையும் நேரடியாகப் பார்த்தறியும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறார். பீகார் இயக்கம் குறித்த கட்டுரை தொடரை எழுதும் சமயத்தில் ஜெயப்பிரகாஷ் நாராயண் உடன் சுற்றுப் பயணம் செய்து நேரில் நிலைமைகளைப் பார்த்தவர். தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆர். எப்படி ஆட்சிக்கு வந்தார் என்பது குறித்து 1977-இல் ஆய்வு செய்தார். இதற்காக மதுரையிலும் மதுரையைச் சுற்றியுள்ள டூரிங் தியேட்டர்களிலும் தொடர்ந்து 25 எம்.ஜி.ஆர். படங்களைப் பார்த்தார். மக்கள் விரும்புவதை நன்றாக நடித்துக் காட்டுகிறார். அதைப்பார்த்து விட்டு மக்கள் ஓட்டுப் போட்டுள்ளார்கள். எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வந்ததற்கு இதுவும் முக்கிய காரணம் என்று முடிவுக்கு வந்தார். இதேபோல நாட்டு நடப்பைத் தெரிந்து கொள்ளப் பல்வேறு இடங்களுக்குப் பயணம் செய்து நிலவரங்களை நேரடியாகத் தெரிந்து கொள்வது அவரது வழக்கம். தேர்தல் காலங்களில் பொதுக் கூட்டங்களுக்கு மக்கள் கூட்டத்தில் ஒருவராகப் பங்கேற்று, தேர்தல் நிலவரங்களை நேரடியாகத் தெரிந்து கொண்டு அனுமானிப்பது வழக்கம். இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்த கட்டுரைகளை எழுதிய போது, ராமேஸ்வரம் உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்குச் சென்று இலங்கைத் தமிழ் அகதிகளையும் இலங்கைத் தமிழ் பிரமுகர்களையும் சந்தித்துப் பேசினார். படித்துத் தெரிந்து கொள்வது மட்டுமல்லாமல் பல பிரச்சினைகள் குறித்து நேரடியாகவும் அறிந்து கொள்ள விரும்புவார். அதுகுறித்து விவரம் தெரிந்தவர்களிடமும் கேட்டுத் தெரிந்து கொள்வது அவரது வழக்கம். பத்திரிகையாளராக இருப்பவர் தங்களது அறிவைத் தொடர்ந்து வளர்த்துக் கொள்ளப் படித்துக் கொண்டே இருக்க வேண்டும். அதற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டு சிவராமன்.

கட்டுரைகளை எழுதும்போது யாராவது தவறுகளைச் சுட்டிக்காட்டினால், அதை ஏற்றுத் தனது தவறை திருத்திக் கொள்ளவும் தயங்கமாட்டார். வாசகர்களுக்கு எந்த விஷயங்களைத் தெரிவிக்க வேண்டும் என்று விரும்புகிறாரோ அந்த விஷயங்கள் குறித்து ஆதியோடந்தமாகப் படித்து விட்டுத் தனக்கெனக் கருத்தை உருவாக்கிக் கொண்டு கட்டுரைகளை எழுதுவார். சிரத்தை எடுத்துக் கொண்டு விஷயங்களை விளக்க முயலுவார். மாற்றுக் கருத்துகளையும் சுட்டிக்காட்டி அதற்கான எதிர்வினையையும் கூற

முற்படுவார். வாசகர்களின் சிந்தனைத் தளம் விரிவடைய வேண்டும் என்ற நோக்கிலேயே அவரது கட்டுரைகள் இருக்கும். சிறிய எடுத்துக்காட்டுகள், சாதாரண மக்களுக்குப் புரியும் விளக்கங்கள் ஆகியவற்றின் ஊடே மெல்லிய நகைச்சுவை உணர்வும் ஆங்காங்கே வெளிப்படும். பன்மொழி அறிவு அவரது பத்திரியுலக வாழ்வை மேலும் செழுமைப் படுத்த உதவியது.

அவர் எழுதிய கட்டுரைகளில் சார்பு நிலையைச் சிலர் சுட்டிக்காட்டினாலும், வாசகர்களுக்குத் தகவல்களைத் தெரிவித்து அறிவுறுத்துதல் என்பது அவரது கட்டுரைகளின் அடிநாதமாக இருப்பதை மறுத்துவிட முடியாது. அவரது கட்டுரைகள் சில நேரங்களில் கடும் விமர்சனத்துக்கு ஆளாகியிருக்கின்றன. ஆனால், அவரது விமர்சனக் கட்டுரைகளை வக்காலத்து அல்லது தாக்கு என்ற இரு எல்லைகளுக்குள் சுருக்கிவிடமுடியாது. யார் ஏற்கிறார்களா இல்லையா என்று கருதாமல் தனது கருத்துகளைத் தயக்கமில்லாமல் எடுத்துரைத்த பாங்கு அவருடையது. எனவேதான், அவரது கருத்துகளை ஏற்காதவர்கள்கூட, அவரது கட்டுரைகளைத் தவிர்த்துவிட முடியாது. தனிப்பட்ட நபர்களைவிட, கருத்துரீதியாக விவாதிப்பதையே முக்கியமாகக் கருதியவர். மாற்றுக் கருத்து கொண்டவர்களின் நூல்களைப் படிக்க அவர் தயங்கமாட்டார். அவரது கட்டுரைகளுக்கு வாசகர்களிடம் எத்தகைய எதிர்வினை இருந்தது என்பதை வாசகர்களை 10 பைசா கார்டு மூலம் எழுதுங்கள் என்று கேட்டுத் தெரிந்து கொள்வார். பத்திரிகைகளுக்கு வியாபாரத்தையும் தாண்டிய ஒரு பொது - நோக்கு இருக்கிறது என்ற சமூகப் பொறுப்புணர்வுடன் செயல்பட்டுச் சிறந்த பத்திரிகையாளராகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டவர்.

பத்திரிகைகளில் ஆசிரியராக வருபவர்கள் நிர்வாகிகளாக மட்டுமே இயங்கி முடங்கிப் போவதுண்டு. பத்திரிகையின் சகல பரிமாணங்களிலும் சிவராமனுக்கு நல்ல அனுபவம் உண்டு. பத்திரிகையுலகில் அவரைப் போல எண்ணற்ற துறைகளில் ஆயிரக்கணக்கான கட்டுரைகளை அரை நூற்றாண்டுக் காலத்துக்கு எழுதிக் குவித்தவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். அவரது கட்டுரைகள் அனைத்தும் காலத்தின் தேவைக்கேற்ற வகையில் துறை வாரியாகத் தொகுத்தால் கூட நூற்றுக்கு மேல் தொகுப்புகளை

வெளியிடலாம். இவ்வளவு எழுதிய அவர், தன்னைப் பற்றிய அனுபவக் குறிப்புகளை அவ்வளவாக எழுதவில்லை என்றே கூற வேண்டும். இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில் அவருக்கு ஏற்பட்ட அனுபவங்களைத் தவிர, அவரது பத்திரிகையுலக அனுபவங்களை விரிவாகப் பதிவு செய்யவில்லை. அவரது பத்திரிகையுலக அனுபவங்களைப் பதிவு செய்திருந்தால் ஓர் அரை நூற்றாண்டுக் காலத் தமிழ்ப் பத்திரிகையுலக வரலாற்றுப் பதிவு கிடைத்திருக்கும். தனது வரலாற்றைப் பதிவு செய்வதில் அவருக்கு அவ்வளவு விருப்பமில்லை. பத்திரிகைகளில் எப்படி எழுத வேண்டும் என்று தினமணி ஆசிரியர் குழுவுக்கு அவர் காலத்தில் எழுதி வைத்த குறிப்புகளும் தற்போது பார்வைக்குக் கிடைக்கவில்லை. அவர் எழுதிய கட்டுரைகளில் ஆங்காங்கே எழுதியுள்ள விளக்கக் குறிப்புகள், சொல் விளக்கங்கள், புதிய வார்த்தைப் பயன்பாடுகள் இன்றைய பத்திரிகையாளர்களுக்கு மிகவும் பயனுள்ளவை. இவையெல்லாம் தொகுக்கப்பட வேண்டும்.

பத்திரிகையாளர்களுக்கு உரிய தார்மிக நெறிகளைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தவர். பத்திரிகைச் சுதந்திரத்தை மேலாகக் கருதியவர். பத்திரிகையாளர்கள் மக்களுக்குப் பொறுப்புடையவர்கள். பத்திரிகைகளுக்கு நம்பகத்தன்மை இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தவர். எனவே, அவர்கள் தங்களது கடமைகளை உணர்ந்து செயல்பட வேண்டும் என்று விரும்பியவர். வாசகர்களின் பொழுதுபோக்குக்குத் தீனி போடாமல் தீவிர செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தும் பத்திரிகையை வெற்றிகரமாக நடத்த முடியும் என்று நிருபித்தவர் அவர். தொலைக்காட்சிகளுடன் போட்டிபோடும் வகையில் பத்திரிகைகளில் தீவிர எழுத்துகளுக்கு இடம் குறைந்து கொண்டு வரும் சூழ்நிலையில், மக்களுக்கு விழிப்புணர்ச்சியூட்ட வேண்டும் என்ற உணர்வில் எழுதி மறைந்த சிவராமன் போன்ற பத்திரிகையாளர்கள் இன்றைக்கும் முக்கியத்துவத்துடன் நினைக்கப்பட வேண்டியவர்களாகின்றனர். "சிவராமனின் மறைவுடன் தமிழ் இதழியல் வரலாற்றில் ஒரு பெரும் சகாப்தமே நிறைவு பெற்று விட்டது." - சிட்டி

பின்னிணைப்பு

ஏ.என். சிவராமனின் சிறுகதை

நாலு அவுன்ஸ் பிராந்தி

"என்ன, எங்கே புறப்படறயேள்? நாளைக்குச் சிராத்தம் இல்லையா? இன்னைக்குக் கொஞ்சம் மடியாக இருக்க வேண்டாமா?" என்றாள் கோமதி.

"சிராத்தந்தான். துட்டில்லாமல் சிராத்தம் நடத்த முடிகிறதா? எனக்குச் சிராத்தத்திலே நம்பிக்கையே இல்லை. உனக்கு வியாதி கொஞ்சம் அதிகமானால் பிதிர் தோஷம் என்கிறாயே! மருந்து கொடுத்தாலும் அதனால் வியாதி தீருமென்று உனக்கு நம்பிக்கை ஏற்படுவதில்லை. யாரிடமாவது போய் இரண்டு ரூபாய் வாங்கிக் கொண்டு வருகிறேன்,'' என்று சொல்லி ஜார்ஜ் டவுனிலிருந்து திருவல்லிக்கேணிக்குப் புறப்பட்டேன்.

இறந்தவர்களை உத்தேசித்து நான் சிராத்தம் செய்த காலமும் ஒன்றுண்டு. இப்பொழுது சிராத்தம் செய்வது இறந்தவர்களுக்காக அல்ல; உயிருடன் இருக்கும் என் மனைவிக்காகத்தான். இந்த வார்த்தையை நான் மனக் கசப்புடன் சொல்வதாக நினைக்க வேண்டாம். இதே வார்த்தையை என் மனைவியிடமும் நான் சொல்வதுண்டு. அவள் தன்னுடைய படுக்கையிலிருந்து கொண்டே சிரிப்பாள். நான் இப்படிச் சொல்வதில் அவளுக்குத் திருப்திதான். அவளுடைய வியாதிக்குச் சிகிச்சையும் சுசுருஷையும் செய்வதில் நான் எவ்வளவு சந்தோஷம் அனுபவிக்கிறேன் என்பதை அவள் அறிவாள்.

அடுத்த நாள் சிராத்தம். கையில் இருப்பு அணா நான்கு. கடன் வாங்கும் வழக்கமும் இல்லை. முந்தின நாள் ஆபீசிலிருந்து வரும்போது முதலாளியிடம் கேட்டிருந்தால் கட்டாயம் ஐந்து ரூபாய்

கொடுத்திருப்பார். வீட்டுக்கு வரும்போது அவர் பக்கத்திலே போய் ஒரு நிமிஷம் திகைத்து நிற்கவும் செய்தேன்.

"என்ன வேண்டும்?" என்று அவரும் கேட்டார்.

"ஒன்றும் இல்லை!" என்று வந்துவிட்டேன். இல்லாவிட்டால் சிராத்தத்துக்கு முந்தின நாளும் என் மனைவியின் விருப்பப்படியே 'மடியாக' இருக்கலாம். சிநேகிதனைத் தேடிக் கடன் கேட்காமல் கழித்திருக்கலாம்.

"ஒன்றுமில்லை!" என்று நேற்றுக் கவுரவமாய்ச் சொன்னதால் தான் இன்று சிநேகிதனைத் தேடிப் புறப்பட வேண்டியதாயிற்று.

நண்பர் இருப்பது திருவல்லிக்கேணி பெல்ஸ் ரோட். நான் வீட்டிலிருந்து பிராட்வே போய், பஸ் ஏறி, நண்பன் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தேன். "வா அப்பா. என்ன வழி தெரிந்ததா? என்றான் நண்பன்.

"ஆமாம்," என்றேன். "சும்மாதான் பார்த்துவிட்டுப் போவோமே என்று வந்தேன்!" என்று நான் சொல்லவில்லை.

என் முகம் வழக்கம் போல் தெளிவாக இருக்கவில்லை யென்பதையும், மனத்தில் உற்சாகமில்லை யென்பதையும் அவன் தெரிந்து கொண்டான்.

"என்ன, பேசவே மாட்டாயா? என்ன சமாசாரமப்பா?" என்றான் நண்பன் கிட்டு.

"ஒன்றும் இல்லை!" என்ற பதில் நேற்று முதலாளியிடம் சொன்னது போதாதா! இவனிடமும் சொல்ல வேண்டுமா? அதனால் நான் பதில் ஒன்றுமே சொல்லவில்லை. நான் ஒரு மாதிரி ஆள் என்பது கிட்டுவுக்குத் தெரியும். என்ன செய்வான், பாவம்! "நல்ல வெயிலிலே வந்திருக்கிறாயே , கொஞ்சம் ஜலம் கொண்டு வரட்டுமா?" என்றான்.

"சரி, கொண்டுவா," என்றேன்.

அவன் வந்தவுடன் நான் என்ன சொல்ல வேண்டுமென்பதை மனத்தில் உருவேற்றிக் கொண்டிருந்தேன். ஒரு டம்ளர் தண்ணீருடன் திரும்பி வந்தான் கிட்டு.

"கிட்டு, இரண்டு ரூபாய் இருந்தால் கொடு. அதற்காகத்தான் வந்தேன்," என்று பள்ளிக்கூடத்துப் பையன் உபாத்தியாயருக்குப் பயந்து பாடம் ஒப்பிப்பது போல் சொன்னேன்.

அவன் மேஜையைத் திறந்தான். நான் எழுந்தேன். இரண்டு ரூபாயை எடுத்தான். கையை நீட்டினேன். "இரண்டு ரூபாய் போதுமா?"

"போதும்."

வாங்கிக் கொண்டேன்.

"சற்று நேரம் இருந்துவிட்டுப் போகலாமே!" என்றான்.

"இல்லை, போகிறேன்," என்றேன்.

"சரி, போ, நான் சாயங்காலம் அங்கே வருகிறேன்," என்று கிட்டு சொல்லும்போது, நான் அவனுடைய அறையை விட்டுக் கிளம்பி அரை நிமிஷமாகிவிட்டது.

கிட்டு வீட்டு வாசலில் பஸ் நிற்காது. சேப்பாக்க மூலைக்கு நடந்தேன். பஸ் வரவில்லை. வெயில் பொசுக்கியது. பக்கத்திலிருந்த வெற்றிலை பாக்குக் கடை நிழலில் போய் நின்றேன். கிட்டு கொண்டு வந்த தண்ணீரைச் சாப்பிடவில்லை. இப்பொழுது உண்மையிலேயே தாகம் அதிகமாயிற்று.

ஸார்! ஒரு சோடா சாப்பிடறீங்களா?" என்றான் கடைக்காரன். என் மன நிலைமையைக் கிட்டு அறிந்தது போலவே, அவன் என் உடல் நிலையை எளிதில் ஊகித்து விட்டான். பிறகு சோடா சாப்பிடாமல் இருக்க முடியுமா? "சரி, கொடு," என்றேன்.

"லைம் ஜூஸ் தரேன் ஸார் ஐஸ் போட்டு," என்றான் கடைக்காரன்.

"சரி, கொடு," என்று சொல்லி ஷர்ட்டுப் பாக்கெட்டில் கை போட்டேன்.

வீட்டிலிருந்து எடுத்து வந்தது நாலு அணா. பஸ்காரனுக்குக் கொடுத்தது ஒன்றரை அணா. கடைக்காரனுக்கு ஒன்றரையணாக் கொடுத்தால் கிட்டு தந்த இரண்டு ரூபாயும் ஓர் அணாவும் இருக்கும்.

மௌன்ட் ரோடு வரையில் நடந்து போய் அங்கிருந்து பஸ் ஏறினால் முழு ரூபாயை மாற்றாமல் வீடு போய்ச் சேரலாம். வரவு - செலவுத் திட்டம் சரியாய் விட்டது. லைம் ஜூஸ் - ஐஸ் சாப்பிட்டாய் விட்டது.

கால் வண்டியைத் தட்டி விட்டேன். மேற்கே பார்த்து, "பிராட்வே, பிராட்வே!" என்று கத்திக்கொண்டே ஒரு மோட்டார் போகிறது. கத்தினது கண்டக்டர்தான்; இருந்தாலும் கண்டக்டர் வேறு, கார் வேறு என்று எப்பொழுதுமே எனக்குத் தோன்றுவதில்லை. அந்தக் காரை நான் திரும்பிப் பார்க்கவும் இல்லை.

நடந்து கொண்டே போனேன். மற்றொரு கார். அது எனக்கு முன்னால் அரைப் பர்லாங் போய் நின்றது. யாரோ இரண்டு பேர் ஏறினார்கள். அவர்களைச் சரியான இடத்தில் உட்கார வைத்து விட்டுக் கண்டக்டர் மறுபடியும் காரில் ஏறுகிறான்.

"வறீங்களா, சாமீ?" என்று என்னைப் பார்த்துக் கத்தினான். லைம் ஜூஸ் ஏப்பத்தில் வேறு ஒன்றும் ஞாபகம் வரவில்லை. பஸ்ஸில் ஏறிவிட்டேன். இடுப்பில் வெளுத்த வேஷ்டி இருந்ததால் உட்காருவதற்குச் சற்று இடம் கிடைத்து. மவுன்ட் ரோட் போவதற்கு இன்னும் அரைப் பர்லாங் தூரம் இருக்கிறது. கண்டக்டர் டிக்கெட் ஸார் என்றால் முழு ரூபாயை மாற்ற வேண்டியதுதான். அவன் கேட்கவில்லை.

'ஹிந்து' ஆபீஸ் பக்கத்தில் பஸ் நின்றது. நாலு பேர் இறங்கினார்கள். ஒருவரும் ஏறவில்லை. பஸ் புறப்பட்டது. அரைப் பர்லாங் போய் நின்றது. இரண்டு மூன்று பேர் ஏறினார்கள்; எனக்கு எதிரே உட்கார்ந்தார்கள்.

முன் பெஞ்சில் உட்கார்ந்தபடியே கண்டக்டர் எங்கள் பக்கம் கையை நீட்டினான். எதிரில் இருந்தவர்கள் ஒவ்வொருவராக மெதுவாகப் பையில் கை போட்டு அணாக்களையும், ரூபாய்களையும் கொடுத்துச் சில்லறை வாங்குவதற்குள் இரண்டு மூன்று நிமிஷம் ஆகியிருக்கும். நானும் சட்டைப் பைக்குள் கையைப் போட்டு அதிலேயே கையை வைத்துக் கொண்டிருந்தேன். "ஓர் அணாவைக் கொடுத்துப் பார்க்கலாமா? நாம் மவுன்ட் ரோட்டுக்கு முந்தியே ஏறிவிட்டோமென்பது அவனுக்கு ஞாபகம் இருக்குமோ!

அப்படியானால் ஏமாற்றுகிறவன் என்று நம்மை நினைத்துவிட மாட்டானா? எதிரில் இருப்பவர்கள் என்ன நினைப்பார்கள்? கதர் வேஷ்டி கட்டிக் கொண்டு பரம காந்தி சீடன் போல முகத்தை வைத்துக் கொண்டிருக்கும் நான், ஏமாற்ற வழி பார்ப்பதாக அவர்கள் நினைக்க இடங் கொடுக்கலாமா? இவர்கள் யாராவது பின்னால் என்னைப் பார்த்தால் என்ன நினைப்பார்கள்? முழு ரூபாயைக் கொடுத்துவிடுவோமென்றாலோ வீடு போய்ச் சேரும்போது இரண்டு ரூபாய்க்கு அரையணாக் குறைவாக இருக்குமே. மறுபடியும் அரையணா எப்படிக் கடன் வாங்குவது?" என்றெல்லாம் என் மனத்தில் பிரச்னைகள் ஓடிக் கொண்டிருந்தன. ஆனால் முகத்தை மட்டும் ஏற்கெனவே காசு கொடுத்தவன் போல் அலஷியமாக வைத்துக் கொண்டேனோ என்னவோ தெரியவில்லை.

என்னிடம் பணம் வாங்காமலே கண்டக்டர் தன்னிடமுள்ள சில்லறையைக் கணக்குப் பார்க்க ஆரம்பித்து விட்டான். அடுத்த நிமிஷம் என்னிடம் பணம் கேட்பான் என்று எதிர் பார்த்தேன். "நான் மவுன்ட் ரோடில் ஏறினவர்களில் ஒருவன்தான் என்று அவன் நினைக்கக் கூடாதா!' என்று மனத்தில் ஓர் ஆசை. வண்டி ஸென்ட்ரல் ஸ்டேஷனில் போய் நின்றது. அநேகம் பேர் இறங்கினார்கள். புதிதாய்ச் சிலர் ஏறினார்கள். வண்டி புறப்பட்டது. "டிக்கெட்!" என்றான் கண்டக்டர்.

இப்பொழுது எனக்கு ஒரு விஷயம் நிச்சயமாகி விட்டது. கண்டக்டர் என்னைத் திரும்பித் திரும்பிப் பார்க்கிறான். என்னிடம் காசு வாங்கியாகி விட்டதா இல்லையா என்பது அவனுக்குச் சந்தேகம். கேட்பதற்குப் பயம். முழு ரூபாயை மாற்றத்தான் எனக்கு இஷ்டமில்லையே யொழிய ஓர் அணாக் கொடுப்பதற்கு நான் தயார்தான். அது மட்டுமல்ல. ஓர் அணாவை எப்படியாவது அவனிடம் கொடுத்து விடவேண்டும் என்று என் மனம் பறக்கிறது. இப்பொழுது எல்லோரும் அரையணா டிக்கெட்காரரர் தான். நான் மட்டும் ஓர் அணாவை எப்படி நீட்டுவது? ஓர் அணாவைக் கொடுத்தவுடன் அவனுக்கு மௌவுன்ட் ரோட் ஞாபகம் வந்து விட்டால் நான் அதற்கு முந்தியே ஏறினது ஞாபகம் வரும்; ஒன்றரை யணாக் கேட்பான். முழு ரூபாய் உடைந்து விடும். இந்த அதர்ம சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டு தவிக்கும் போதே பஸ் சைனா பஜாருக்கு வந்துவிட்டது.

"பச்சையப்பாஸ் இறங்கிறீங்களா?" என்கிறான் கண்டக்டர். தர்ம சங்கடந்தான் மிகவும் கஷ்டமென்று சிலர் நினைப்பார்கள். அதர்ம சங்கடமும் அதற்கு மேற்பட்டதுதான்.

நான் இறங்கவில்லை. எப்படியாவது ஓர் அணாவைப் பஸ்காரன் கையில் கொடுத்துவிட வேண்டுமே. இன்னும் ஒரு பர்லாங்கு போய் பஸ் மறுபடியும் நிற்கும். அதுதான் நான் இறங்கவேண்டிய இடம். கையில் ஓர் அணாவை எடுத்துத் தயாராய் வைத்துக் கொண்டேன். கொடுத்து விடவில்லை. வண்டியில் இருக்கும்போதே கொடுத்தால், ஒன்றரை அணா கேட்டு விட்டால் என்ன செய்வது! குடி முழுகிப் போய் விடாதா

அணாவை எடுத்துத் தயாராய் வைத்துக் கொண்டேன். வண்டி நின்றது. இறங்கினேன். பஸ் புறப்பட்டது. புறப்பட்டது என்று நிச்சமாய்த் தெரிந்து விட்டது. உடனே இரண்டடி ஓடி, "ஏ! கண்டக்டர், இந்தா அப்பா" என்று ஓர் அணாவைக் கொடுத்தேன். கார் ஓடிற்று.

"யோக்கியர்களும் இருக்கத்தான் செய்றாங்கப்பா!" என்று கண்டக்டர் டிரைவரிடம் சொன்னது என் காதில் பட்டது!

அவனுடைய சொல் என் நெஞ்சில் ஈட்டி போல் பாய்ந்தது. அவனுடைய அரையணாவைத் திருடினதோடு நின்றால் போதாதா? அவன் என்னை யோக்கியனென்று நம்பும்படியும் செய்தேனே! இந்தத் தேசத்தில் எட்டுக் கோடி மக்களைத் தெரிந்தோ தெரியாமலோ தீண்டாதவராக ஒதுக்கினதால்தான், பூகம்பம் வந்ததாக மகாத்மா காந்தி சொல்கிறார். இப்பொழுது, வேண்டுமென்று மனத்தில் சங்கற்பத்துடன் நான் செய்த காரியம் எத்தனை பூகம்பங்களை விளைவிக்கப் போகிறது என்றெல்லாம் என் நெஞ்சில் கேள்விகள் பிறந்தன. அங்கிருந்து வீட்டுக்கு வந்து சேருமளவும் நான் என்னவெல்லாம் யோசித்தேன் என்பதை நான் எழுதத் தயாராயில்லை.

வீடுபோய்ச்சேர்ந்தேன். "என்ன, ரூபாய் வாங்கிக் கொண்டு வந்தேளா?" என்றாள் கோமதி, தனது வியாதியுடன் சிரிப்பும் கலந்த குரலில். "ரூபாய்" என்ற சத்தம் என் காதில் விழுந்ததுதான் எனக்குத் தெரியும். "ஆமாம்", என்று இடி முழக்குவது போல் சொல்லிக்கொண்டு அந்த இரண்டு ரூபாயையும் அவளைப் பார்த்து எறிந்தேன்.

அது அவளது நெற்றி எலும்பில் கணீர் என்று விழுந்தது. ரத்தம் வரவில்லை. எலும்பு தெரிந்தது. "அம்மா பிராணன் போக மாட்டேன்கிறதே!" என்றாள்.

பூகம்பம் இதைவிடப் பயங்கரமான விஷயமா?

நான் ஒரு மிருகம்போல் அன்று நடந்து கொண்டேன்.

முடிவை மட்டும் சொல்கிறேன்.

மாலை ஐந்து மணிக்குக் கிட்டு வந்தான். நான் மாடியில் இருந்தேன். "என்னப்பா, உன் மனைவி-" என்றான்

"கிட்டு! என்னிடம் கேள்விகள் ஒன்றும் கேட்காதே. பிராந்தி இரண்டு அவுன்ஸ் சாப்பிட்டால் தூக்கம் வருமா? இல்லாவிட்டால், நாலு அவுன்ஸ் வாங்கிக்கொண்டு வா!" என்றேன்.

"உங்கள் காந்தி இப்படித்தான் செய்யச் சொன்னாரோ?" வியாதிக்காரியிடம் -" என்றான். அவன் என் வீட்டுக்குள் இருக்கும் போதே நான் வீட்டை விட்டு ஓடிவிட்டேன்.

தூக்கம் வருவதற்கு நாலு அவுன்ஸ் பிராந்தி போதாதென்பதை அன்றிரவு நான் தெரிந்து கொண்டேன்.

கோமதி என்னை மன்னித்து விட்டாள். பஸ் கண்டக்டரை என்றாவது ஒரு நாள் நான் பார்க்காமல் இருக்கப் போவதில்லை.

ஏ.என். சிவராமன் எழுதிய இச்சிறுகதை காந்தி இதழிலும் பின்னர் மணிக்கொடி இதழிலும் வெளியானது. இக்கதை தினமணி கதிரில் 1990-களில் மறுபிரசுரம் செய்யப்பட்டது. இவர் எழுதிய மற்றொரு சிறுகதை பரீட்சை, மணிக்கொடியில் வெளியானது. இதுதவிர வேறு சிறுகதைகளை அவர் எழுதியிருக்கிறாரா என்று தெரியவில்லை.

ஏ.என். சிவராமன் எழுதிய நூல்கள்

1. மகாண சுயாட்சி, நவயுகப் பிரசுரலாயம், 1937
2. சுதந்திர இந்திய அரசியல் நிர்ணயம், தினமணி காரியாலயம், 1946
3. பிற நாடுகளில் ஸ்தல ஸ்தாபனங்கள், குமரி மலர் காரியாலயம், 1948
4. நமது அரசியல் அமைப்பு - சுதந்திர இந்தியக் குடியரசின் அரசியல் அமைப்பு பற்றி விளக்கம், குமரி மலர் காரியாலாயம், 1949
5. ரூபாய் மதிப்பு வீழ்ந்ததேன்?, தினமணி வெளியீடு, 1966
6. தமிழகத்தின் உணவுப் பிரச்னையும் விவசாயத்தின் தேவைகளும், தினமணி வெளியீடு, 1967
7. வேட்பாளரை யார் பொறுக்குவது?, தினமணி வெளியீடு, 1967
8. இந்தியாவின் வறுமை பற்றி கணக்கன் ஆராய்ச்சி, தினமணி வெளியீடு, 1969
9. ரஷ்ய புரட்சி (1917-1934) 17 ஆண்டு அனுபவம் - வழிகாட்டியா? எச்சரிக்கையா?, தினமணி வெளியீடு, 1969
10. அப்போலோ கண்ட விண்வெளி விஞ்ஞானம், தினமணி வெளியீடு, 1970
11. பீஹார் இயக்கம், தினமணி வெளியீடு, 1975
12. சுதந்திரப் போராட்ட வரலாறு, முல்லைப் பதிப்பகம், 1998

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113
அண்மை வெளியீடுகள்

இலக்கிய இதழ்கள்	110.00
இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள் - தொகுதி 3	60.00
தமிழில் பிற துறைக் கோட்பாட்டாய்வுகள்	25.00
வ.உ.சி. ஒரு பன்முகப் பார்வை	25.00
இலக்கண நூல்களில் கருத்து வளர்ச்சி	35.00
தெ.பொ.மீனாட்சிசுந்தரனாரின் தமிழ்த் தொண்டும் மொழியல்பங்களிப்பும்	40.00
பண்டைத் தமிழக வரைவுகளும் குறியீடுகளும்	80.00
தமிழெனப்படுவது	115.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - இலக்கணம் & மொழியில்	105.00
வலங்கை மாலையும் சான்றோர் சமூகச் செப்பெடுகளும்	70.00
தொல்லியல் நோக்கில் சங்ககாலம்	45.00
உலகத் தமிழிலக்கிய வரலாறு (தொன்மை முதல் கி.பி. 500 வரை)	45.00
உலகத் தமிழிலக்கி வரலாறு (கி.பி. 501 - கி.பி. 900)	70.00
பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர்	35.00
திருமணம் செல்வக்கேசவராய முதலியார்	30.00
அருந்தமிழ் நூற்காவலர் அடிகளார்	55.00
சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணியமுதலியார்	40.00
மூதறிஞர் மு. இராகவையங்கார்	40.00
ம.பொ.சி.யின் பார்வையில் தமிழ்மொழி இலக்கியம் பண்பாடு	30.00
தணிகையமணி வ.சு. செங்கல்வராயப் பிள்ளை	50.00
அருந்தமிழ் அறிஞர் அ.ச.ஞா	50.00
ஆராய்ச்சிப் பேரறிஞர் தி.வை. சதாசிவ பண்டாரத்தார்	45.00
விவிலியத் தமிழ்	40.00
இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி - 1	80.00
இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி - 2	85.00
இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி - 3	95.00
திராவிட மொழி இலக்கியங்கள்	180.00
நாவல்கலையியல்	50.00
சங்கரநமச்சிவாயர்	60.00
பண்டைத் தமிழ் எழுத்துக்கள்	40.00
அறிவியல் தமிழ் அறிஞர் பெ. நா. அப்புசுவாமி	60.00
தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்	125.00
தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல்	25.00
தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு	50.00
நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும்	60.00
தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்	50.00
தமிழர் நாட்டு விளையாட்டுகள்	75.00
தமிழ்க் கடல் இராய. சொக்கலிங்கம்	30.00

552. ஏ.என். சிவராமனின் பத்திரிகை உலகம் 30.00